# பொருளாதார நூல்

முதலாம் புத்தகம்

160

முன்னம்

சென்னை கிறிஸ்தவகலாசாலை பேராசிரியராகவிருந்த

மதுரை அமெரிக்கன் கலாசாலை பேராசிரியர்

**ஜே. எஸ். பொன்னையா, எம். ஏ.,**

இயற்றியது.

சென்னை சர்வகலாசாலை இந்திய சரித்திரப் பேராசிரியர்

**க. அ. நீலகண்ட சாஸ்திரி, எம். ஏ.,**

அவர்களின் முன்னுரையுடன் கூடியது.

விலை ] 1932. [ ரூ. 1-0-0.

*First Edition.*

**1932.**

DEDICATED

TO THE MEMORY OF MY PARENTS

*All Rights Reserved*

*By the Author*

சென்னை சர்வகலாசாலை இந்திய சரித்திரப் பேராசிரியர்

## க. அ. நீலகண்ட சாஸ்திரிகள் எழுதிய

## முன்னுரை.

*அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்*
*கிவ்வுலக மில்லாகி யாங்கு*

என்று வள்ளுவனார் கூறுகின்றனர். இகவாழ்வின் சுகத்திற்குப் பொருள் இன்றியமையாததென்பது யாவருங் கண்டு தெளிந்த ஓர் உண்மை. பொருளென்றது கேவலம் பணம் மட்டும் அன்று. பயன் தரத்தக்கதென நாம் மதிக்கும் வஸ்துக்களனைத்தையும் இங்கே பொருளென்று குறிப்பிடுகிறோம். இப்பொருளை ஆக்கி, பகுத்து, அனுபவிக்கும் நெறிகளை ஆராய்ச்சி செய்வதே பொருளாதார நூல் (Economics). முதற்கருவி, உழைப்பு, கூலிமுதலியன, வட்டி, கொள்முதல், விலை, அரசிறை, சுங்கம், பிறநாட்டு வியாபாரம் முதலியவற்றையும், கைத்தொழில், வியாபாரம், ஆயவியயம் (finance) யென்பனவற்றின் பொது நியமங்களையும் விவரித்துக் கூறுதலையே பொருளாதார நூல் தனது நோக்கமாகக் கொண்டது. ஆகவே மக்களுடைய முன்னேற்றத்தையும் தேசங்களினுடைய முற்போக்கையும் உணர்ந்து கொள்ளுதற்கு இந்நூல் ஒரு சிறந்த கருவியாயுள்ளது.

பொருளாதாரம் பற்றிய சில முக்கியமான நியமங்கள் யாவரும் அவசியம் உணரவேண்டுவனவாயும் யாவரும் அறிந்து கொள்ளக் கூடியனவாயும் உள்ளன. இவற்றை

யொருமுறையிலே தொகுத்து நமது இளைஞர்களுக்குக் கற்பித்தல், கல்வியபிவிருத்தியிலும் நமது தேசமுன்னேற்றத்திலும் நோக்கமுடையவர்களனைவரும் மேற்கொள்ள வேண்டிய முக்கிய கடமைகளுள் ஒன்றாகும். இதற்குரிய நூல்களை இயற்றி வெளியிடுதல் காலத்தோடு ஒத்த இயை புடைய ஒரு செயலென்பது திண்ணம்.

தமிழில் பொருளாதாரநூல்கள் ஒரு சிலவே வெளிவந்துள்ளன; எனினும், இவ்வகை நூல் எழுதுதலிலுள்ள இடர்ப்பாடுகள் ஒருசிறிதும் குறைவுபட்டிருப்பனவாகத் தெரியவில்லை. இவ் விடர்ப்பாடுக ளனைத்தினும், இந்நூற் சார்பான ஆங்கிலச் சங்கேத மொழிகளைத் தமிழில் மொழி பெயர்த்தலில் உண்டாகும் இடர்ப்பாடுகளே மிக முக்கிய மானவை. பொருளாதாரநூலை ஆங்கிலத்திற் கற்றுணர்ந்த அறிஞர் பலர் தமிழைக் கற்றுணராத பெருங்குறையினாலே அந்நூற் கருத்துக்களை யாவரும் உணருமாறு தமிழில் வெளியிட மாட்டாதவர்களாய் இடருறுகின்றார்கள். இங்ஙனமாகப் பல இடர்ப்பாடுகள் உள்ளன.

இந்நூலெழுதிய திருவாளர் ஜே. எஸ். பொன்னையா மேற்சுட்டியன போன்ற இடர்ப்பாடுகளை நன்குணர்ந்தவர் அவற்றால் தமது நூல் பழுதுபடாவண்ணம் மிக முயன்றிருக்கின்றார். எளிதில் விளங்கும் நடையிலே நூலினை யெழுதிமுடித்திருக்கின்றனர். இவருடைய முயற்சி பெரிதும் பாராட்டத்தக்க தென்பது ஒருதலை.

சென்னை,
21—11—32. } **K. A. நீலகண்ட சாஸ்திரி.**

# நூலாசிரியரின் முகவுரை

இக்காலத்தில் ஒவ்வொரு தேசத்திலும் பொருள் வளர்ச்சியையே எவரும் முதன்மையாகக் கருதுகின்றனர். அரசியல் விவகாரங்களும் அதைச்சார்ந்தே நிகழ்கின்றன. இராஜ்ய நிபுணர்களும் பண்டிதர்களுமேயன்றிப் பொது ஜனங்களும் அவ்விஷயங்களையறிய அவாவுகின்றனர்.

நமது நாடு இப்போது ஐரோப்பிய நாடுகளுடன் ஐக்கியப்பட்டிருப்பதனால் மேனாட்டார் முறைகளைத்தழுவியே கைத்தொழிலிலும், விவசாயத்திலும், வியாபாரத்திலும் முன்னேற்றமடைய முயலும் நம் தேயத்தினர் பொருளாதார சம்பந்தமான உண்மைகளை விளக்கமுற அறியவேண்டுவது அவசியமன்றோ? இதுபற்றியே என்னால் இயன்றவரை இந்நூலை எழுதித் தமிழ் நாட்டிற்குதவ முன்வந்துள்ளேன்.

இஃது ஆரம்ப நூலே யாகும்; மூலக்கருத்துக்களையே (Fundamental Principles) விளக்கிக் காட்டுவது. ஒரு மொழியைக் கற்பதற்கு முதலில் எழுத்துக்களை யறிவது எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியமாகும் ஒரு சாஸ்திரத்தின் மூலக்கருத்துக்களைத் தெள்ளிதில் உணர்வது. ஆங்கில மொழியில் இச்சாஸ்திரத்தைக் கற்க முடியாதிருப்பவர்களும் மாணவர்களும் இந்நூலைக் கற்றுப் பயனுறுவார்களென்பது எமது துணிபு.

சென்னை பாடப்புத்தகக் கழக அங்கத்தினர்களும் (Text book Committee), சர்வகலாசாலை தமிழ்ப்பாட நிர்ணய சபையாரும், (Board of Studies in Tamil), தமிழ் நாட்டுக் கலாசாலைத் தலைமையாசிரியர்களும் இச்சிறு நூலைப் பாடப் புத்தகமாக அங்கீகரித்து ஆதரிப்பார்களாயின் அதுவே என்னை இன்னும் இத்தகைய பணிகளை ஆற்றுவதற்கு மிக்க ஊக்க மளித்ததாகும்.

அமெரிக்கன் கலாசாலை,
மதுரை,
12 நவம்பர், 1932.

ஜே. எஸ். பொன்னையா.

# ACKNOWLEDGMENTS.

தமிழ் மொழியின் மேலுள்ள அபிமானத்தினால் தமக்குக் கிடைத்த ஒழிந்த நேரங்களில் எனது கையெழுத்துப் பிரதியைப் பரிசோதித்து அன்புகூர்ந்துதவிய எனது உடன் ஆசிரியர்களான அமெரிக்கன் கலாசாலைத் தமிழ்த் தலைமைப் பேராசிரியர் உயர்திரு **ஆ. கார்மேகக் கோன்** அவர்களுக்கும், சென்னை கிறிஸ்தவ கலாசாலைத் தமிழ்த் தலைமைப் பேராசிரியர் உயர்திரு **எஸ். டி. சற்குணர், பி. ஏ.** அவர்களுக்கும் என்றுங் கடப்பாடுடையேன். இந்நூலை எழுத வாரம்பித்த காலந் தொடங்கி அது முற்றுப் பெறும் வரை விஷயத்தைப் பரிசீலனை செய்து தமது நுண்ணிய அறிவின் திறமையினால் பல திருத்தங்கள் செய்து தந்த எனது ஒருசாலை மாணவரும், ஆப்த நண்பரும், சென்னை உயர்தர நீதி மன்றத்து வழக்கறிஞருமான ஸ்ரீமாந். **ஜி. தியாகராஜன் எம். ஏ., பி. எல்.** அவர்களின் உதவி என்னால் எக்காலத்தும் மறக்கற்பாலதன்று. கையெழுத்துப் பிரதியைப் பார்வையிட்டு எனக்கு ஊக்கங் காட்டிய எனது ஆசிரியர்கள், நண்பர்கள் பலருக்கும் எனது வந்தனம் உரிமையாகிறது. இறுதியில் இந்நூலுக்குச் சிறப்புப்பாயிர மளித்துச் சிறப்பித்த ஸ்ரீ மீனாக்ஷி கலாசாலைத் தலைமைப் பேராசிரியராகவிருந்து தற்போது சென்னை பல்கலைக் கழகத்து இந்திய சரித்திரப் பேராசிரியராக விளங்கும் **ஸ்ரீலஸ்ரீ க. அ. நீலகண்ட சாஸ்திரிகள் எம். ஏ.** அவர்களுக்கும் எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

இப்புத்தகத்திலுள்ள மூன்று படவச்சுக்களை (Blocks) வேண்டும் போது கொடுத்துதவிய 'மதுரை மில்ஸ் கம்பெனி' யாருடைய மானேஜர், **ஹார்வி துரை** யவர்களுக்கும், நாணயப்படவச்சுக்களைத் தந்துதவிய மதுரை புத்தக வியாபாரம் **இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்** அவர்களுக்கும் என் நன்றியைச் செலுத்துகிறேன்.

# உள்ளுறை.

## முதலாம் பாகம்


| அத்தியாயம். | | பக்கம். |
|---|---|---|
| 1. | உழைப்பு .... .... | 1 |
| 2. | பொருள் .... .... | 7 |
| 3. | நிலம் .... .... | 13 |
| 4. | வேலையைப் பிரித்துச் செய்தல் .... | 19 |
| 5. | தொழிலின் அமைப்பு .... .... | 25 |
| 6. | பொருளாக்கத்திற்குரிய சாதனங்கள் .... | 34 |


## இரண்டாம் பாகம்


| | | |
|---|---|---|
| 7. | பொருள் மாற்றுதல் .... ... | 40 |
| 8. | பணம் .... .... | 45 |
| 9. | விலை .... .... | 53 |
| 10. | வியாபாரம் .... .... | 61 |


## மூன்றும் பாகம்


| | | |
|---|---|---|
| 11. | பொருளின் விபாகம் .... .... | 68 |
| 12. | வாரம் .... .... | 73 |
| 13. | வட்டி .... .... | 82 |
| 14. | கூலி .... .... | 90 |
| 15. | இலாபம் .... .... | 97 |
| 16. | அரசிறை .... .... | 105 |
| 17. | பொருளின் பயன் .... .... | 112 |

# முதலாம் அத்தியாயம்

## உழைப்பு

உங்கள் கிராமத்திற் பற்பல மனிதர் பற்பல விதமான தொழில்களை மேற்கொண்டு காலங் கழித்து வருவதைப் பார்த்திருக்கிறீர்கள். அவருட் பெரும்பாலார் நிலத்தை உழுது, பண்படுத்தி, உரமிட்டு, நவதானியங்



களையும், மற்றும் வேறு விளைபொருள்களையும் விளைவிக்கிறார்கள். வேறு சிலர் ஆடுமாடுகளை மேய்த்துப் பாலைக் கறந்து விற்றும், அதை மோர், வெண்ணெய், நெய் ஆக்கி, விற்றும் பிழைத்து வருகிறார்கள். தச்சன் உளி, வாள், இழைப்புளி முதலிய ஆயுதங்கள் கொண்டு, மரத்தைச் செப்பனிட்டு விவசாயிகளுக்கு வேண்டிய கலப்பை, மண்வெட்டி முதலிய கருவிகளையும், மற்றும் மனிதருக்கு வேண்டிய கட்

டில், நாற்காலி, பெட்டி முதலான சாமான்களையும் செய்து கொடுக்கிறான். ஆனால் தச்சன் செய்த பெட்டிக்கு வேண்டிய பூட்டுகளையும், ஆணி, அரிவாள் முதலிய கருவிகளையும் செய்வதோ கொல்லன் தொழில். இவ்வனைவோருக்கும் வேண்டிய உணவுப் பொருள்களை அறுசுவையுடன் சமைத்



துச் சாப்பிடுவதற்குக் கருவியாயுள்ள மண் பாண்டங்களைக் குயவனும், பித்தளை, தாம்பிரம், வெண்கலம் முதலான பாத்திரங்களைக் கன்னானும் செய்து கொடுக்கிறார்கள். எல்லோருக்கும் வேண்டிய ஆடைகளையும் புடவைகளையும் நெய்து தருவோர் கைக்கோளர், சேடர், பட்டுநூற்காரர் முதலானோர். இவ்வாறே மக்களுக்கு வேண்டிய மற்றையத் தொழில்களைச் செய்கிறவர்கள் வணிகர், வாணியர், கொற்றர், ஒட்டர், செம்மார், உப்பரவர் முதலானவர்களாம். பாருங்கள்! ஒரு சிற்றூரிலே எத்தனை திரளான தொழில்கள் நடக்கின்றன! ஒவ்வொரு வகுப்பினரும் மற்றொரு வகுப்பினருக்கு உபகாரமாகவே யிருந்து வருகின்றனர்;

எவரும் பிறருடைய உழைப்பின்றிப் பிழைக்க வியலாது. இவ்வுலகம் ஒரு பெரிய கூட்டுறவுச் சங்கமாக இயங்குகின்றதல்லவா?



## உழைப்பு பலதிறப்பட்டது

பெரிய கிராமங்களிலும், பட்டணங்களிலும் நடைபெறும் பற்பல விதமான தொழில்களையும் உழைப்பையும் விவரிக்க யாரால் இயலும்? எழுதப் புகுந்தால் இடமும் போதாது. விசித்திர விநோதமான வேலைகளைச் செய்யும் கல் தச்சரும், கம்மாளரும், தட்டாரும், கன்னரும் கணக்கிலடங்கா. பல மாடிகளடங்கிய ஆகாயத்தையளாவிய மாளிகைகளையும், ஆறுகளைக் கடக்கப் பாலங்களையுங் கட்டுவதில் உழைப்போர் பலர். பல விதமான தொழிற்சாலைகளில் ஆயிரம் பதினாயிரக் கணக்காக வேலையிலமர்ந்துள்ளார் ஒரு திரள். இங்ஙனமாகவே 'ரெயில்வே' ஸ்தாபனங்களிலும் துறைமுகங்களிலும் வர்த்தக சாலைகளிலும் வேலை செய்

வோர் எண்ணிறந்தவராவர். இத்திறத் தொழிலாளரெல்லாம் இரவென்றும், பகலென்றும், வெயிலென்றும், மழையென்றும் பாராமல் உடல் நலியப் பாடுபடுவதின் காரணமென்னவென்று நீங்கள் எப்பொழுதாவது விசாரித்தறிந்த துண்டா?

மேற்காட்டியபடி மெய் வருந்த உழைக்குஞ் சிலர் வேறொரு வகுப்பினரைக் கண்டு பொறாமையும் கோபமும் கொள்ளலாம். அழகிய மாளிகைகள் போன்ற கட்டிடங்களில் மின்சார சக்தியினால் விசிறிகள் காற்று வீசிக்கொண்டிருக்க, மெத்தைகளிட்ட ஆசனங்களி லமர்ந்து, ஒரு நாளைக்குச் சில மணி நேரம் மட்டுமே வேலை செய்து, மிகுந்த தொகையுள்ள சம்பளத்தைப் பெற்றுச் சம்பிரமமாய் வாழ்ந்து வரும் உத்தியோகஸ்தர்களும் அவர்கள் கையின்கீழ் வேலையி லமர்ந்துள்ள பல சிப்பந்திகளும் அதிகாரம் செலுத்துவதே யன்றி வேறு என்னதான் உழைக்கிறார்கள் என்று சிலர் கேட்கலாம். மேலும் தேசத்தின் வருமானத்தில் ஏறக்குறையப் பாதிக்குமேற் செலவிட்டு நாம் போஷித்து வரும் இராணுவப் படைகளும், போலீஸ் வீரர்களும் இயற்றும் உழைப்பும் என்ன வெனவும் பலர் வினவலாம்.

## சேவையும் மெய்யுழைப்பே

விவசாயிகள், கொல்லர், தச்சர் நூல் நூற்போர் முதலானோர் உழைப்பால் (labour) உணவுப் பொருள்களும் மற்றப் பொருள்களும் (goods) உண்டுபண்ணப்படுவது போல உத்தியோகஸ்தர்கள் உழைப்பால் யாதொரு பொருளும் உண்டுபண்ணப்படுவதில்லை யென்பது உண்மையே. ஆயினும், உற்று நோக்குங்கால், இன்னோரன்னோருடைய உழைப்பும் அவசியம் என்றே அறியப்படும். குடியான

வர்களுக்கும் மற்றத் தொழிலாளருக்கும் எவ்வித இடுக்கணும் ஏற்படாது, துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனஞ் செய்ய, இராணுவப் படைகளும், போலீஸ் வீரர்களும், உத்தியோகஸ்தர்களும் இல்லாவிடின் தேசத்தில் அமைதியும் சௌக்கியமும் எங்ஙனம் ஏற்படும்? அமைதியின்றேல் எத்தொழில் தான் நடைபெற வியலும்? எனவே அரசு புரிவார் உழைப்பும் மெய்யுழைப்பாதல் காண்க. அன்றியும் உபாத்தியாயர்கள், மருத்துவர்கள், நடிகர்கள், சங்கீத வித்துவான்கள் போன்ற பலருடைய உழைப்பும் பலவகைப் பட்ட "சேவை" யாக (Services) அமைவது பற்றி மெய்யுழைப்பாகவே (Productive Labour) கருதப்படும். ஆதலின் தமக்கும் பிறருக்கும் உபகாரமான எப்பணியிலேனும் சேவையிலேனும் ஈடு பட்டு உழைப்பார் யாவரும் மெய்யுழைப்பாளரே யாவர்.

## வீண் உழைப்பு

இவ்வுண்மையை உணராத அறிவிலிகள் எத்தனை பேர்! தமக்கடாதவைகளிலும் அனுவசியமான காரியங்களிலும் காலத்தையும் பொருளையும் செலவிட்டு வாணாளை வீணாளாக்குவா ரில்லையா? நாளைக்கிருப்பதை யார் கண்டார்?, இன்றைக் கிருப்பதை உண்டுடுப்போம்?! உழைப்பா, பிழைப்பா? வென்று விதண்டா வாதம் பேசி நாட் கழிப்பார் எத்தனை பேர்? கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும் முட்டைக்குள் இருக்கும் குஞ்சுக்கும் உணவளிப்பவன் நமக்கும் உணவளிப்பான்; மரத்தை வைத்தவன் நீர்ப்பாய்ச்சானா? எனப் பலவாறு பிதற்றும் நிர்விசாரிகள் எத்தனை பேர்! பெண்டு பிள்ளைகளைக் காப்பாற்றச் சோம்பி, காவியுடையேற்றுப் போலிச்சன்னியாச வேடம் பூண்டு, கோவில்களிலும்

மடங்களிலும் அன்னதானச் சத்திரங்களிலும், வயிறு வளர்ப்பதையே தருமமாகக் கொண்டலையும் ஆண்டிகளின் கூட்டம் மெச்சத் தக்கதோ? இவை யெல்லாவற்றிலுங் கேடாய் ஊராருடைமைக்குப் பேராசை கொண்டு, வீண் வழக்குத் தொடுத்தோ, திருடியோ, பிறர் பொருளை அபகரிப்பதிலேயே தங்கள் உழைப்பைச் செலுத்துவோர் எத்தனை பேர்! இன்னோரன்னோரெல்லாம் வறுமையை விரும்பி யழைத்து, நாட்டைக் கெடுக்கும் நாசகாலர்கள் ஆவர். இவர்கள் தமக்கேனும் பிறருக்கேனும் யாதொரு உபகாரமுமின்றிச் சோற்றுக்குச் செலவும், பூமிக்குப் பாரமுமாய் இருந்து வருகின்றனர்.

எல்லா ஜீவஜந்துக்களும் உழைக்கின்றனவல்லவா? எறும்பின் சுறுசுறுப்பையும், தூக்கணன் குருவியின் அரிய கூட்டையும் தேனீயின் விசித்திர அறைகளையும் பற்றி விரிவாகப் படித்தும், கேட்டும், கண்டு மிருப்பீர்கள். கேவலம் ஓரறிவு படைத்த ஜீவ ஜந்துக்கள் உழைப்பினால் அரும் பெரும் காரியங்களைச் செய்யுமாயின் பகுத்தறிவுடைய மனிதர் எத்துணைக் காரியங்களைச் செய்ய மாட்டுவர்? ஆழ் கடலைக் கடக்கும் நீராவிக் கப்பலும், ஆகாயத்திற் பறக்கும் விமானமும் மனிதன் அறிவின் உயர்ச்சிக்கும் உழைப்புக்கும் உதாரணமாக விளங்குகின்றன வல்லவா? உடலைப் பெற்றதின் பயன்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு, என்னுஞ் சிறந்த பொருள்களை அடைவதற்குச் சாதனமாக அமைந்துள்ள உழைப்பையே என்றும் மேற்கொள்ளுவோமாக.

"முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்". (குறள்)

### பயிற்சி

1. இப்பாடத்திற் குறிப்பிடாத ஐந்து தொழில்களின் பெயரையும் அவற்றைச் செய்வோரின் பெயரையும் எழுதுக.

2. நீங்கள் உபயோகிக்கும் ஏதாவது ஐந்து பொருள்களில் அடங்கியிருக்கும் உழைப்பை விவரிக்க.

3. உங்களுக்காக உழைப்பவர் யார் யார் ஆவர்?

4. பாடசாலைகளிற் கல்வி பயிலும் மாணவர்கள் உழைப்பு மெய்யுழைப்பாகுமா? (Productive labour) அதனால் யார் பயன டைகிறார்கள்?

5. எவ்வித உழைப்பு மெய்யுழைப்பாகும்? மெய்யுழைப்பல் லாததற்கு (வீணுழைப்பு) இப்பாடத்திற் குறிப்பிடாத வேறு சில உதாரணங்கள் தருக.

---

## இரண்டாம் அத்தியாயம்

## பொருள்

உலகத்தின் பலதிறப்பட்ட உழைப்பின் நோக்கமும் பயனும் யாவை: நம் மூதாதையாகிய ஒளவைப் பிராட் டியார்,

“ சேவித்தும், சென்றிரந்தும், தெண்ணீர்க் கடல்
கடந்தும்,
பாவித்தும், பாராண்டும், பாட்டிசைத்தும்—
போவிப்பம்
.......
நாழி யரிசிக்கே நாம்” என்று கூறிப் போந்தனர்.

என்னை? ஒருவரிடத்திற் பணி செய்வதும், பிச்சை புகுவதும், நெடுங் கடலைக் கடந்து பொருளீட்டுவதும், கவி பாடுவதும், அரசுபுரிவதும்—எல்லாம்—கேவலம் ஒருச்சாண் வயிற்றை நிரப்புவதற்குத்தானா? ஆம், அதற்காகவே பெரும்பாலார் அல்லும் பகலும் உழைக்கின்றனர். ஆயினும் எத்தனை பேர் உடல் நலியப் பாடுபட்டும் அத்துணைப் பயனும் அடைய வியலாதிருக்கின்றனர்!

## உடலைப்போற்றும் உழைப்பு

உடலைப் போஷிக்க உணவு வேண்டும்; உடலின் குளிரைப் போக்கி வேண்டிய அனலைக் கொடுக்கவும், அலங்காரஞ் செய்யவும், ஆடை அவசியம்; காற்றுக்கும், வெயிலுக்கும், குளிருக்கும், மழைக்கும் ஒதுங்கவும், தாம் சேமித்துவைக்கும் பொருள்களைப் பத்திரப்படுத்தவும் வீடும் வேண்டியதிருக்கிறது; ஓரிடத்திலிருந்து வேறோரிடத்திற்கு விரைவாகவும் சௌக்கியமாகவும் செல்வதற்கு வண்டிகளும், வாகனங்களும், 'மோட்டார்'களும், 'ரெயில்' வண்டிகளும், கப்பல்களும், ஆகாய விமானங்களும் அவசியம். இவ்வரிய பொருள்களைச் செய்யவேண்டுமானல் ஆயுதங்களையும் கருவிகளையும் இயந்திரங்களையும்உண்டாக்கவேண்டும். இங்ஙனமாக ஆராயுங்கால் மனிதர் இயற்றும் சாதாரணமான பலதிறப்பட்ட உழைப்பும் உடலைப் பேணுவதற்பொருட்டே யென்பது பெறப்படும்.

உலகத்தில் மனிதர் அடையும் எவ்விதப் பயனுக்கும் உடல் ஆதாரமாக அமைந்திருப்பதால் உடலைப் பேணுவதற்காக இயற்றும் உழைப்பு எல்லாவற்றிலும் தலைமை படைத்துள்ளது. பண்டைக் காலத்திலிருந்த அறிஞரில் பலர்

இருக்கவிடமும், உடுக்க ஆடையும், உண்ண உணவுங் கிடையா தலைந்தது எவ்வளவு வருந்தத்தக்கது! உலகம் போற்றும் ஔவைப் பிராட்டியார் கூழுக்குப் பாடி நாட் கழிப்பாராயினர். உடுப்பதற்கு உடையின்றிக் "கையது கொண்டு மெய்யது பொத்திக், காலது கொண்டு மேலே தழீஇப் பேழையுளடங்கும் பாம்பெனக்" கிடந்த தம் கோலத்தைத் தம் மனைவிக்கு நாரைகள் மூலம் அறிவித்த சத்திமுற்றப் புலவருடைய கதையையுங் கேட்டுள்ளோம். ஆங்கிலேயநாட்டிலும் இவ்வாறான பண்டைக்காலத்துக் கதைகள் பலவுள. அறிஞரும் பெரியாருமானவர் கதி இத்தனைத் தாயின் ஆயிரக்கணக்கான சாதாரண மக்களின் கதி எவ்வாறும்? இவ்வனைவருடைய பசிப்பிணியாகிய வறுமைப் பிணியை நீக்குவது நமது முதற் கடமை யல்லவா? நிற்க,

## சீரிய உழைப்பு

பகுத்தறிவுடைய மாந்தர் கேவலம் விலங்கினங்களைப் போல உடலைப் போற்றும் உழைப்பையே முடிவாகக் கருதுதல் தவறு. அறிவிற் பெரியா ரனைவரும் உலக முன்னேற்றத்திற்கே யுழைக்கின்றனர். எல்லாத் தேயத்தினராலும் கொண்டாடப்படும் ஸர் இரவிந்திரநாத் தாகூர் என்னும் வங்காளக் கவிவாணரும், சித்திர விற்பன்னராகிய கேரளநாட்டு ராஜா ரவி வர்மாவும், இயற்கைப் பொருட் சாஸ்திர ஆராய்ச்சியில் நூதனமான பலவிஷயங்களைக் கண்டு பிடித்துப் பல விருதுகளும், பட்டங்களும் பெற்றுத் திகழும் பண்டித சிகாமணிகளான ஸர் ஜே. சி. போஸ், ஸர் சி. வி. இராமன், ஸர் பி. சி. இரே என்னும் பெருமான்களும், இன்னும் பல துறைகளிலும் நாட்டுக்கு நலன் விளைக்க உழைக்கும் பலரும், தத்தம் முயற்சியில் ஈடுபட்டு நிற்பது உடலைப் போற்றுவதற்கு அன்றென்று சொல்லவும் வேண்டுமோ?

## பொருள் ஆக்குதல்

இவ்வுதாரணங்களினாலே உழைப்பின் நோக்கமும் பயனும் எவையென்று நீங்கள் அறிகிறீர்கள்; பொதுப் படச் சொல்லில் உழைப்பின் பயன் "பொருள் ஆக்குதல்" (Production) ஆம். இவ்விடத்தில் பொருள் என்பது விரிந்த அர்த்தத்தைக் கொடுக்கும்; இப்பதமானது இப்புத்தகத்தில் உடை, உணவு, வீடு, "ரெயில்" வண்டிகள் போன்ற பல செல்வப்பொருள்களை (material goods) மட்டும் குறிக்காது, அரசு புரிதல், பாடங் கற்பித்தல் போன்ற சேவையாலமைந்த பொருள்களையும் (immaterial goods) குறிக்கும். கல்வியறிவைப் பெருஞ் செல்வமென்று நாம் கருதுவதின் கருத்தும் அதுதான்; ஏனெனில், அவ்வறிவு செல்வப் பொருளை அடைவதற்குச் சார்பாதல் கூடும். இக்காரணம் பற்றியே அரசு புரிவார், மருத்துவர், வழக்கறிஞர் சங்கீத வித்துவான்கள் முதலானோருடைய உழைப்பையும் மெய்யுழைப்பென்று முற் கூறினோம்.

## மெய்ப்பொருள்களும் வீண்பொருள்களும்

நாம் இயற்றும் பலவகை உழைப்பாலும் சேவையாலும் உலக வாழ்க்கைக்குச் சார்பாக அமையும் யாவும் "பொருள்" (wealth) என்னப்படும். பொருளின் முக்கிய அம்சங்கள் பின்வருவன:—அதில் உழைப்பு அடங்கியிருக்கவேண்டும்; அது பயனுடையதாயிருக்கவேண்டும்; விலையிடப்படத்தக்கதாயிருக்கவேண்டும்; பிறிதொருவருக்கு மாற்றியும் பகிர்ந்தும் கொடுக்கக்கூடியதாயுமிருக்கவேண்டும். உணவுப் பொருள்கள், ஆடை, அணிகலன்கள், வீடு முதலியன தகுந்த உதாரணங்கள் ஆம்.

ஆயினும் வெளுத்ததெல்லாம் பாலாகாதது போலப் பொருளெனக் கருதப்படுவதெல்லாம் "மெய்ப் பொருள்" (Positive goods) ஆகா. கள், சாராயம், 'விஸ்கி' 'பிராந்தி' முதலான இலாகிரி வஸ்துக்களும், கடந்த ஐரோப்பிய யுத்தத்தில் மனுஷரைக் கொல்ல உபயோகிக்கப்பட்ட விஷக் காற்றும், வெடிக்குண்டுகளும் பொருளின் அம்சங்கள் அனைத்தும் அடங்கியிருந்தும் அவைகள் அவ்வளவு சிறந்த மெய்ப் பொருள்கள் எனக் கருதப்படா. ஏனெனில் உடலுக்கு வேண்டிய உணவுப்பொருள்கள் முதலாய்க் கிடைக்காது ஒருபுறம் பலரும் பட்டினிகிடக்க, இப்படிப்பட்ட வீண் பொருள்களைச் (negative goods) சேர்ப்பதில் மனிதர் தங்கள் உழைப்பைச் செலவிடுவது எவ்வளவு விருதா!

## இயற்கைப் பொருள்கள்

பொருள், உழைப்பாலாவதும் பயன் அளிப்பதும், விலையிடப் படத்தக்கதும், பிறருக்கு மாற்றப்படக்கூடியதும் ஆக இருக்கவேண்டுமென்று இதுகாறும் கூறியவற்றால் அறிந்தோம். ஆயினும் இவ்வுலகத்தைச் சற்று உற்று நோக்குங்கால் எத்தனையோ பொருள்கள் மக்கள் உழைப்பின்றி இயற்கைச் சிருஷ்டியில் தாமாகவே அமைந்து கிடக்கக் காண்கின்றோம். உழைப்பினால் ஒருபிடி மண் உண்டாக்க இயலுமா? அன்றி, ஒரு பெரு மழையைப் பெய்யச் செய்ய முடியுமா? உயிர் வாழ்ந்திருப்பதற்கு இன்றியமையாத காற்றும் நமது உழைப்பால் ஆனதா? அங்ஙனமே ஆறு, கடல், மலைகளும், அவைகளில் வாழ்வனவும், மனிதர் உண்டுபண்ணினவைகளா? ஆகா, என்ன மாட்சி! எத்தனை திரளான இயற்கைப் பொருள்கள் நமக்கு இலவசமாகக் கொடுக்கப் பட்டிருக்கின்றன! இவையாவும் பொருள்களே;

ஆனால் அவை மனிதர் உழைப்பால் ஆகாமை பற்றி அவற்றுட் சிலவற்றிற்கு யாதொரு விலைமதிப்பும் கிடையாது. நாம் சுவாசிக்கும் காற்று இன்றியமையாதது; மிகவும் பயனுடையது; ஆயினும் ஒருவரும் அதை விற்பதும் வாங்குவது மில்லை. பொருளின் அம்சங்கள் அனைத்தும் அதில் இல்லை. இவ்விதமான இயற்கைப் பொருள்களெல்லாம் இலவசப் பொருள்கள் (free goods) என்றழைக்கப்படும்.

ஆனால் மனிதர் உண்டு பண்ணும் அரிய பெரிய செயற்கைப் பொருள்கள் எல்லாம் இறைவனருளிய இயற்கைப் பொருள்களைச் சார்ந்துதான் செய்யப்படக் கூடும். கொல்லன் செய்யும் கருவிகளும், தட்டான் செய்யும் நகைகளும், ஆகாயத்திற் பறக்கும் விமானமும் பூமிக்குள்ளிருந்து வெட்டி யெடுக்கப்பட்ட உலோகங்கள் தானே? உணவுப் பொருள்கள் எல்லாம் மண்ணிலிருந்தல்லவா உண்டாகின்றன? 'மைடாஸ்' என்னும் கிரேக்க அரசன் தொட்டதெல்லாம் பொன்னாகவேண்டும் என்று கேட்டுப்பெற்றவரம் போல எல்லாம் பொன்னாகி விட்டால் யாணிடருக்கு இவ்வுலகத்தில் வாழ்க்கை யேது? ஆம். கடவுளின் சிருஷ்டியாலேற்பட்ட இயற்கைப் பொருள்களை விருத்திசெய்வதும், நமக்கு உபயோகமான பொருள்களாக அவற்றை மாற்றுவதுமே உழைப்பின் ஆரம்பமும் முடிவுமாகும்.

"அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்" (குறள்).

## பயிற்சி

1. நீங்கள் காணும் ஐந்து அரிய இயற்கைப் பொருள்களின் பெயரையும் அவைகளின் உபயோகங்களையுங் குறிப்பிடுக.

2. மனிதர் இயற்றிய பத்து அரிய செயற்கைப் பொருள்களையும் அவைகளுக்கு மூலகாரணமான இயற்கைப் பொருள்களின் பெயரையுங் குறிப்பிடுக.

3. சில இயற்கைப் பொருள்கள் (தங்கம், வைரம், போல்வன) ஏன் மிகுந்த விலைபடைத்துள்ளன? சில அவ்வாறில்லாதிருப்பதேன்? (தண்ணீர், காற்று.)

4. "கல்வி யென்னும் உள்ளத்தே பொருளிருக்க உலகெல்லாம் பொருள் தேடி யுழல்வ தேனோ?" என்ற கூற்றின் உட் கருத்தென்னை?

5. கல்விப் பொருள் எப்போது பொருளெனக் கருதப்படும்?; எப்போது பொருளாக மாட்டாது? இது போன்ற ("செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்") வேறு சில உதாரணங்கள் தருக.

---

# மூன்றும் அத்தியாயம்

## நிலம்

இவ்வுலகின்கண்ணுள்ள இயற்கைப் பொருள்கள் அனைத்தையும் (தரை, கடல், மலை, உலோகங்கள் போல்வன) நிலம் (Land) என்னும் பொதுப் பெயரால் இப்புத்தகத்தில் வழங்குவோம். அவை யெல்லாவற்றிலும் தலையாக விளங்குவது பூமியின் மேற்பரப்பாகிய தரையாகிய நிலந்தான் (Surface of the earth). சகல உயிர்களுக்கும் ஆதாரமாகவும் உபகாரமாகவும் அது வழங்கி வருவதனாற்றான் அதைப் பூமி தேவி யென்று பூசித்து வருகின்றனர். இப்பூகோளத்தின் மேற்பரப்பு 1970 இலக்ஷம் சதுரமைல்; ஆனால் அதில் ஏறக்குறைய நான்கிலொரு பாகந்தான்

தண்ணீரற்ற வெறுந்தரை. இந்நான்கி லொன்றிலும் காடு களும், மேடுகளும், குன்றுகளும், மலைகளும் சில பாகத்தை அடக்கிக் கொள்ளுகின்றன. வேறொரு பாகத்தில் குடியிருப்புக்கும், தொழிற்சாலைகளுக்கும், சுரங்கங்களுக்கும் இடம் வேண்டியதிருக்கிறது. எஞ்சிய பாகத்திற்றான் விவசாயம் நடத்தி உலகத்தைப் போஷிக்கவேண்டும்! இயற்கைச் சிருஷ்டியில் எதுவும் அனுவசியமாக அளவுக்கு மிஞ்சியதாகவில்லை; முயற்சியினாலும் உழைப்பினாலுமே மக்கள் உய்வடைய வேண்டுமென்பதற்கே இறைவன் இயற்கைகளை இவ்வாறு படைத்திருக்கின்றான் என்பது இதனால் அறியப்படுகின்றதன்றோ?

## நிலவுரிமை

உயிருக்காதாரமான உணவுப்பொருள்களை விளைவிப்பதற்கு இப்போதுள்ள நிலம் போதுமானதென்பது அறிஞர் துணிபு. ஆனால் நிலத்தை எல்லாருக்கும் சரி சமமாகப் பங்கிடுவது நலமா?; இப்பொழுதிருப்பது போலச் சிலர் அதிகமாகவும் சிலர் கொஞ்சமாகவும் வைத்திருக்கவிடுவது நலமா?; அல்லது அதைவிடப் பண்படும் நிலம் முழுவதையும் அரசாங்கத்தின் அதீனத்திற்குட்படுத்திவிடுவது நலமா? இவை மிகவும் கடினமான கேள்விகள்: இவைகளுக்கு இவ்விடத்தில் விரித்து விடை யளித்தல் இயலாது. இரண்டாம் புத்தகத்தில் யாவும் தெளிவுற விளக்கப்படும். ஆயினும் நமது வறுமைக்குக் காரணம் இடம் போதாமையினாலன்று; பயிர்த் தொழில் ஏற்றவாறு நடைபெறாதது பற்றியே யென்பது பின்வரும் காரணங்களினால் விளங்கும்.

## விவசாயத் தொழில்

விவசாயம் மிகவும் கடினமான தொழில். நீர்வளம்

நிலவளந் தெரிந்து, காடு மேடு திருத்தி, உழுது, பண் படுத்தி, உரமிட்டுப் பலவகைப் பயிர்களையும் பருவத்தே பயி ரேற்றி, நீரிறைத்துக், காவல் காத்து, இளங்குழவியை நா ளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்க்கும் தாய் போலச் சிரமப்பட்டுழைப்பதல்லவோ விவசாயம்? நிலத்தைப் பண்படுத்தி விதையை விதைத்த பின்னர் வானம் வழங்காவிடின் பட்டபாடெல்லாம் அவலமாகும். மழை பெய்யினும் ஏற்ற தருணத்திற் பெய்யவேண்டும்; ஏற்ற தருணத்திற் பெய்யினும் வேண்டிய அளவுதான் பெய்யவேண்டும்: மழை மிகினுங் குறையினுங் கெடுதியே; ஆனால் அதிகமான மழை, மழைக்குறைவினால் ஏற்படும் நஷ்டத்தைவிட அதிக நஷ்டத்தை உண்டுபண்ணிவிடும். காற்றையும், மழையையும் பருவகாலங்களையும் விவசாயிகள் தம்வசமாக்கி ஆளுதல் என்பது இயலுமா? மேலும் பருவ காலத்திற் செய்த பயிர் ஏற்ற காலத்திற் பெய்த மழையி னாற் செழித்து வளர்ந்து, பலன் கொடுக்கும் சமயம் பூச்சி புழுக்களால் அழிக்கப்படின் இலவு காத்த கிளிபோலல்ல வோ விவசாயி ஏமாற வேண்டும்? வேளாண்மையின் இயல்பு இவ்வாறாகிவிடின், "மேழிச் செல்வம் கோழை படாது"; "தொழுதூண் சுவையினும் உழுதூண் இனிது" எனப் பண்டைக் காலத்தவர் கூறிய கூற்றுப் பொய்யாகி விடும்.

## விவசாயிகளின் நிலைமை

மேலும் எல்லாத் தேசங்களிலும் விவசாயிகள் பெரு ங்குடும்பிகள்; நிரம்பக் கல்விப் பயிற்சியில்லாதார்; துணிபும் தீவிரமுயற்சியும் முற்போக்கான நோக்கமும் அற்றவர். அதுவுமன்றி 'அமெரிக்கா,' 'கானடா,' 'ஆஸ்திரேலியா

என்னும் புதிய தேசங்களைத் தவிர மற்றுத் தேசங்களிலுள்ள குடியானவர்கள் எல்லாம் ஏழைச் சமுசாரிகள்; அவரவர்மட்டுக்கு வைத்துள்ள நிலமோ மிகக் குறைவு. இந்தியாவின் விவசாயிகளுக்குச் சராசரி தலைக்கு ஒன்றே கால் ஏக்கர் நிலந்தான் விழுகிறது! இந்நிலமும் ஒரே இடத்தில் ஒரு தொகுதியாயிராமல், பெரும்பாலும் துண்டு துணுக்காகப் பலவிடங்களிலும் சிதறிக் கிடக்கிறது. "காக்கையின் கழுத்திற் பனங்காயைக் கட்டினாற் போல," இவ்வேழைக் குடியானவர்களுக்குக் கடன் பளுவும் போதிய அளவு உள்ளது. இவை போன்ற பல குறைகள் நமது தேசத்தின் விவசாய முன்னேற்றத்திற்குத் தடையாயிருந்து வருகின்றன.

பண்டைக் காலத்து விவசாயிகள் குடும்ப சம்ரக்ஷணைக்கான உணவுப் பொருள்களை மட்டுமே முக்கியமாக விளைவித்துக்கொண்டு, மன அமைதியும், திருப்தியும் அடைந்து வாழ்ந்து வந்தனர். ஆனால் இக்காலத்தினருக்கோ அவ்வித வாழ்க்கைக்கு இடமில்லை. நாகரிகமான உடை நடை பாவனைகளுக்குரிய பல பொருள்களை அவர்கள் அயல் நாட்டிலிருந்து வாங்குகிறார்கள்; அதற்குரிய பணத்தை அயல் நாட்டார் விரும்பும் கைத்தொழிலுக் கடிப்படையான மூலப் பொருள்களை (பருத்தி, எண்ணெய் வித்துக்கள், சணல் போல்வன) விளைவித்துப் பெற்றுக் கொள்ளுகின்றனர். அப்படிப்பட்ட பொருள்களை விளைவிக்க நல்ல விதை, கொழுமையான புதிய உரங்கள், மூலதனம் முதலியன வேண்டும். இவ்வித அநுகூலங்களை யெல்லாஞ் சிறிய குடியானவர்களால் தாங்களே அமைத்துக் கொள்ளமுடியாது; அரசாங்கத்தினரின் உதவி நிரம்பவும் வேண்டும்.

## புதிய விவசாய முறைகள்

ஆதலாற்றான், பணச் சகாயத்திற்காகப் 'பாங்கி'களும், கூட்டுறவுச் சங்கங்களும் (Co-operative societies) ஏற்பட்டுள்ளன. நீர்ப்பாய்ச்சலுக்காக ஏரிகள், குளங்கள், கால்வாய்கள், அணைக்கட்டுக்கள், நீர்க்கட்டு ஸ்தாபனங்கள் ஏராளமான பணச் செலவில் உண்டுபண்ணப்படுகின்றன. நல்ல விதை, கொழுமையான உரம், புதிய கலப்பைகள், தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள் (Pumps) முதலியனவும் உபயோகப்படுத்தப்படுகின்றன. அதற்கென்றே விவசாய இலாக்காக்களையும் மாதிரிப் பண்ணைகளையும் உத்தியோகஸ்தர்களையும் அரசாங்கத்தினர் ஆங்காங்கு நியமித்திருக்கின்றனர். சாஸ்திர பூர்வமான கல்வியறிவைப் பரவச் செய்வதற்காக விவசாயக் கல்விச்சாலைகளும் நிறுவப்பட்டுள்ளன.

எனினும், "தன் கையே தனக்குதவி" என்னும் பழமொழிக்கேற்ப, அரசாங்கம் காட்டத்தான் செய்யுமேயொழிய ஊட்டுமா? நீர்ப்பாசன வசதிகள் ஏற்படுத்திவிட்டதனால் மாத்திரம் விவசாயிகள் வீட்டில் நெல் வந்துவிடாது. நல்ல விதையைத் தூவிவிட்டதனால் மட்டும் நிறைமேனி கண்டுவிடாது. எனவே எல்லாவித ஏதுக்கள் இருந்தாலும் முடிவில் விவசாயிகளின் அரும் பிரயாசையும் பெருமுயற்சியும் அவசியம் வேண்டும். அன்னவர் சகல துறையிலும் முன்னேற்ற மடைந்தாற்றான் விவசாயம் விருத்தியடையும்.

வரப்புயர நீருயரும்,
நீருயர நெல்லுயரும்,
நெல்லுயரக் குடியுயரும்,
குடியுயரக் கோனுயரும்.

## பயிற்சி

1. உங்கள் கிராமத்தில் விளைவிக்கப்படும் விவசாயப் பொருள்களையும் அவைகளின் உபயோகங்களையுங் குறிக்க.

2. எவரேனும் ஐந்து குடியானவர்களின் வாழ்க்கையைப் பின்வரும் தலைப்புகளின்கீழ் விவரிக்க. (1) நிலத்தின் விபரமும் விஸ்தீரணமும். (2) விளைபொருள்களின் அளவும் விலையும். (3) இதர வரும்படிகள். (4) குடும்பப் போஷணைக்காகச் செலவாகும் தொகை; விவசாயத்திற்குச் செலவாவதுட்பட (விதை, ஆடுமாடுகள் தீனி முதலியன). (5) ஐந்து வருஷச் சராசரி இலாபம். (6) கடன் விபரம்; தொகை, காரணம், வட்டி விகிதம்.

3. உங்கள் கிராமத்தாருக்கு (1) நீர்ப் பாய்ச்சல் (2) உரம் (3) பணச்சகாயம் (4) கல்வி முதலான விஷயங்களில் இருக்கும் குறைகள் யாவை? அவைகளை எவ்வகையில் நிவர்த்தி செய்யலாம்?

4. உங்கள் கிராமத்தில் "விவசாயிகள் கூட்டுறவுச் சங்கம்" (Co-operative society) ஏற்படுத்தப்பட்டிருக்கிறதா? அதில் நடைபெறும் வேலையைப் பற்றிச் சுருக்கமாக எழுதுக.

5. உங்கள் பாடசாலைக்குச் சமீபமாக வுள்ள சர்க்கார் விவசாயப் பண்ணைக்குச் (Government Agricultural farm) சென்று அங்கு நடக்கும் வேலையைக் கவனித்து ஒரு வியாசம் எழுதவும். உங்கள் கிராம விவசாயிகளுடைய முறைக்கும் அங்கு கையாடப்படும் முறைகளுக்கும் உள்ள வித்தியாசத்தைத் தெளிவாகக் குறிப்பிடவும்.

# நான்காம் அத்தியாயம்

## வேலையைப் பிரித்துச் செய்தல்

தினசரி வாழ்க்கையில் நமக்கு வேண்டியன உணவுப் பொருள்கள் மட்டுமன்று; உடை, அணிகலன்கள், புத்தகங்கள் முதலான பலவும் தேவை. இவையாவுங் கைத்தொழில்களால் (Manufactures) ஆக்கப்படுகின்றன. விவசாயத்தைப் போலக் கைத்தொழில்கள் சிறந்தவையல்ல; அவற்றில் உழைப்பாரும் சிலரே. எனினும் தற்காலத்தில் கைத்தொழில்கள் நடைபெறும் பெருமையும் சிறப்பும் வியக்கத்தக்கன.

விவசாயத்திற்கும் கைத்தொழிலுக்கும் முக்கியமான ஒரு வித்தியாசம் உண்டு. விவசாயிகள் தாங்களியற்றும் தொழில்களாகிய உழுதல், விதை விதைத்தல், நீரிறைத்தல், போரடித்தல் முதலான பலதிறப்பட்ட வேலைகளையும் தாங்களே பல்வேறு காலங்களிற் செய்து வருகின்றனர். ஆனால் பெரிய நகரங்களிலுள்ள தொழிற்சாலைகளில் ஒவ்வொரு வேலையையும் அணுப்பிரமாணமான பல நுண்ணிய பாகங்களாகப் பிரித்துத் தனித்தனியான ஒவ்வொரு பாகத்தையும் ஏராளமான பேர்கள் செய்து வருகின்றனர். இவ்விசித்திரம் பின் வரும் உதாரணங்களினால் விளங்கும்.

### கைத்தொழிலின் விசித்திரம்

நீங்கள் உபயோகிக்கும் ஊசி எவ்வளவு அற்பமான பொருள்; எவ்வளவு குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது; அதை நீங்களே செய்வதானால் எவ்வளவு காலமும், செல

வும் பிடிக்கும். ஆனால் ஒரு பெரிய தொழிற்சாலையில் அது செய்யப்படும் விதம் மிகவும் அதிசயிக்கத்தக்கது. ஒரு ஊசியைச் செய்து முடிக்கப் பதினெட்டு விதமான வெவ்வேறு முறைகளும் தொழிலாளரும் உண்டுமாம். பெரிய எஃகுப் பாளங்களைச் சிறிது சிறிதாகத் துண்டிப்பார் சிலர்; பின்னர் வேறு சிலர் அத்துண்டுகளைச் சிறிய கம்பிகளாக ஆக்குவர்; வேறு சிலர் அக்கம்பிகளை ஊசியின் நீட்டத்திற்குச் சரியான துண்டுகளாக இயந்திரங்களிற் கொடுத்து நறுக்கிக்கொண்டே யிருப்பர். அதன் பின்னர் அவ்வூசிகளின் முனையைக் கூர் செய்வதிற் சிலரும், மற்றோர் முனையில் நூல் செல்வதற்குரிய துவாரமிடுவதில் வேறு சிலரும் அமர்ந்திருப்பர். இவ்வாறாகச் செய்யப்பட்ட ஊசிகளை எண்ணுவோரும், அடுக்குவோரும், காகிதங்களில் மடித்து வியாபாரிகளுக்கு அனுப்புவோரும் வெவ்வேறுவராவர். எஃகுப் பாளங்களைத் துண்டிப்பவனே வேலையின் கடைசி வரைக்குமுள்ள எல்லாப் பாகங்களையும் செய்வதில்லை; ஒவ்வொருவனும் ஒரு வேலையின் நுண்ணிய பாகத்தை மாத்திரம் செய்கிறான்; இதைத்தான் வேலைப் பிரிவு (Division of labour) அல்லது வேலையைப் பிரித்துச் செய்தல் என்று இப்புத்தகத்தில் அழைக்கிறோம்.

இங்ஙனமாகவே நீங்கள் எழுத உபயோகிக்கும் பேனாவின் நுனியாகிய 'நிப்' (nib) என்னும் சிறிய சாமானும் ஒரு இயந்திரசாலையில் பலவிதத் தொழிலாளர்களாற் செய்யப்படுகிறது.

## வேலைப்பிரிவு

வேலைப்பிரிவுக்கு வேறொரு உதாரணமுங் காட்டலாம். தற்காலத்திய பெரிய நெசவுத் தொழிற்சாலையொன்றில் பின்வரும் விஷயங்கள் கவனிக்கலாம்.

முதலாவது பாகத்தில் வயல்களிலிருந் தெடுக்கப் பட்டு வந்த பருத்தியை 'ஜின்' (gin) என்னும் மணைகளிலிட்டுப் பஞ்சு வேறு, கொட்டை வேருகப் பிரித்துப் பஞ்சை மூட்டை மூட்டையாகக் கட்டுகிருர்கள். அடுத்த



பாகத்தில் இப்பஞ்சு மூட்டைகள் "ஸ்பின்னிங் பிரேம்" (Spinning frame) என்னப்படும் மற்ருேர் இயந்திரத்தில்



இடப்பட்டு, சிறு சிறு நூலாக நூற்கப்பட்டு வெளியே வருகிறது. தொழிற் சாலையின் வெருெரு பாகத்தில் நூலைப் பலர் சாயந் தோய்த்து நெசவுச் சாலைக் கனுப்புகின்றனர்.

நெசவுச்சாலையிலுள்ள தொழிலாளர் சாயந் தீர்ந்த நூலை 'லூம்' என்னுந் தறிகளிலேற்றித் துணியாக நெய்கிறார்கள். இவ்வாறு நெய்யப்பட்ட துணியை வேண்டிய அளவில் துண்டித்து மூட்டை மூட்டையாகக் கட்டிக் கடைகளுக் கனுப்புவது வேறோரிடத்தில் வேறு தொழிலாளர்களாற் செய்யப்படும்.

பருத்திப் பஞ்சு நாம் அணியும் ஆடையாக மாறும் வரையுள்ள வேலையின் பல பல பாகங்களும் ஒன்றின் பின்னொன்றாய் ஒரே தொழிற்சாலையிற் பலவாயிரக் கணக்கான மனிதர்களாற் செய்யப்படுகின்றன. சிலவிடங்களில் ஒவ்வோர் முறைக்கும் பிரத்தியேகமான தொழிற்சாலைகள் உண்டு. பருத்தியைப் பஞ்சாக்கும் பஞ்சுச்சாலையில் நூல் நூற்பது கிடையாது; அவ்வாறே நூல் நூற்கும் ஆலையில் நெசவு கிடையாது. எனினும் ஒவ்வொரு தொழிற்சாலையிலுமுள்ள வேலை முழுவதும் பலதிறப்பட்ட பல்வேறு வேலைக்காரராலே பல பல பாகங்களாகப் பிரித்துச் செய்யப்படுகிறது.

## வேலைப்பிரிவின் பலாபலன்கள்

வேலையை இவ்வாறு பிரித்துச் செய்வதினால் விளையும் நன்மைகள் யாவை? ஒரு வேலையின் ஒரு பாகத்தை முடித்துவிட்டு அதன் அடுத்த பாகத்தை ஆரம்பிப்பதற்கிடையிற் செலவழியும் நேரம் இலாபமாகிறது; 'காலம் பணத்திற்குச் சமானம்' என்பது ஓர் ஆங்கிலப் பழமொழி. ஒரு தொழிற்சாலையிலுள்ள ஒவ்வொரு மனிதனுடைய நேரத்திலும் இலாப மேற்படும்போது மொத்தத்தில் எவ்வளவு இலாபம் ஏற்படும்!

வேலைப்பிரிவினுல் அமையும் பிற பலன்கள் யாவை? ஒரு வேலையின் ஒரு சிறுபாகத்தை மட்டுமே ஒருவன் திரும்பத் திரும்பச் செய்துகொண்டே வருவாஞயின் அவனது திறமை அதிகரிக்கு மல்லவா? "சித்திரமுங் கைப் பழக்கம் செந்தமிழும் நாப் பழக்கம்'' என்பது நமது நாட்டுப் பழமொழி. ஒவ்வொரு சிறிய பாகத்தைச் செய்வதிலு முள்ள ஒவ்வொருவனுடைய திறமையும் அதிகரிக்கும்போது "பல துள்ளி பெரு வெள்ள'' மாஞற் போல, அத்தொழிற்சாலையிலுள்ள ஆயிரம் பதிஞயிரமானவர்களின் திறமையும் அதிகரிக்கும். அவ்வாருயின் தொழிற்சாலையின் வேலை எவ்வளவு விரைவாக நடைபெறும்?

மேலும் ஒரு வேலையைப் பல பாகங்களாகப் பிரித்துச் செய்வதால் ஒவ்வொருவரும் தத்தம் திறமைக்கேற்ற பாகத்தையே செய்து கொள்ளலா மல்லவா? உதாரணமாகப் பருத்தியைப் பஞ்சாக மாற்றுவது சுலுவான வேலை; நூல் நூற்பதும், நெய்வதுமோ சிறிது கடினமான வேலை. ஒருவனே இப்பலதிறப்பட்ட வேலையையும் செய்வதாஞல் எவ்வளவு வேலை வீணுகப் போகும். சுலுவான வேலையைச் சிறுவர்களும், பெண்களும், கடினமான வேலையைக் கை தேர்ந்த ஆண்களுமாகப் பிரித்தியற்றிஞல் வேலை தேர்ச்சியாகவும் விரைவாகவும் நடை பெறுமல்லவா?

ஆஞல், வேலைப் பிரிவிஞல் ஒரு பிரதிகூலம் ஏற்படுதல் கூடும். நாடோறும் பகற் பத்து மணி நேரமும் ஒரு ஊசியின் பதினெட்டில் ஒரு பாகத்தையே ஒரு மனிதன் செய்துகொண்டு வருவாஞயின் அத் தொழிலிலுள்ள சுவையும், விருப்பமுங் குன்றிச் சலிப்பு ஏற்படுமல்லவா? ஆஞல் இதைப் பெரிய தீமையென்று எண்ணுவதற்கிட

மில்லை; சலிப்பேற்படக்கூடிய வேலையை யெல்லாம் இக்காலத்தில் அநேகமாக இயந்திரங்களே செய்து முடித்து விடுகின்றன.

இயந்திரங்களின் உதவியினால் வேலைப் பிரிவுடன் நடைபெறும் வேலைக்கு அமெரிக்கா தேசத்து 'ஹென்றி போர்டு'வின் தொழிற்சாலையை உதாரணமாகக்காட்டலாம். திங்கட்கிழமை சுரங்கங்களிலிருந்து நிலக்கரியும் இரும்பும் தோண்டி யெடுக்கப்பட்டு 'ரெயில்' மார்க்கமாக நூற்றுக் கணக்கான மைலுக்கப்பாலுள்ள தொழிற்சாலைக்குக் கொண்டுபோகப்பட்டு, உருக்கி, வார்த்து, இயந்திரங்களின் உதவியினால், இருநூறு பாகங்களுக்குமேல் அடங்கிய 900 "மோட்டார்" வண்டிகளாகச்செய்யப்பட்டுப் புதன்கிழமை காலையில் விற்பனைக்குத் தயாராகி விடுகின்றனவாம்! எழுபத்திரண்டு மணி நேரத்திற்குள் மண்ணோடு மண்ணாய்ப் புதைந்துகிடக்கும் இரும்பு மனிதரின் திறமையால் 900 "மோட்டார்" வண்டிகளாக மாறுவது என்ன விந்தை!

## பயிற்சி

1. விவசாயத்திற்கும் கைத்தொழிலுக்குமுள்ள வித்தியாசங்களை விவரிக்க.

2. நீங்கள் கவனித்திருக்கிற கிராமக் கைத்தொழில்கள் ஏதாவதொன்றில் எவ்வளவு தூரம் 'வேலைப்பிரிவு' ஏற்பட்டிருக்கிறதென்று கூறுக.

3. கைத் தறியில் வேலை செய்யும் தொழிலாளிதானே பஞ்சைச் செப்பஞ் செய்து நூல் நூற்றுச் சாயந்தோய்த்து நெசவு செய்வதினால் விளையும் தீமை என்ன?

4. வேலைப்பிரிவு அமைந்திருக்கும் தொழில்களுக்கு (இப் பாடத்திற் குறிப்பிடாத) வேறு சில உதாரணங்கள் தருக.

5. உங்களுக்குச் சமீபத்திலுள்ள ஏதாவது ஒரு பெரிய தொழிற்சாலைக்குச் சென்று, அதில் நடக்கும் வேலையைப்பற்றி ஒரு வியாசம் வரைக.

---

## ஐந்தாம் அத்தியாயம்

## தொழிலின் அமைப்பு

மதுரையிலுள்ள 'மதுரை மில்ஸ் கம்பெனி'யாருடைய நூல் நூற்குந் தொழிற்சாலையில் வேலைசெய்வோர் ஆறுயிரம் பேர். ஐந்து இலக்ஷம் கதிர்கள் (Spindles) உள்ளன. ஒரு நாளைக்கு நூற்கப்படும் நூலின் அளவு 300 பாரம் கட்டுகள் (bales).



மதுரை மில்ஸ் கம்பெனியாருடைய நூல்நூற்குந் தொழிற்சாலை

### பெருந் தொழிற்சாலைகள்

சென்னையிலுள்ள, 'பக்கிங்ஹாம் கர்னாடிக்' கம்பெனி யாருடைய நெசவுத் தொழிற் சாலையில் வேலை செய்வோர்

ஏறக்குறையப் பதினாயிரம் பேர். ஐரோப்பாவிலுள்ள 'ஜிலீன்' (Zelin) என்னும் பட்டணத்திலுள்ள பாட்டியா (Baṭa) என்பவரின் பாதரக்ஷைத் (Boots) தொழிற்சாலையில் வேலை செய்வோரின் தொகை இருபதினாயிரம்! அமெரிக்காவில் 'யுனைட்டெட் ஸ்டேட்ஸ் ஸ்டீல் கார்ப்பொரேஷன்' (United States Steel Corporation) என்னும் உருக்குத் தொழிற் சாலையில் வேலைசெய்வோரின் சங்கியையோ இரண்டரை இலக்ஷம்! அக்கம்பெனியாருக்கு நூற்று முப்பது இரும்புக் கனிகளும் (Iron Mines), ஏழரை இலக்ஷம் ஏகர் விஸ்தீரணமான நிலக்கரிக் கனிகளும் (Coal Mines), ஆயிரத்து முந்நூறு மைல் நீளமுள்ள இருப்புப்பாதைகளும், நூறு கப்பல்களும் இன்னும் பல ஸ்தாபனங்களும் உண்டு. வருட வருமானம் சுமார் எழுநூறு கோடி ரூபாய்கள்!

என்ன விந்தை! தொழிற்சாலைகள் இவ்வளவு பெரியனவாக இக்காலத்தில் நிறுவப்பட்டிருப்பதின் காரணம் என்ன?

### வேலையைப் பிரித்துச் செய்தல்

முந்தின பாடத்திற் கூறியபடி வேலைப் பிரிவே இதற்கு முதலாங் காரணமாகும். ஏனெனில் ஒரு தொழிற்சாலையிலுள்ள வேலையைப் பல பல பாகங்களாகப் பிரித்து ஒவ்வொரு பாகத்தையும் ஒவ்வொரு பகுப்பினர் செய்வதினால் ஒரே இடத்தில் ஒவ்வொரு பாகத்து வேலையிலும் ஏராளமான பேர்கள் வேலைசெய்யக்கூடும். உதாரணமாகப் பருத்தியைச் சுத்தஞ் செய்து, பஞ்சாக மாற்றுவதிலும, பஞ்சிலிருந்து நூலிழைப்பதிலும், நூலைத் துணியாக நெய்வதிலும் ஆகிய ஒவ்வொரு வேலைப் பாகத்திலும் தனித்தனி வேலையை மிகுதியான பேர்கள் செய்கிறார்கள். எனவே, இவர்கள்

செய்யும் வேலையைப் பிரிவு பிரிவாக மேற்பார்ப்பதும் எளிதாகும். ஆகையினுற்ருன் தொழிற்சாலைகள் (உதாரணமாகப் 'பக்கிங்ஹாம் மில்') ஆயிரம் பதினுயிரமான பேர்கள் அடங்கிய பெரிய ஸ்தாபனங்களாக அமைக்கப்பட்டுள்ளன.

## இயந்திரங்களை உபயோகித்தல்

இக்காலத்துத் தொழிற்சாலைகள் பெரிதாக அமைக்கப்படுவதற்கு இரண்டாவது காரணம் இயந்திரங்கள். ஏதேனும் ஒரு பெரிய தொழிற்சாலையின் உட்சென்று நீங்கள் பார்ப்பீர்களானுல் அங்குள்ள இயந்திரங்கள் யாவும் தாமே சுழன்று கொண்டு தத்தம் வேலையைச் செய்துகொண்டிருக்கக் காணலாம்; அங்கு வேலைசெய்யும் தொழிலாளர்கள் அவைகளின் பக்கத்தில் நின்றுகொண்டு பருத்தியை வாரிக் கொட்டுவதோ, நூற்ற நூலைக் கதிர்களினின்றும் (Spindles) எடுத்து அப்புறப்படுத்துவதோ, இவைபோன்ற சுலபமான வேலைகளைமட்டுமே செய்துகொண்டிருப்பார்கள். ஆகையினுற்ருன் ஒவ்வொரு தொகுதியிலும் நின்று வேலை பார்க்கும் நூற்றுக்கணக்கான தொழிலாளிகளையும் மேற்பார்ப்பது சுலபமாக விருக்கிறது. இயந்திரங்களின் உதவியில்லாது, ஆட்கள் கைவேலையாய்ச் செய்யும் தொழிலை இவ்வாறு மேற்பார்ப்பது கூடாத காரியம்; "உடையவன் போகாதவேலை ஒரு முழங் கட்டை" என்பது இவ்விதத் தொழில்களுக்கு முற்றும் பொருந்தும். ஆனுல் இயந்திரங்களின் உதவியினுல் தொழிற்சாலைகள் நடத்தப்படும் போது அவை பெரிதாக அமைக்கப்படுவதுடன் அங்கு நடத்தப்படும் வேலையை மேற்பார்ப்பதும் எளிதாக அமைகின்றது. 'ஜிலீன்' நகரத்துப் பாதரக்ஷைத் தொழிற்சாலை முதலாளி இருபதினுயிரம்பேர்கள் அடங்கிய தனது பெரிய ஸ்தாபனத்

தை இலகுவில் நடத்தி மேற்பார்ப்பதுடன், ஒழிந்த நேரத்தி லெல்லாம் தனது ஆகாய விமானத்திற் சென்று தனது சாமான்களின் விற்பனைக்குரிய ஒழுங்குகளையெல்லாம் செய்து வருகிறார்! *

## இயந்திரசக்தியில் இலாபம்

ஒரு தொழிற்சாலையின் இயந்திரங்களை யெல்லாம் இயங்கச்செய்வது 'பவர் ஹவுஸ்'' (power house)என்னு



பவர் ஹவுஸ்

* இவ்வத்தியாயம் எழுதி முடிந்த பின்னர் சென்ற ஜூலை (1932) மாதத்தில் தனது ஆகாயவிமானம் முறிந்து போனதனால் வீழ்ந்து உயிர்துறந்தனர் என்ற துக்கசெய்தி கேள்வியுற்றோம். இந்தியாவி லும் பாதரக்ஷைத் தொழிற்சாலைகளை ஏற்படுத்திப் பெருத்த தொழிலை நடத்த எண்ணியிருந்தனர்.

மிடத்திலுள்ள பெரியதோர் இயந்திரம். மற்ற இயந்திரங்களை யெல்லாம் இயங்கச்செய்யும் 'சக்தி' (power)உண்டு பண்ணிக்கொண்டிருப்பதே அதன் வேலை. பெரிய தொழிற்சாலைகளில் அதன் சக்தி 20,000 'குதிரை வேகம்' (horse power) அடங்கியதாயிருக்கலாம். இவ்வியந்திரத்தின் சக்தி எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாயிருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு தொழிற்சாலை பெரிதாக அமைக்கப்படும். ஏனெனில் பெரிய இயந்திரங்களை நிறுவுவதனால் சிறிய இயந்திரங்களைக்காட்டிலும் விகிதாசாரப்படி செலவு சுருக்கமாகும். உதாரணமாக 40 'குதிரை வேக'முள்ள இயந்திரத்தைக்கொண்டு ஒரு குறித்த நேரத்தில் நாலு பஞ்சு மணைகளை (gius) ஓட்டலாமென்றால் 80 'குதிரை வேக' முள்ள இயந்திரத்தைக்கொண்டு அதே நேரத்தில் 12 மணைகளை ஓட்டலாம். நாலு மணைகளுள்ள தொழிற்சாலையை நடத்தும் இயந்திர நிபுணரே (engineer) அதே சம்பளத்தில் 12 மணைகளுள்ள தொழிற்சாலையையும் நடத்தலாம்; இதனிமித்தம் பெரிய தொழிற்சாலைகளில் இயந்திர சக்தியில் மிகுந்த இலாபம் (economy of power) ஏற்படுகிறது; ஆகவே அவை பெரிதாக அமைந்துள்ளன.

## ஒன்றையொன்று சார்ந்துள்ள தொழிற்சாலைகள்

மூன்றாவதாக: இக்காலத்தின் தொழிற்சாலைகள் தனி ஸ்தாபனங்கள் அல்ல. அதாவது பெரும்பாலும் பெரியதோர் ஸ்தாபனத்தில், அதனுடைய உபதொழில்கள் அடங்கிய பல சிறிய ஸ்தாபனங்கள் உள்ளன. உதாரணமாகச் சென்னையிலுள்ள 'பக்கிங்ஹாம்' தொழிற்சாலையில், பருத்தியைப் பஞ்சாகச் சுத்தம் செய்யும் பஞ்சுச்சாலையும், நூல் நூற்கும் ஆலையும், நெசவுச்சாலையும், சாயந்தோய்க்

கும் சாலையும் ஆகிய நான்கு வெவ்வேறான, ஆனால் ஒன்றையொன்று சார்ந்துள்ள, சிறு தொழிற்சாலைகள் அடங்கியிருக்கின்றன. இவை நான்கையும் பிரித்துத் தனித்தனியே நடத்தினால் ஒவ்வொன்றும் சிறியதாகவே யிருக்குமல்லவா?

ஆனால் அந்நான்கு விதமான தொழிற்சாலைகளையும் ஒரே இடத்தில் ஒரே அதீனத்திற்குள் வைத்து நடத்துவதனால் பலவித இலாபங்களும் சௌகர்யங்களும் ஏற்படும். எவ்வாறெனின், நெசவுச்சாலைக்கு வேண்டிய நூல் எல்லாம் வேண்டுமளவிற்குக் காலதாமதமின்றி வேண்டும்போது பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறாகவே, நூல் நூற்கும் ஆலைக்கு வேண்டும் பஞ்சுயாவையும் தமது சொந்த 'ஜின்' களிலிருந்தே பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறன்றி, நெசவுச்சாலைக்கு வேண்டிய நூலை வேறொரு ஆலையிலிருந்து வாங்குவதானால் ஒருக்கால் தமக்கு அவசியமாக வேண்டும் சமையத்தில் அது கிடைக்காமற்போகும்; கிடைப்பினும், விலையேற்றமாகக் கொடுக்கவேண்டியதிருக்கும்; எக்காலமும் நல்ல நூலாகக் கிடைப்பதும் துர்லபம்; மேலும் அந் நூலைத் தம் நெசவுச்சாலைக்குக் கொண்டு வந்து சேர்ப்பதற்குரிய செலவுகளும் பிரத்தியேகமாகும். இத்தியாதி காரணங்களினாலே, ஒரு நெசவுச்சாலையின்கண் நூல் நூற்பதையும் உபதொழிலாக அமைத்து நடத்தினால் வாங்குவதிலும் விற்பதிலும் முதலான பல விஷயங்களில் மிகுந்த இலாபம் ஏற்படும். "யுனைட்டெட் ஸ்டேட்ஸ் ஸ்டீல் கார்ப்பொரேஷன" என்னும் உருக்குத் தொழிற்சாலைக் கம்பெனியார் தங்கள் சொந்தத்திலேயே நிலக்கரிக் கனிகளையும், இருப்புப் பாதைகளையும், கப்பல்களையும் வைத்து நடத்துவது மேற்கூறிய இலாபங்களைப் பெறுவதன் பொருட்டே.

வேலையைப் பிரித்துச் செய்தல், இயந்திரங்கள் நிறுவுதல், வாங்குவதிலும், விற்பதிலும் ஏற்படும் இலாபங்கள் ஆகிய முற்கூறிய மூன்று முக்கிய காரணங்களினாலும் தற்காலத்தின் தொழிற்சாலைகள் மிகப்பெரியனவாக அமைக்கப்பட்டுள்ளன.

## சிறிய தொழிற்சாலைகள்

ஆயினும் 'குபேரன் பட்டணத்திலும் விறகு வெட்டிக்காரன் உண்டு' என்றாற்போல, பிரம்மாண்டமான தொழிற்சாலைகள் இருக்கும் நகரிலோ அல்லது அத் தொழிற்சாலைகளுக் கருகாமையிலோ பல சிறிய தொழிற்சாலைகளும் அமைக்கப்பட்டிருக்கக் காணலாம். இயந்திரங்கள் நிறுவியிருந்தும் வேலைப்பிரிவு ஏற்பட்டிருந்தும் அவை சிறு ஸ்தாபனங்களாகவே யிருந்து வருகின்றன. இதற்குக் காரணம் என்ன?

கிராமங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பஞ்சுச் சாலைகளை உதாரணமாக எடுத்துக்கொள்வோம். அவை சிறியனவாக அமைக்கப்பட்டிருப்பதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஒருக்கால் பருத்தி போதிய அளவு அவ்விடத்திற் கிடைக்காதிருக்கலாம்; அன்றேல் போதுமான வேலையாட்கள் கிடைக்காதிருக்கலாம்; அல்லது ஏராளமான 'முதல்' போட்டுத் துணிவுடன் நடத்தும் முதலாளிகள் இல்லாதிருக்கலாம். இவையாவும் அமைந்திருந்தாலும் அங்கு உண்டாக்கப்படும் பஞ்சு முழுவதையும் நல்ல இலாபத்துடன் விற்பதற்குரிய வசதிகள் இல்லாதிருக்கலாம். எத்தொழிலைச் செய்யவேண்டுமாயினும்,

"பொருள், கருவி, காலம், வினையிட னோடைந்தும்
மருடீர வெண்ணிச் செயல்"

வேண்டுமென்றன்றோ நம் முன்னோர் கூறியுள்ளார். இக்காரணங்களினாலே அப்பஞ்சுச்சாலைகள் பெரியனவாக அமைக்கப்பட்டில.

இனி, வேறு சில தொழிற்சாலைகள் இயல்பாகவே பெரிதாக அமைக்கப்படமுடியா. தங்கம், வைரம், வெள்ளி முதலானவை விற்கும் கடைகளையும், ஆபரணங்கள் செய்யும் தொழிற்சாலைகளையும் சிறிய ஸ்தாபனங்களாகத்தான் அமைக்க முடியும். ஏனெனில், ஆங்கு செய்யப்படுவன விலையுயர்ந்த பொருள்கள்; ஆனதால் வேலை மேற்பார்வை விஷயத்தில் முதலாளிகள் மிகுந்த ஜாக்கிரதையுடனிருக்கவேண்டும். மேலும் விலையுயர்ந்த பொருள்கள் அதி சீக்கிரம் விலையாகா. உடனுக்குடனே விலையாகாத பொருள்களை மிகுதியான அளவில் செய்து இருப்பு வைப்பது பொதுவாக இலாபந்தரத்தக்கதல்ல. எனவே இவ்விதமான தொழில்களைப் பெரிய அளவில் (large scale) நடத்த முடியாது.

சித்திரம் வரைதல், கல், மரம், உலோகங்கள் முதலியவற்றிற் சிற்பாசாரிகள் கையினாற் செய்யவேண்டிய அரிய பெரிய வேலைப்பாடமைந்த தொழில்கள் யாவும் சிறிய அளவிலேயே (small scale) நடைபெறுகின்றன.

"ஊரென்றிருந்தாற் சேரியுமுண்டு" என்றாற் போல தொழிலுலகத்தில் பெருந்தொழிற்சாலைகளும் சிறியஸ்தாபனங்களும் ஆங்காங்கு அமைந்திருப்பது இயல்பே. முதற் பாடத்தில் பலதிறப்பட்ட உழைப்பும் அவசியம்

என்று கூறினோம்; அதுபோலவே பலவகைப்பட்ட ஸ்தாபனங்களும் அவசியம்; ஹென்றி போர்டுவின் பிரமாண்டமான தொழிற்சாலையும் அவசியம்; தெருவில் ஒரு மனிதன் வைத்து நடத்தும் சிறிய 'ரிப்பேர் ஷாப்'பும்(பழுதுபார்க்கும் பட்டறை) அவசியம். ஒரு மோட்டார் காருக்குப் பழுது வந்த காலத்திலெல்லாம் அதை அமெரிக்காவிலுள்ள போர்டுவின் தொழிற்சாலைக்கே அனுப்பிக் கொண்டிருக்க முடியுமா? எனவே பலவகைப்பட்ட ஸ்தாபனங்கள் ஒன்றற்கொன்று ஆதாரமாக விருந்து வருவது காண்க.

## பயிற்சி

(1) உங்கள் கிராமத்திலுள்ள ஏதாவது ஒரு கைத்தொழிற்சாலையைப்பற்றிப் பின்வரும் விபரங்கள் குறிக்கவும் — 1. நடத்துபவர். 2. வேலைசெய்வோர் தொகை. 3. உபயோகிக்கப்படும் கருவிகள். 4. தினசரி செய்யப்படும் பொருள்களின் மதிப்பு. 2. அவை எங்கெங்கே எவ்வாறு விற்பனை செய்யப்படுகின்றன?

(2) அத்தொழிற்சாலை பெரிதாக அமைக்கபடக் கூடாததற்கு மேற்கூறியவைகளில் எவ்வெவை காரணமாகின்றன?

(3) உங்களுக்கருகாமையிலுள்ள ஏதாவது ஒரு பெரிய தொழிற்சாலைக்குச் சென்று, முதற் கேள்வியிற் கேட்ட விபரங்களைக் குறிக்கவும். அது ஏன் அவ்வாறு பெரிய ஸ்தாபனமாக அமைந்திருக்கிறதென்பதற்கும் விடையளிக்க.

(4) அடியிற்கண்டவைகளுக்கு நீங்கள் அறிந்த அளவில் விடையளிக்க.

(க) பருத்தி ஏராளமாக விளைந்தும் கிராமாந்தரங்களிற் சிறிய பஞ்சுச்சாலைகளே யுள்ளன.

(ச) மதுரையில் நான்கு பெரிய நூல் நூற்கும் ஆலைகள் உள்ளன: அவைகளில் ஒன்றேனும் நெசவுத்தொழிலையும் சேர்த்து நடத்துவதில்லை.

(த) கல்கத்தாவில் சுமார் 90 சணல்நூற்சாலைகள் உள்ளன. சென்னை இராஜதானியில் நான்கே யுள்ளன.

(5) இயந்திரங்கள் நிறுவியிருந்தும், வேலைப்பிரிவு ஏற்பட்டிருந்தும், பெரிய ஸ்தாபனங்களாக அமைக்கப்படக்கூடாத வேறு தொழில்களுக்கு (இப்பாடத்திற் காட்டியிராத) உதாரணங்கள் தருக.

---

# ஆறும் அத்தியாயம்

## பொருளாக்கத்திற்குரிய சாதனங்கள்

முதல் ஐந்து அத்தியாயங்களிலும், உணவுப் பொருள்களும் ஏனைய பொருள்களும் எவ்வாறு ஆக்கப்படுகின்றன வென்பதைக் கவனித்தோம். பொருள் ஆக்குதலுக்கு (Production) எவ்வெவைச் 'சாதனங்கள்' (factors or agents) வேண்டுமென்பதை இவ்வத்தியாயத்தில் விரித்துரைப்போம்.

### உழைப்பு

எல்லாவிதப் பொருள்களை உண்டுபண்ணுவதிலும் உழைப்பு அடங்கியிருக்கிறதென்று இப்புத்தகத்தின் முதற்கண் கூறினோம்; உழைப்பே (Labour) பொருள் ஆக்கத்திற்கு இன்றியமையாத முதற் சாதனம். வானம் மழையைப் பொழியும்; பூமி, விதைத்த விதையை முளை கிளம்பச் செய்யும்; ஆயினும் உழுவாரும் பயிரிடுவாரும் இன்றேல் உணவுப் பொருள்கள் வீட்டிற்கு எவ்வாறு வந்து சேரும்?

"இலமென் றசைஇ யிருப்பாரைக் காணி
னிலமென்னு நல்லா ணகும்".

உழைப்பே எல்லாக் கருமத்துக்கும் எல்லாத் தொழிலுக்கும் அடிப்படையாக விருப்பது.

நமக்கு இன்றியமையாத வேண்டும் இயற்கைப் பொருள்களுங்கூட உழைப்பின் சம்பந்தம் பெற்ருலன்றி உபயோகத்திற்காகா. வைரத்தையும், நிலக்கரியையும், பொன்னையும் பூமிக்குள்ளிருந்து வெளியே யெடுத்தாலன்றி அவை 'பொருள்கள்' ஆகமாட்டா. அங்ஙனமே மலைச் சிகரத்தில் ஒருவனும் எடுக்கக்கூடாத விடத்தில் இருக்கிற தேனும் ஆழ்கடலின்றும் எடுக்கவியலாது கிடக்கும் பெரிய முத்துக்களும் தமது இயற்கை நிலையில் பொருள்கள் ஆக மாட்டா.

## நிலம்

ஆயினும் வித்தின்றி விளைவுண்டாகாதது போல இயற்கைப் பொருள்களின்றி, எவ்வகை உழைப்பினுலும் பொருள்களை உண்டுபண்ண முடியாது. மனிதரின் உழைப்பெல்லாம் இயற்கைப் பொருள்களின் உருவம், தோற்றம், நிலைமை, இவைகளை மாற்றுவதும், அவ்வாறு மாற்றியபின் அவைகளை வேண்டுமிடத்துக்குக் கொண்டு போவதுமே யொழிய வேறல்ல. சிருஷ்டித் தொழில் கடவுள் ஒருவராலேயே யியலும்! ஆகாயத்திற் பறக்கும் விமானங்களும், புகைவண்டித் தொடர்களும், இன்னும் பல அரிய பெரிய கருவிகளும் இயற்கைப் பொருள்களைக் கொண்டே அமைக்கப்பட்டுள்ளன; அவ்வியந்திரங்களை இயங்கச் செய்யும் 'சக்தி'யும் நீர், உலோகங்கள் இவைகளினின்றே உற்பத்தியாக்கப்படுகின்றன.

மேலும் மழையும், வெயிலும், சூரிய வெளிச்சமும், பருவகாலங்களுமான பலவகை இயற்கைச் சம்பவங்கள் யாவும் நிகழாவிடின் விவசாயத்தையும் அதனைச் சார்ந்து நடைபெறும் கைத்தொழில்களையும் மனிதர் எவ்வாறு கொண்டு செலுத்த முடியும்? இன்னும் மனிதரும், மற்றும் ஜீவன்களும் உயிர்வாழ்வதற்கு இன்றியமையாததான மண், நீர், அனல், காற்று, ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்களும் நமக்கு இலவசமாக அளிக்கப்படாதிருப்பின் வெறும் உழைப்பினால் யாது பயன் பெறமுடியும்?

எனவே பொருளாக்கத்திற்குக் காரணமாகும் இரண்டாவது சாதனம் இயற்கைப் பொருள்கள். அவ்வியற்கைப் பொருள்கள் அனைத்தும் நிலம் முதலான ஐவகைப் பஞ்ச பூதங்களில் அடங்கும்; அவற்றுள் நிலம் தலைமையாக விருப்பது பற்றி இயற்கைப் பொருள்கள் அனைத்தையும் 'நிலம்' (Land) என்னும் பொதுப் பெயரால் அழைக்கலாம்.* நிலம் பொருளாக்கத்திற்குரிய இரண்டாவது சாதனம்; இதையே முதன்மையாகக் கூறுவாருமுண்டு.

## முதல்

'நிலம்' ஆகிய இயற்கைப் பொருள்களை வேலை ஆகிய வெறும் 'உழைப்பினால்' மட்டுமே எல்லாக் காரியங்களிலும் உபயோகத்துக்குக் கொண்டு வருதல் கூடாது.

*தொல்காப்பியம், பொருளதிகாரம் முதற் சூத்திரத்திற்கு இளம்பூரணவடிகள் எழுதிய உரையில் "நிலம் எனவே நிலத்திற்குக் காரணமாகிய நீரும், நீர்க்குக் காரணமாகிய தீயும், தீக்குக் காரணமாகிய காற்றும், காற்றிற்குக் காரணமாகிய ஆகாயமும் பெறுதும்" என்று வருவதைக் காண்க.

இயற்கைப் பொருள்களை உழைப்பினுல் மட்டும் உபயோகப் படுத்துவதானது, மரத்திலிருக்கும் காய்கனிகளைக் கையாற் பறித்தல் போன்ற காரியங்களில்தான் கைகூடும். முற் காலத்திய சாதாரண வாழ்க்கையில் இத்தகைய உழைப்பே போதுமானதாயிருந்தது. பறவையினங்களிற் பெரும் பாலன இன்னும் இவ்வாறே ஜீவித்து வருகின்றன. சிங்கம், புலி முதலிய விலங்கினங்களும் இதர மிருகங்களை வேட் டையாடி அவைகளின் மாமிசத்தைத் தங்கள் கூரிய பற் களாலும் நகங்களாலும் கிழித்துத் தின்று வாழ்கின்றன. ஆனுல் பகுத்தறிவு படைத்த மனிதனே மிருகங்களை வேட் டையாடித் தின்று வந்த காலத்திலுங் கூட ஆயுதங்களை உண்டுபண்ண வாரம்பித்து அவற்றின் உதவியால் தனக்கு வேண்டும் உணவுப் பொருள்களைச் சம்பாதித்து வந்தான். இவ்வாயுதங்கள் முதலிற் கற்களினுலும் பின்னர் உலோகங் களினுலும் உண்டாக்கப்பட்டன. உணவுப் பொருள்களைத் தேடவும் விளைவிக்கவும் முதன் முதல் ஆயுதங்கள் உண்டாக் கப்பட்டன. இக்காலத்தில் நமக்கு உபயோகமாகும் எல்லாப் பொருள்களையும் விரைவாகவும், சுலபமாகவும் செய்து கொள்ளப் பலவிதமான இயந்திரங்களும் கருவி களும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

இவ்விதமான கருவிகளின் உதவியில்லாது எத் தொழிலும் இக்காலத்தில் நடத்தப்படுவதில்லை. இயற்கைப் பொருள்களை யெல்லாம் 'நிலம்' என்னும் பொதுப் பெயரால் அழைத்தது போல இக்கருவிப் பொருள்களை யெல்லாம், 'முதல்' (Capital) என்னும் பொதுப்பெயரால் அழைப் போம். 'முதல்' என்பது பொருளாக்கத்திற்கு இன்றியமை யாததான மூன்றும் சாதனம்.

'முதல்' மூவகைப்பட்டது. இயந்திரங்கள், ஆயுதங்கள் முதலானவை "ஸ்தாவர முதல்" (Fixed Capital) என்று அழைக்கப்படும்; ஏனெனில் பெரும்பாலும் அவை ஓரிடத்தில் நிலையாக நிறுவப்பட்டிருப்பன. விவசாயிகள் உபயோகிக்கும் 'விதை'யைச் "சுழலும் முதல்" (Circulating Capital) என்னலாம்; ஏனெனில் ஒருதடவை அவ்விதையை விதைத்துப் பலனைப் பெற்றுக்கொண்டு, அதிலிருந்தே அடுத்த பலனுக்குரிய வித்தைத்திரும்பவும் எடுத்துக்கொள்ளலாம். வைத்தியர்கள், வித்துவான்கள், சிற்பசாஸ்திரிகள் முதலானோருடைய 'முதல்' அவர்கள் கற்றுத் தேர்ந்திருக்கும் கல்வியோ அல்லது மற்றத் திறமையோதான்: அது அவர்களை விட்டுப்பிரியாதது; ஆதலின் அதை "ஆள்சார்ந்த முதல்" (Personal Capital) என்று வழங்கலாம். பணம் இருந்தால் இவ்வெல்லாவித முதலையும் நாம் பெற்றுக்கொள்ளுவது இயல்பாதலால் சாதாரண வழக்கில் 'முதல்' என்னும்போது பொதுவாகப் பணத்தையே குறிக்கிறோம்.

## முயற்சி

உழைப்பு, நிலம், முதல் ஆகிய மூன்று சாதனங்களுமிருந்தால் பொருள் ஆக்கல் இயலும். ஆயினும் எத்தொழிலுக்கும் முயற்சி அவசியம். அதை மனவலிமை எனவும் ஊக்கம் எனவும் கூறலாம். "முயற்சி திருவினை யாக்கும்" என்ற வள்ளுவர் கருத்து இங்கு உற்று நோக்கற்பாலது. மேலும்,

"வினைத் திட்ப மென்ப தொருவன் மனத்திட்ப
மற்றைய வெல்லாம் பிற"

வென்றாற் போல, மனவலிமை யில்லையாயின், நிலம், முதல் உழைப்பு ஆகிய பிறவலிமைகள் இருந்தும் பயன்படாதவை யாகும்.

பெருங்காடான நிலம் ஒன்று இருக்கிறதென்றும், போதுமான வேலையாட்களும் தொழிற் கருவிகளும் இருக்கின்றன வென்றும் வைத்துக்கொள்ளுவோம். ஆனால், மலையிலிருந்து வரும் ஆற்றில் அணைகட்டி, ஓர் வாய்க்கால் உண்டுபண்ணி, நீர்ப்பாய்ச்சி, எப்பயிரும் இட்டுப் பெரும் பொருள் ஈட்டலாம் என்ற 'எண்ணம்' உதித்து, "எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார், திண்ணியராகப் பெறின்" என்று, 'ஊக்கம்' குறையாது, 'துணிவு' கூட்டிச் செய்தாலல்லவோ அக்காடு நல்ல நிலமாகும்? இவ்வித 'முயற்சி'யே (enterprise) பொருளாக்கத்திற்கு அவசியமான நான்காம் சாதனம்.

எனவே, முடிவாகக் கூறுமிடத்து, பொருளாக்கத்திற்கு இன்றியமையாத சாதனங்கள் நான்கு; அவை முறையே உழைப்பு, நிலம், முதல், முயற்சி ஆம். உழைப்பென்பது மனோவலியாலும் உடல் வலியாலும் இயற்றும் வேலை. 'நிலம்' பஞ்சபூதங்களான இயற்கைப் பொருள்கள். 'முதல்' பலதிறப்பட்ட கருவிப் பொருள்கள். 'முயற்சி' யென்பது முற்கூறிய மூன்று சாதனங்களையும் ஒன்று கூட்டிப் பொருளாக்கத்தில் ஈடுபடச்செய்யும் மனக் கிளர்ச்சி. அதுவே மனோதிடன், ஊக்கம், துணிபும் ஆம்.

## பயிற்சி

1. பொருளாக்கத்திற்கு வேண்டிய நால்வகைச் சாதனங்

களுக்கும் இப்பாடத்திற் குறிப்பிடாத வேறு சில உதாரணங்கள் தருக.

2. பின்வரும் தொழில்களுக்கு வேண்டிய சாதனங்கள் அனைத்தையும் குறிப்பிடுக. (1) விவசாயம், (2) மளிகை வியாபாரம், (3) 'மோட்டார் கார் ஏஜென்ஸி', (4) வைத்தியர் வேலை.

3. நீங்கள் பார்த்திருக்கும் கைத்தொழிற்சாலை யொன்றில் பொருளாக்கத்தினிமித்தம் அமைந்துள்ள சகல சாதனங்களையும் விவரமாகக் கூறுக.

4. "ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித் தாழாது ஞற்றுபவர்" இக்குறளில் அடங்கியுள்ள கருத்தை யொட்டி ஒரு வியாசம் எழுதுக.

5. 'உழைப்பு'க்கும் 'முயற்சி'க்கும், 'இயற்கைப்பொருள்' களுக்கும் (நிலம்) 'கருவிப்பொருள்'களுக்கும் (முதல்) உள்ள வித்தியாசங்களை உதாரணங்களுடன் விளக்குக.

---

# ஏழாம் அத்தியாயம்

## பொருள் மாற்றுதல்

இதுகாறும் மனிதருக்கு வேண்டிய உணவுப் பொருள்களும் பிறபொருள்களும் எவ்வாறு ஆக்கப்படுகின்றனவெனக் கூறி வந்தோம். ஆயினும் அவ்வாறு பொருள் ஆக்குவோர் 'நான்', 'எனது' என்றே சுயநலப் பிரியாகப் பிறர் நன்மையைக் கருதாது உழைத்து வருகின்றனரென்று சாதாரணமாக எண்ணுகிறோம். நமக்கு நன்றி செய்வோர், மாதா, பிதா, குரு, தெய்வம், அரசர், பெரியோர் ஆகிய இவர்களே யன்றிப் பிறர் எவருமில்லை யெனவுங் கூறுகிறோம்.

## உலகம் ஓர் கூட்டுறவுச் சங்கம்

இது முற்றிலும் உண்மையாகுமா? இவ்வுலகம் இயங்கும் முறையைச் சற்று உற்று ஆராய்ந்தால், எல்லா மனிதரும் ஒருவருக்கொருவர் உபகாரமும் நன்மையும் செய்கிறவர்களாகக் காணப்படுகிறார்கள் என்று விளங்கும். அவ்வாறில்லாவிடின் இப்பெரிய உலகம் நாம் பார்க்கும் வண்ணம் நடைபெறாது; சீக்கிரம் பெரிய மண்மேடாகவும், மனிதர் குடியிருப்புக் குதவாத வனமாகவும் மாறிவிடும்!

இவ்வுண்மையை விளக்க ஒரு சிறு உதாரணங் காட்டுவோம். நமக்கு உணவளிப்பவர் யாவர்? விவசாயிகள் அல்லவா? அதினுற்றான் வள்ளுவர், "உழுவார் உலகத்திற் காணி" என்று கூறினர். ஆனல் விவசாயியின் கலப்பையைச் செய்ததார்? பருவகாலம் வரும் வரைக்கும் அவனுடைய எருதுகளை வளர்த்துக் கொடுத்தது யார்? பிறமனிதரல்லவா? அவ்வாறே அவனுடைய நிலத்திற் களை பிடுங்கியதும், நீர் இறைத்ததும் பிறமனிதரல்லவா! அவன் உபயோகித்த புதிய ரஸாயன எரு வெளிநாட்டார் தயாரித்தனுப்பியதல்லவா? அவன் கையாடிய புதிய முறைகளைக் கற்பித்தது சர்க்கார் விவசாய இலாக்கா உத்தியோகஸ்தர்களல்லவா? இன்னும் அவனுக்குரிய ஆடைகள், பாத்திரங்கள் முதலியன செய்து கொடுத்தவர்களும் வெவ்வேறுவரல்லவா? இவ்வளவு மிகுதியான பேர்கள் விவசாயியின்பொருட்டு உழைக்காவிடில் அவன் எவ்வாறு "உலகத்தார்க்காணி"யாகக் கருதப்படக்கூடும்? இவ்வுலகம் ஒரு பெரிய கூட்டுறவுச் சங்கமாக இயங்குகின்றதென்று நாம் முதல் அத்தியாயத்திற் கூறிய உண்மை இதுதான்.

உலகம் கூட்டுறவுச் சங்கமாக இயங்குகின்றதென்பதின் வெளிப்படையான கருத்தென்ன? பற்பலவிதமான தொழில்களில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரும் பெரும்பாலும் தத்தம் உணவுக்கோ, உபயோகத்துக்கோ வேண்டிய அளவுக்குமட்டும் பொருள்களைச் சேர்ப்பதில்லை. அவ்வாறு அவர்கள் செய்து வருவாராயின் உலகம் அநாகரிக தசையிலேயேதான் இருந்து வரும். ஆனால் நாம் பார்க்கிறபடி ஒவ்வொரு தொழிலாளியும் தான் செய்யும் பொருள்களில் தன்தன் உபயோகத்துக்கு வேண்டும் ஓர் சிறு பாகத்தை மாத்திரம் வைத்துக்கொண்டு, மீந்த பாகத்தை யெல்லாம் பிறருக்காக அளிக்கிறான். ஆடைகள் செய்யும் சேடரும், எண்ணெய் உற்பத்தியாக்கும் செட்டிகளும், நாம் முற்கூறியதற்கு உதாரணமாகிறார்கள்.

## பொருள் மாற்றுதல்

இஃதென்ன விந்தை? சேடர் விவசாயிகளுக்காகவும், விவசாயிகள் சேடருக்காகவும் இவ்வாறே ஒவ்வொருவரும் பிறருக்காகவும், உழைத்து வருகிறார்கள். இவ்வாறு ஒருவர் செய்த பொருளை அதை வேண்டும் பிறருக்கு அளிப்பதைத்தான் "பொருள் மாற்றுதல்" (Exchange) என்று அழைக்கிறோம். இதுவே வியாபாரமும் ஆம்.

பொருள் மாற்றுதலானது ஒரு தேசத்திற்குள் மட்டுமன்றும், நடப்பதில்லை; நீராவிக் கப்பல்களும் இருப்புப் பாதைகளும் நிரம்பிய இக்காலத்தில் உலகத்தின் நானு திசைகளிலும் சந்து பொந்துகளிலும் அது நடந்தேறி வருகிறது. சாதியென்றும், மதமென்றும், நிறமென்றும் பார்க்கின்றாரில்லை. "வேப்பெண்ணெய் விற்ற காசு கசக்

குமா''? "கரி விற்ற காசு கறுப்பாய் இருக்குமா?" என்றல்லவா கூறுகின்றனர்? ஆங்கிலேயருக்கு வேண்டிய கோதுமை, பருத்தி, சணல், எண்ணெய் வித்துக்கள் முதலியவற்றை இந்தியர் அனுப்புகிறார்கள்; நமது தேசத்தினருக்கு வேண்டிய இயந்திரங்கள், துணிமணிகள் முதலானவற்றை அத்தேசத்தினர் அனுப்புகின்றனர். இலங்கையில் விளையும் தேயிலை உலகமெல்லாம் செல்கிறது. 'ஜாவா' நாட்டின் சர்க்கரையைச் சகல தேசத்தாரும் சாப்பிடுகிறார்கள். ஆ! பொருள் மாற்றுதல் எவ்வளவு அந்நியோந்நியமாகவும் சகோதரத்துவமாகவும் நடைபெறுகிறது!

பொருள் மாற்றுதல் ஆகிய வியாபாரத்தில் முயற்சிப்போர் எத்தனை? அதற்காகச் செய்யப்பட்டுள்ள கிடங்குகள் எத்தனை? மண்டிகள் எத்தனை? வர்த்தக சாலைகள் எத்தனை? அதற்காகவே பெரும் ரஸ்தாக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆறுகள் குறுக்கிட்டால் அவைகளைக் கடக்கப் பாலங்கள் உண்டு. விரைவிற் பொருள்களைக் கொண்டு போக வேண்டுமானால் இருப்புப்பாதைகளும், கப்பல்களும், ஆகாயவிமானங்களும் ஏற்பட்டுள்ளன. கொடுப்போர்க்கும் கொள்வோர்க்கும் வேண்டும்போதெல்லாம் குறைந்த வட்டியில் பணங்கொடுக்கப் "பாங்கி"களும் (Banks) நிறுவப்பட்டுள்ளன. பணத்தை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் சொற்பச் செலவில் அனுப்பிக்கொள்வதற்கு 'உண்டியல்' முறைகளும் (Bills of exchange) உண்டு. வியாபாரத்தின் பெருமையையும் சிறப்பையும் விவரித்துரைக்கிற் பெருகும்!

### வியாபாரத்தில் அபகாரம்

நிற்க. வியாபாரம் ஒருவருக்கொருவர் உபகார

மடையும் நிமித்தம் ஏற்பட்டிருக்கிறதென்று நாம் மேலே கூறினோம். ஆனால் வழக்கத்தில் அது அப்படியல்லாது அபகாரமாக விருந்து வருவதைக் காண்கிறோம். "குறையச் சொல்லி நிறைய அள" என்னும் பழமொழியைத் தலை கீழாய்த் திருப்பி, நிறையச் சொல்லிக் குறைய அளப்பாரும் உண்டு; வாங்குவதற்கு ஒரு நிறை, விற்பதற்கு வேறு நிறை; கொள்வது ஒரு நாழியால், கொடுப்பது வேறு நாழியால். மேலும் பெரிய வியாபாரிகள் சிறிய வியாபாரிகளின் வியாபாரத்தைத் தொலைக்க உன்னிக் கொஞ்சக்காலத்திற்கு விலையைக் குறைத்து விற்றுக்கொண்டு அவ்வியாபாரிகள் ஒழிந்த பிற்பாடு பழையபடியும் விலையை உயர்த்திப் பெருத்த இலாபம் அடைகிறார்கள். பொருள் மாற்றுதலில் நடக்கும் பெரும் ஏமாற்றுக்கள் கணக்கிலடங்கா! கூட்டுறவு முறையில் இயல்பாய் இயங்கவேண்டிய பொருள் மாற்றல் செவ்வனே நடைபெறுமேல், உலகத்தின் வறுமையிலும், பகையிலும், சண்டையிலும் பெரும்பாகம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கிப்போகும். இக்காலத்திலும் இவ்வுண்மையை உணராத சிலர் அயல் நாட்டு வியாபாரத்தின் மேல் ஏற்றுமதி இறக்குமதி வரிகளை விதித்துத் தன்தன் நாட்டு வியாபாரமும் இடர்ப்படுவதற்குக் காரணராகி இருந்து வருகின்றனர். இது மிகவும் விசனிக்கத்தக்கதே.

## பயிற்சி

(1) உங்கள் கிராமத்தின் முக்கிய விளைபொருள்கள் எவை? அங்கே செலவழியும் அளவு என்ன? மீந்தபாகம் எவ்வகையாய், எவ்வெவ்விடங்களுக்குச் செல்கிறது?

(2) உங்கள் கிராமத்திற்குப் பக்கத்திலிருந்தும் தூரத்திலிருந்தும் வரவழைக்கப்படும், பொருள்களின் விபரத்தையும் அளவையும் தெரிந்த வரையில் குறிக்க.

(3) உங்கள் தினசரி வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்கள் எவ்வெவை? அவை உங்களுக்கு வந்து சேரும் விதத்தை விவரிக்க.

(4) வியாபாரத்தில் ஒரு தேசத்திற்கும் மற்றொரு தேசத்திற்கும் ஏன் பகை யேற்படுகிறது?

(5) பின்வரும் ஸ்தாபனங்கள் வியாபாரத்திற்கு எப்படி அநுகூலமாயிருக்கின்றன? (1) தபால், தந்தி (2) பொருட்காட்சி சாலைகள் (3) வியாபாரிகள் சங்கம்.

---

# எட்டாம் அத்தியாயம்

## பணம்

பொருள் மாற்றுதலுக்கு உங்கள் கிராமத்திலேயே எண்ணிறந்த உதாரணங்கள் காணக்கிடக்கின்றன. நெல்லைக் கொடுத்துச் சோளத்தைக் கொள்ளுதலும், சோளத்தைக் கொடுத்துப் பிறதானியங்களைக் கொள்ளுதலும் உண்டு. மளிகை சாமான்கள் வாங்குவதற்குக் கிராம ஜனங்கள் பொதுவாகத் தங்கள் வீட்டிலுள்ள விவசாயப் பொருள்களையே கொடுக்கிறார்கள். இம்முறைக்குப் "பண்டமாற்று" (barter) என்று பேர். ஒரு சிறு கிராமத்தில் நடக்கும் பண்டமாற்று மிகச் சுலபமாகவும் அந்நியோந்நியமாகவும் நடந்து வருகிறது; அதில் யாதொரு இடைஞ்சலும் குழப்பமும் ஏற்படுவதில்லை.

### பண்டமாற்றுதலின் சிரமம்

ஆயினும் சிறிது செவ்வனே ஆராய்ந்தால் பண்டமாற்று மிகவும் சிரமமான முறையென்று தெரியவரும். ஒரு

பொருளைக் கொடுத்து வேறொரு பொருளை மாற்றிக் கொள்வதென்றால், முதலாவதாக, ஒருவனுக்கு மிகவும் அவசியமாக வேண்டும் பொருள் அவன் அயலானிடம் இருக்கவேண்டும்; இரண்டாவதாக அந்த அயலானுக்குத் தன்னிடம் இருக்கும் பொருள் தேவையாயிருக்கவேண்டும். ஏககாலத்தில் எப்பொழுதும் இவ்விரண்டு சந்தர்ப்பங்களும் ஒன்றுபடல் (Double Coincidence) துர்லபம்.

ஒருவருக்கொருவர் பக்கத்திலிருக்கும் நிலைமையிலேயே இச்சங்கடம் ஏற்படுமாயின் கொடுப்போரும், கொள்வோரும், தற்காலத்திற்போல், ஆயிரக்கணக்கான மைலுக் கப்பாலிருந்தால் எவ்வளவு சங்கடங்கள் ஏற்படும்? மாற்றிக் கொள்ள வேண்டிய பொருள்களும், பண்டைக் காலத்திற்போலச் சாதாரணமானவைகளல்ல; 'ஹென்ரி போர்டு' தன் 'மோட்டார் கார்' களுக்குப் பதிலாகப் பருத்தியை வாங்கினால் அவருக்கு அதனால் யாது பயன்?; அல்லது பருத்தியை விற்கும் கிராமவாசிக்கு 'மோட்டார் காரைக்'கொடுத்தால் யாது பிரயோஜனம்? இப்படிப்பட்ட நிலைமையில் பண்டமாற்று நடப்பதென்றால், "மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோடுவதை" யொக்கும்.

பண்டமாற்றுதலில் நடக்கும் வேறொரு சங்கடமுமுண்டு. ஒருவன் தன்னிடமுள்ள ஒரு பொருளைக் கொடுத்து அடுத்தவனிடமிருந்து தான் வேண்டும் வேறொரு பொருளைப் பெறுவதானால் இரண்டு பொருள்களும் ஒரே விலைமதிப்புடையனவா யிருக்கவேண்டும்; ஏனெனில் ஒவ்வொன்றும் அதனதன் பெறுமானத்திற்குள்ள சம்பந்தத்தில்தான் மாற்றப்படும். ஆனால் மாற்றப்படும் இரண்டு பொருள்களும் ஏக காலத்தில் ஒரே விலையுள்ளனவாக விருக்கமுடியுமா?

கண்ணனிடத்திலிருக்கிற ஒரு மேசையும் கோபாலனிடத்திலிருக்கிற முப்பது இராத்தல் நூலும் ஒரே மதிப்புள்ளதாயிருந்தால், இரண்டு பொருள்களும் ஒன்றற்கொன்று மாற்றிக் கொள்ளப்படும்; ஆனால் கோபாலனிடத்தில் பதினைந்து இராத்தல் நூல் மட்டுமே யிருந்தால், கண்ணன் தன் மேசையை இரண்டு துண்டாக வெட்டிக்கொடுக்கவேண்டும்; அல்லது கோபாலன் மீதிப் பதினைந்து இராத்தல் நூல் கொண்டு வந்து கொடுக்கும் வரைக்கும் காத்திருக்க வேண்டும். எனவே ஒவ்வொரு பொருளையும் அதனதன் விலை மதிப்புப்பிரகாரம் (ratio of their exchange values) "பண்டமாற்று" முறையில் மாற்றிக்கொள்வதுதான் மிகவும் சிரமமாகும். இக்குறையை நிவர்த்தி செய்வது எப்படி?

## ஓர் மதிப்புக் கருவி

எல்லாரும் எக்காலத்திலும் விரும்பத்தக்கதும்; எளிதில் எவ்விடத்திற்கும் சொற்பச் செலவில் கொண்டு போகத்தக்கதும்; நாட்பட விருந்தாலும் 'உப்பிருந்த பாண்டம்போற்' கெட்டுப் போகாததும்; எல்லாப் பொருள் களுக்கும் பொதுப் பொருளாகவும் நிற்பதுமான ஒரு பொருள் இருக்குமேல் அப்பொருளைக் கொடுத்து வேறெல்லாப் பொருள்களையும் மாற்றிக்கொண்டால் பண்டமாற்று இடையூறின்றி இனிது நடைபெறுமல்லவா? அப் பொருள், தன் மதிப்பைக்கொண்டு பிற பொருள்களின் மதிப்பை அளக்கும் மதிப்புக் கருவியாகவும் (Standard of Value) உபயோகிக்கப்படுமல்லவா? அத்தகைய பொருள் யாதெனின் அது பொன்னே.

## பொன்

நாம் முற்கூறிய குணங்கள் யாவும் பொன்னினிடம்

(gold) ஒருங்கே யமைந்து திகழ்கின்றன. பொன்னை விரும்பாதார் யார்? "பணம் என்றால் பிணமும் வாயைத் திறக்கும்" என்பது பழமொழி. குறைந்த உடம்பில் நிறைந்த மதிப்பை அடக்கியிருப்பதினால் பொன்னை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டுபோவதும் எளிது. எத்தனை காலம் இருந்தாலும் அது அழியாது, உருக்குலையாது, அழகு குன்றாது: ஆகலின் அது நிலையான விலைமதிப்பையும் (fixity of value) ஏற்று நிற்கும், அன்றியும் அதை வெட்டினாலும், குறைத்தாலும் அதன் பாகத்திற்குரிய மதிப்புச் (proportionate value) சிதையாது; ஆகலின் அதைப் பிரித்துப் பிரித்துக் குறைந்த மதிப்புள்ள பொருள்களைக் கொள்ளவும் உபயோகிக்கலாம். ஆகவே பொன் எல்லாப் பொருள்களையும் மாற்றிக்கொள்வதற்கு உபயோகிக்கப்படும் மிகச்சிறந்த பொதுப்பொருள் அல்லது மத்தியஸ்தப் பொருள் (medium of exchange) ஆகும்.

### நாணயங்கள்

ஆனால் ஒவ்வொரு கடவையும் நமக்கு வேண்டும் பொருள்களை வாங்கும்பொழுதெல்லாம் பொன்னைக் கொடுத்தால் அதன் 'மாற்றும்' 'நிறையும்' சரியாக விருக்கிறதாவென்று சோதித்தல்லவா பார்த்துக்கொண்டிருக்க வேண்டும்? இச்சிரமத்தை நீக்குவது எப்படி? குறிப்பிட்ட நிறையளவில் பொன்னை, (அல்லது வெள்ளி, நிக்கல், தாம்பிரம், முதலிய உலோகங்களை) சிறு சிறு பாகங்களாகத் துண்டித்து அதன் மதிப்பை எவரும் அறிந்துகொள்ளுமாறு நல்ல எழுத்துக்களிற் பொறித்து, எவரும் அச்சமின்றிக் கொடுக்கவும் கொள்ளவுந் தக்கதாக அரசாங்கத்தின் முத்திரையையுமிட்டு "நாணயங்கள்" (coins) ஆகச்செய்து விட்டால் நாம் முற்காட்டிய குறைகள் நீங்கிவிடுமல்லவா?

அந்நாணயங்களை எவரும் வெட்டிக் குறைக்காதபடி அவைகளின் விளிம்புகளில் அரம்போன்ற கூரிய வடுக்களும் பொறித்துக்கொள்ளலாம். நாணயங்களை யாவரும் செய்யவாரம்பித்தால் திருட்டும் மோசமும் நடக்குமாதலால் அரசாங்கத்தாரே நாணயத்திட்டமனைத்தையும் தம்கைக்குள் வைத்திருக்கிறார்கள். போலி நாணயங்களை அச்சிடுபவர்களுக்கு உயர்ந்த தண்டனையை அரசாங்கத்தார் விதிப்பதும் இக்காரணம் பற்றியே.




நாணயங்களின் உபயோகத்தை நாம் மறந்துவிடக் கூடாது. ஒருபொருளைக் கொடுத்து வேறொரு பொருளை

மாற்றிக்கொள்வதற்குப் பதிலாகப் பொன்,வெள்ளி முதலிய உலோகங்களினுற் செய்யப்பட்ட நாணயங்களைக் கொடுத்து நமக்கு வேண்டும் எல்லாப் பொருள்களையும் வாங்கிக் கொள்ளுகிறோம். பண்ட மாற்றுச் சுலபமாகவும் இடையூறில்லாமலும் நடைபெறவே நாணயங்கள் உபயோகிக்கப் படுகின்றன. எனவே நாணயமானது பண்டமாற்றுதற் குபயோகப்படும் கருவி யென்னலாம் (instrument or medium of exchange). நாணயம் ஏற்ற அளவில் இல்லா விட்டால் எல்லா வியாபாரமும் எல்லாத் தொழிலும் இடர்ப் படுகின்றன. ஏனெனில் பணத்தைக் கொண்டுதானே பிற பொருள்களை மாற்ற வேண்டியதிருக்கின்றது? பஞ்சத்தி லெல்லாம் பெரிய பஞ்சம் பணப்பஞ்சந்தான்! நிற்க,

## காகித நாணயம்

நாளுக்கு நாள் நாகரிகம் என்கிறார்கள். முன்னே மாட்டுவண்டியிற் சென்றவன் இப்பொழுது 'மோட்டார் கார்' தேடுகிறான்; முன் 'மோட்டார் காரி'ல் ஏறிச்சென்ற வன் இப்பொழுது ஆகாய விமானம் வேண்டுமென்கிறான். இங்ஙனமாகவே, இக்காலத்தவர் பொன், வெள்ளி நாணயங் கள் பாரமானவைகளென்றும், கர்ணடகப் பழக்கமென் றும், அச்சிடுதல், எண்ணுதல், முதலிய கடின வேலைகளும் வீண் செலவுகளும் அடங்கியனவென்றுஞ் சொல்லி, அவை களை நிராகரித்துப் புதிய நாணயமுறை யொன்றை உண்டு பண்ணி யிருக்கிறார்கள். அம்முறை நாணயத்தைக் காகிதத் தில் அச்சிடுவதாம்!

ஒரு காகித நாணயத்தின் (Paper Currency) மதிப்பு ஆயிரம் ரூபாய். என்ன வியப்பு! ஆயிரம் ரூபாய்களை எண்ணுவதானால் எவ்வளவு சிரமம்; சரிபார்ப்பதானால் எவ்வளவு சங்கடம்; கொண்டுபோவதானாலும் இரண்டு

ஆட்கள் வேண்டும்; ஆனால் 'ஆயிரம் ரூபாய் நோட்டை'யோ விரலுக்குள் வைத்து மடக்கிக்கொண்டு வீசி நடந்து போகலாம்; எண்ணும் சிரமமும் சரிபார்க்கும் தொல்லேயும் இல்லை; சொற்பச் செலவில் வேண்டு மிடத்திற்கு ஒரு சிறு உறையில் (cover) வைத்து அனுப்பிவிடலாம். காகித நாணயத்தில் இவ்வளவு சௌகர்யங்கள் இருப்பதினாற்றான் இதைப் பெரும்பாலும் உபயோகிக்கிறார்கள். இங்கிலாந்து தேசத்தில் சாதாரண வியாபாரப் பழக்கத்திற்குங்கூட அத்தேசத்துப் பொன் நாணயமாகிய 'பவுண்டு' (Pound, £) காண்பதரிதாம்! எல்லாம் காகித நாணயமே!

ஆனால் காகித நாணயத்தைச் சாதாரண ஜனங்கள் உபயோகிப்பதிற் பல சங்கடங்கள் உண்டு. ஒரு சிறு நெருப்பு பற்றினால் ஒருகோடி ரூபாய்கள் பெறுமான காகித நோட்டுக்கள் ஒருகணத்திற் சாம்பலாகிவிடும்; தண்ணீரில் நனைந்தால் கூழாகிவிடும்; இறுகப் பிடித்துக் கசக்கினால் உருக்குலைந்துபோகும்; ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அனுப்புவது எவ்வளவு எளிதோ, அவ்வளவு எளிதாகவே அவைகளைக் காணமற் போக்கடித்து விட்டு கஷ்டப்பட வேண்டியதுமாகும். நிற்க,

## காகிதம் பணமாகுமா?

காகிதம் பணமாகுமா வென்று சிலர் கேட்கலாம். "சர்க்கரையும் மாவும் சரியாமா"? வெறுங்காகிதத்தில் அரசர்தலையுடன் 'ஆயிரம் ரூபாய்கள்' என்றெழுதி அச்சிட்டுச் சர்க்கார் அதை அனுப்பிவிட்டால் அது அத்தகைய மதிப்பைப் பெறுமா? "குப்பையிற் கீரை முளைத்தாற் கப்பலுக்குக் காலாகுமா?" வென்றாற்போலக் காகித நாணயம் பொன் நாணயத்திற் கீடாகுமாவென்று எவரும் எண்ணுதல் இயல்பு.

ஆயினும் மேற்காட்டிய ஆயிரம் ரூபாய் நோட்டில் எழுதியிருப்பதை நீங்கள் வாசித்துப் பார்ப்பீர்களானால் அந்தத் தொகையை வேண்டும்போது உடனே கொடுப்பதாக அரசாங்கத்தார் உறுதிமொழி கூறி அதிற் கையொப்பமிட்டிருக்கிறார்கள். அவர்கள் வாக்கை நிறைவேற்றுவதற்காக அத்தொகையை, வெள்ளி, பொன், முதலிய நாணயங்களாகவே எப்போதும் பாங்கியில் வைத்திருக்கிறார்கள். இப்படியிருப்பதனாற்றான் எல்லாரும் காகிதத்தைப் பணத்திற்குச் சமானமாக ஒப்புக் கொள்ளுகிறார்கள். காகிதநாணயம் கள்ள நாணயமல்ல; அது பதில் நாணயம்; (Representative Paper Currency); அது பொன், வெள்ளி முதலான உலோகங்களினாற் செய்யப்பட்ட நாணயங்களுக்குப் பதிலாக உபயோகிக்கப்படுவது.

பதில் நாணயமாக விளங்கும்வரைக்கும் காகிதநாணயம் நல்ல நாணயமே. ஆனால் அதைப் பொன், வெள்ளி முதலான நாணயங்களுக்கு மாற்றிக் கொடுக்கச் சர்க்காருக்குச் செல்வமில்லையேல், "விடிந்தால் தெரியும் வெளிச்சம்" என்றாற்போலக், காகிதநாணயம் போலி நாணயமாகி விடும்! கண்ணாடியிற் கண்டபணம் கடனுக் குதவாத வாறாகி விடும். ஆனால் உண்மை நாணயங்களாக விளங்கும் வரை காகித நாணயங்கள் உலோக நாணயங்களைப் போலவே பண்டமாற்றுதலுக்கேற்ற நல்ல சாதனங்களே.

## பயிற்சி

(1) உங்கள் கிராமத்தில் பண்ட மாற்று எந்தப்பண்டங்கள் சம்பந்தப்பட்ட மட்டும் நடக்கிறது? எவ்வளவு தூரம் குறைந்திருக்கிறது? குறைந்திருப்பதற்குக் காரணங்கள் இருந்தால் அவற்றைக் குறிப்பிடுக.

(2) நமது தேசத்தின் நாணய வாய்ப்பாட்டைப் படிக்கவும்

சில்லரை நாணயங்கள் தாழ்ந்த உலோகங்களிற் செய்யப்பட்டிருப்பதேன்? விளிம்புகளில் வரையும் இல்லாதிருப்பதேன்?

(3) ஒவ்வொரு தேசத்திலும் நாணயங்கள் வெவ்வேறாகவிருப்பதேன்? அமெரிக்கா, பிரான்சு, ஜப்பான், சீனு தேசங்களின் நாணய வாய்ப்பாட்டைப் படிக்கவும்.

(4) இந்திய அரசாங்கத்தார் வெளியிட்டிருக்கும் காகிதநோட்டு ஒன்றை எடுத்து அதிற்கண்டிருக்கும் சகல வார்த்தைகளையும் குறிப்பிட்டு ஒவ்வொன்றிற்கும் தெரிந்தவரையில் காரணம் புகர்க.

(5) இந்தியாவை அரசாண்ட மகமத் தொக்லக் (1325-1351) அரசன் செப்புக்காசுகள் பதிப்பித்த விபரத்தை எழுதி, அந்நாணயத்திட்டம் கைகூடாததற்குக் காரணத்தை நன்கு விளக்குக.

---

## ஒன்பதாம் அத்தியாயம்

## விலை

ஒவ்வொரு பொருளையும் அதனதன் மதிப்புப்பிரகாரம் மாற்றிக்கொள்வதற்குச் சாதனமாக நாணயங்கள் உபயோகப்படுகின்றனவென்று முந்தின அத்தியாயத்திற் கவனித்தோம். நவதானியங்களை அளக்க நாழியும், கட்டிப் பொருள்களை நிறுக்கத் துலாக்கோலும், துணியை அளக்கக் கஜக்கோலும் உபயோகப்படுவது போல, பொருள்களின் மதிப்பை அளக்கப் பணம் உபயோகப்படுகிறது. பணம் மதிப்பை அளக்கும் அளவு கருவி (Standard of values).

### விலை யென்பது என்ன?

ஒருபடி நெய்யின் விலை ஒரு ரூபாய் என்று சொல்வதின் கருத்து என்னவென்ருல், அந்த நெய்யை வாங்குகிறவருக்கு அதில் அடங்கியிருக்கிற உபயோகமும் (Utility)

ஒரு ரூபாயில் அடங்கியிருக்கிற மதிப்பும் (Value) சரி யென்பதாம். விலை யென்பது பணத்தில் அடங்கியுள்ள மதிப்புக்கும் அதைக் கொடுத்து அதற்குப் பதிலாகப் பெற்றுக்கொள்ளும் மற்றப் பொருள்களிலடங்கியுள்ள மதிப்புக்குமுள்ள சம்பந்தமே. இந்தச் சம்பந்தமே (ratio) விலையாம்; இது எங்ஙனம் ஏற்படுகிறது?

## பயனும் மதிப்பும்

நாம் உபயோகிக்கும் எல்லாப் பொருள்களும் "பயன்" (utility) உடையனவாயிருக்கலாம்; ஆயினும் எல்லாம் 'மதிப்பை' (value) உடையனவல்ல. தண்ணீர் காற்று முதலானவை உயிர்வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாதன; ஆனால் அவைகளுக்குப் பெரும்பாலும் யாதொரு விலைமதிப்பும் கிடையா; பொன், வெள்ளி, முதலிய உலோகங்களும், வைரம் முத்துக்கள் போன்ற பொருள்களும், தண்ணீர் முதலான பொருள்களைப்போல மிகுதியான பயன் அற்றவைகளாயிருப்பினும் மிகவும் விலையுயர்ந்தன.

## விற்போர் விலை

இவ்வித்தியாசத்திற்குப் பல காரணங்கள் உள; அவற்றுள் முக்கியமானவை பின்வருவன :— விலையேறப் பெற்ற பொருள்கள் கிடைப்பதற் கரியன; மிகுந்த உழைப் படங்கியன; செய்வதற்கு மிகச் செலவு பிடிப்பன; பலராலும் விரும்பப்படினும் பணம் மிகுந்த சிலராலேயே வாங்கக்கூடியன. சுருங்கச் சொல்லில் அநேக பொருள்களின் விலை பெரும்பாலும் அவைகளைச் செய்ய அல்லது உண்டுபண்ண அடங்கிய சகல செலவுகளையும் (Costs of production) சார்ந்திருக்கிறது. அப்படியாயின் பொருள்களின் எண்ணிக்கை அதிகமாக அதிகமாக அவை

களின் விலையும் அதிகமாகும் அல்லவா? இதைப் "பொருள் கொடுக்கப்படும் பிரமாணம்." (Law of Supply) என்னலாம். இதைப் பின்வரும் படத்தினால் * விளக்கிக் காட்டலாம்.




பழங்களின் சங்கியை அதிகமாக அதிகமாக விலை அதிகப்படுமாகையால் விற்போர் விலையைக்காட்டும் கோடு கீழிருந்து மேல் நோக்கிச் செல்லுகிறது.

---

* சதுரப்படங்களின் மூலமாக (Graphical representation) சில உண்மைகளை விளக்கிக் காட்டுவது எளிதாகலின் இப்புத்தகத்தில் இப்படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

பம திகந்தக் கோட்டின் மேல் பழங்களின் எண்களைக் குறிப்பிட்டிருக்கின்றோம்; பத செங்குத்துக் கோட்டின் மேல் பழங்களின் விலையை ரூபாயிற் குறிப்பிட்டிருக்கின்றோம். ப என்னும் புள்ளியிலிருந்து ஓர் வளைவுகோட்டை இழுக்க; அக்கோடு போகும் மார்க்கத்திற் குறிப்பிடும் புள்ளிகளிலிருந்து பழங்களின் விலையைச் சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம்.

## வாங்குவோர் விலை

ஆயினும் வாங்குவோர் மனப்பாங்கு எத்தன்மையது? பொதுவாகக் கூறினல், பொருள்களின் விலை எவ்வளவு குறைவாக விருக்கிறதோ அவ்வளவுக் கதிகமாக அவை வாங்கப்படும். உதாரணமாக, நிலைக்கண்ணாடி நான்கு ரூபாய்களாக விற்றகாலத்தில் 400 கண்ணாடிகள் விலையாகுமானல், கண்ணாடி யொன்று இரண்டு ரூபாய்களாக விற்கும் போது குறைந்த பக்ஷம் 600 கண்ணாடிகள் விலையாகலாம். பணம் காய்க்கிறதா அல்லது வானத்திலிருந்து விழுகிறதா? கஷ்டப்பட்டுத் தேடியதல்லவா? ஆகலின் விலை குறையக் குறைய வாங்குகிற பொருள்களின் சங்கியை அதிகப்படும். இதுவே 'பொருள்கள் வாங்கப்படும் பிரமாணம்'' (Law of Demand). இதைப் பின்வரும் படத்தினல் விளக்கிக் காட்டலாம்.




விலை குறையக் குறைய வாங்கப்படும் பழங்களின் எண்ணிக்கை அதிகப்படுவதால் வாங்குவோர் விலையைக் காட்டும் கோடு மேலிருந்து கீழ்நோக்கிச் செல்லுகிறது.

விற்போர் எவ்வளவு அதிக விலைக்கு விற்கக் கூடுமோ அவ்வளவு அதிக விலைக்கு விற்கப் பிரயாசப்

படுவார்கள்; வாங்குவோர் எவ்வளவு குறைந்த விலைக்குக் கொள்ளக்கூடுமோ அவ்வளவு குறைந்த விலைக்குக் கொள்ளப் பிரயாசப்படுவார்கள். "தவளை தண்ணீர்க் கிழுக்க, எலி தரைக்கிழுக்க" வென்றாற் போல, இருதிறத்தார் போக்கும் ஒன்றற்கொன்று எதிரிடையாக விருக்கிறது! இப்படி இருந்தால் விலை எப்படி முடிவு செய்யப்படும்?

போட்டி

ஒரு பெரிய கடை வீதியில் ஒவ்வொருவகைப் பொருள்கள் விற்குமிடத்திலும் பலகடைகள் உண்டு. அங்ஙனமே அங்கு வாங்க வருவாரும் பலர். "வாங்குவார் கோடி, விற்பார் கோடி" என்பது பழமொழி யல்லவா! விற்கிறவன் எவ்வளவு சீக்கிரத்தில் உயர்ந்த விலைக்கு விற்கக் கூடுமோ அவ்வளவு சீக்கிரம் உயர்ந்த விலைக்கு விற்க ஆசைப்படுவான்; அங்குள்ள ஒவ்வொரு வியாபாரியும் அங்ஙனம் செய்யும்போது அவர்களுக்குள் போட்டி ஏற்படும்; எனவே தங்கள் கொள்முதலும் இலாபமும் அடங்கிய மிகக் குறைந்த (கடைசி பைசா வரைக்கும்) உயர்ந்த விலை எதுவோ அது கிடைத்தாற் போதுமென்று விலை தீர்மானித்து விடுவார்கள்.

அங்ஙனமாகவே கடையில் வாங்க வரும் பலருக்குள்ளும் (அங்கிருக்கும் பொருள்களின் அளவுக்குத் தக்கவாறு) கிரமமான போட்டி யேற்படுவது இயல்பு. ஏனெனில் தாங்கள் தகுந்த சமையத்தில் வாங்கா விட்டாற் பிறர் வாங்கி விடுவார்கள்; பின்னர் ஏமாறிப் போகவேண்டுமென்று ஒவ்வொருவரும் எண்ணுவார்கள். இப்போட்டியினால் அப்பொருளின் விலை உயரும். ஆயினும் தாங்கள் கொள்ளும் பொருளின் உபயோகமானது (utility) தாங்கள் கொடுத்து வாங்கும் விலையைக் காட்டும் பணத்தின்

மதிப்புக்குச் (கடைசி பைசா வரைக்கும்) (Value) சரியாக விருந்தால் மட்டும் விற்போர் கூறும் விலையை ஒப்புக் கொள்ளுவார்கள். எனவே இறுதியாக விற்போரும் வாங்கு வோருமாகிய இருதிறத்தாருடைய விலையும் ஒன்று படும் போது (balancing of demand and supply prices) முடிவாகும் விலையே ஒரு கடையிலுள்ள (market) பொருள்களுக் கேற்படும் விலையாகும்.

### மார்ஷலின் உதாரணம்

மார்ஷல் (Marshall) என்னும் ஆங்கிலப் பொருள் நூல் ஆசிரியர் இதற்குச் சிறந்த ஒருதாரணங் கூறியுள்ளார். ஒரு கத்தரிக்கோலிற்கு இரண்டு அலகுகளுள்ளன; அவற்று ளேதேனும் ஒன்றை மட்டுமே அசைப்பதினுல் ஒரு காகி தத்தைத் துண்டிக்க முடியாது. இரண்டு அலகுகளையும் ஒன்றுபட வைத்து வெட்டினுல் மட்டும் காகிதத்தைத் துண் டிக்கலாம். அதுபோலவே விற்போர் விலையும் வாங்குவோர் விலையும் ஒன்று பட்டாலன்றி விலை முடிவாதல் கூடாது. இதைப் பின்வரும் படத்திற் குறிப்பிட்டுக் காட்டலாம்.




இப்படத்திற் காட்டியபடி 8 பழங்களின் விலை 5 ரூபாயாக முடிவில் தீர்மானிக்கப்பட்டது .விலை 5 ரூபாயானுல் மட்டும் விற்ப

வர் "கட்டும்' என்பார்கள்; அந்த விலைக்கு மேற்போனால் வாங்குகிற வர்கள் "அப்பழங்கள் தேவையில்லை" யென்று போய்விடுவார்கள். எனவே இருதிறத்தாருக்கும் பொருத்தமாக இறுதியிலமைந்த விலை இதுவே (5 ரூபாய்).

இவ்வளவுதானா? இவ்வளவு சாமான்யமான விஷயத்தைக் கூற இவ்வளவு சம்பிரதாயமா? "கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா?" வென்று சிலர் கேட்கலாம். ஆம் விஷயம் சாதாரணமானதே. 'பொருள் நூலில்' நாம் கற்பது நாடோடிய வழக்கத்திலும் எல்லோருடைய அநுபவத்திலும் கண்டவைகளே; எனினும் இச் சாதாரணவுண்மையை விளக்கமுற அறியாதவர்கள் எத்தனை பேர்! நிற்க.

## கடைசிப் பாகத்து மதிப்பு

ஒரு சந்தையில் அல்லது கடையில் இருதிறத்தாரும் கடைசிப் பைசா வரைக்கும் கணக்குப் பார்த்து விலை முடிவு செய்கிறார்கள் என்று நாம் முற்கூறியது வழக்கத்திற்குப் பொருந்துமா? வாங்குவோரிற் சிலர் அவசரப்பட்டு அதிக விலை கொடுப்பதும், விற்போரிற் சிலர் குறைந்த விலைக்கு விற்று விடுவதும் சாதாரணம். ஆனால் விற்போர் நெடு நாளாகக் குறைத்தே விற்றுக்கொண்டிருந்தால் முதலழிய வியாபாரம் பண்ணுவதாய் முடியும். வாங்குவாரும் எக் காலத்திலும் கண்மூடித்தனமாக உயர்ந்த விலை கொடுத்தே வாங்கிக்கொண்டிரார்கள். எனவே நாளடைவில் இருதிறத் தாரும் ஆலோசித்துக் கணக்குப் பார்த்தே வியாபாரஞ் செய்வார்கள்.

வாங்குகிறவர்கள் தாங்கள் கொடுக்கும் பணத்தின் கடைசிப் பாகத்து மதிப்புக்குச் (marginal value of

money) சரியான பயனைப்பெற முயல்வார்கள். விற்பவர்கள் தங்களுடைய பொருள்களைச் செய்வதற்கு அடங்கிய செலவுகளின் கடைசிப் பாகத்து மதிப்பையும் (Marginal cost of production) பெற்றுக்கொள்ள முயல்வார்கள். ஒவ்வொரு தொழில் முதலாளியும் தன் தன் தொழிலின் அபிவிருத்தியையே நாடி உழைத்து வருவதனால், பொருள்களைச் செய்வதற்குரிய செலவுகளை எவ்வளவு தூரம் குறைத்துக் கொண்டுவர முடியுமோ அவ்வளவு தூரம் குறைத்துக் கொண்டு வருவான். ஆகவே முடிவில் விலை தீர்மானிக்கப் படுவதற்கு ஆதாரமாகவுள்ள விற்போர் விலை (supply price) கடைசிப் பாகத்து மதிப்பைக் காட்டும் செலவு (Marginal cost of production) ஆகும்.

இவ்வளவு சுருக்கமாகக் கூறிவிட்டதனால் எல்லாப் பொருள்களின் விலையும் எவ்வாறு தீர்மானப்படுகிறதென்பதை நாம் விளக்கி விடவில்லை. இங்குக் கூறியது பொது விதி போன்றது; அடுத்த புத்தகத்திற் பல சிறப்பு விதிகளும் விலக்குகளும் கூறுவோம். இங்குக் கூறிய பொது விதியின் உதவியினால் உங்கள் அநுபவத்திற் காணப்படும் பல பொருள்களின் விலைகள் எவ்வாறு தீர்மானப்படுகிறதென்பதை ஒருவாறு கூறலாம்.

## பயிற்சி

(1) பூ, காய், கறிகள், மீன் முதலானவைகளின் விலை ஒரு சந்தையில் ஒரே நிலையில் நிற்காது அடிக்கடி மாறுதலடையக் காரண மென்ன?

(2) கைநெசவுத் தறியில் செய்யப்படும் ஏதாவது ஒருவகைத் துணியைச் செய்வதற்கடங்கிய சகல செலவுகளையும் விவரிக்க. அச் செலவுகளுக்கும் அத் துணி விற்கிற விலைக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது? செய்யுஞ் செலவு குறைந்தால் விற்கிற விலை குறைகிறதா? அநுபவத்தில் கண்டதைக் குறிப்பிடுக.

(3) ஒரு வருஷத்தில் எந்தெந்த மாதங்களில் நெல்லின் விலை ஏறுகிறது? எந்தெந்த மாதங்களில் அது இறங்குகிறது? காரணங் கூறுக.

(4) ஒரு கடை வீதியிற் சென்று 'கறார்விலை' யென்று விற்கப்படும் பொருள்கள் எவையெனக் கண்டுபிடி. அப்பொருள்கள் அவ்வாறு விற்கப்படுவதற்கும் பழங்கள் போன்ற சில பொருள்கள் அவ்வாறில்லாததற்கும் காரணங் கூறு.

(5) ஏதாவது இரண்டு பொருள்களின்(சர்க்கரை, எண்ணெய்) விலை ஏற்றத்திற்கோ இறக்கத்திற்கோ உள்ள காரணங்கள் அனைத்தையும் (தெரிந்த வரையில்) விவரிக்க.

---

## பத்தாம் அத்தியாயம்
## வியாபாரம்

---

ஏழாம் அத்தியாயத்தில் பொருள் மாற்றுதல் நடக்கும் முறைகளைச் சிறிது விவரித்தோம். எட்டாம் அத்தியாயத்தில் பொருள்களை மாற்றிக்கொள்வதற்கு நாணயங்கள் எவ்வாறு உபயோகப் படுகின்றனவென்று கூறினோம். ஒன்பதாம் அத்தியாயத்தில் நாணயத்தின் மதிப்புக்கும் பொருள்களின் மதிப்புக்குமுள்ள சம்பந்தமே விலை எனவும், அவ்விலை எவ்வாறு நிதானப்படுகிறதென்பதையும் ஒருவாறு சுருக்கிக் காட்டினோம். இவ்வத்தியாயத்தில் ஒரு தேசத்தின் பல பாகங்களுக்குள்ளும், ஒரு தேசத்திற்கும் பிற தேசங்களுக்கும் வியாபாரம் எழுதற்குரிய காரணங்களையும், எவ்வளவு தூரம் அது நடைபெறுமென்பதுமான விஷயங்களையும் ஆராய்வோம்.

## வியாபாரத்திற்குக் காரணங்கள்

நமக்கு வேண்டிய உணவுப் பொருள்களும் பிற பொருள்களும் நாமிருக்குமிடத்திலேயே விளைவதும், செய்யப்படுவதுமா யிருக்குமானால் வியாபாரம் ஏற்படாது. ஆறு, குளம், கால்வாய் முதலான நீர்ப்பாசன வசதிகள் இல்லாத நிலங்களில் நெல் விளையுமா? நெல் விளைவிக்கும் வயல் நிலங்களில் தொழிற்சாலைகள் நிறுவினால் நெல் எங்கு விளையும்? இங்கிலாந்து மிகவும் குளிர்ச்சியான தேசம்; அங்கு பருத்தி விளைவதில்லை. ஆகவே அவர்களுக்கு வேண்டிய பருத்தி உஷ்ணதேசங்களிலிருந்து தான் போக வேண்டும். நிலக்கரி, இரும்பு, தங்கம், முதலிய உலோகங்கள் வெட்டி யெடுக்கும் கனிகளும் பூமியின் எல்லாவிடங்களிலும் அமைந்தில. எனவே பூமியின் மேற்பரப்பாகிய நிலத்தின் தன்மை வேறுபட்டிருப்பதினாலும், பூமியின் சீதோஷ்ணஸ்திதி ஒவ்வொரு பாகத்திலும் வித்தியாசப்பட்டிருப்பதினாலும், எல்லாத்தொழில்களும் ஒரே இடத்தில் நடைபெற முடியா. மேலும், உலகத்தின் நாலு திசைகளிலும் வசிக்கிற மனிதர்களுக்குள்ளும் கல்விப் பயிற்சியிலும் தொழில் செய்யும் திறமையிலும் மிகுந்த வித்தியாசங்கள் காணப்படுகின்றன. ஆகவே ஒரு தேசத்திற்கும் அடுத்த தேசத்திற்கும் ஒரு தேசத்திலேயே அதன் ஒரு பாகத்திற்கும் வேறொரு பாகத்திற்கும் வியாபாரம் ஏற்படுதல் இயல்பு.

வியாபாரம் இருவகைப்பட்டது. ஒரு தேசத்திற்குள்ளேயே நடக்கும் வியாபாரம் "உள்நாட்டு வியாபார" மெனவும், ஒரு தேசத்திற்கும் மற்றொரு தேசத்திற்கும் நடக்கும் வியாபாரம் "வெளி நாட்டு வியாபார" மெனவுங்

கூறப்படும். உள்நாட்டு வியாபாரம் வெளிநாட்டு வியாபாரம் ஆக வியாபாரம் இருவகை.

ஒரு தேசத்திற்கும் மற்றோர் தேசத்திற்கும் ஒரு தேசத்திலேயே ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கும் வெவ்வேறு பாகங்களிலும் இயற்கையில் அமைந்துள்ள வித்தியாசங்களினாலே வியாபாரம் ஏற்படுகிறதென்று முற் கூறினோம். இனி அது எந்த அளவில் ஏற்படுகிறது? எக் காரணங்களையிட்டு வியாபாரம் இடர்ப்படும்? என்பன போன்ற விஷயங்களை ஆராய்வோம்.

## உள்நாட்டு வியாபாரம்

தற்காலத்தில் நமது தேசத்தின் தென்பாகத்திற் பஞ்சம் ஏற்படுமாயின் வங்காளத்திலிருந்தும், பர்மாவிலிருந்தும் நெல் மூட்டைகள் திரள் திரளாக வந்து மலைபோற் குவிந்து விடுகின்றன. காசியிலும் காச்சியிலும் செய்யப்படும் பட்டுப் புடவைகள் கன்னியாகுமரி வரையுஞ் சென்றுலாவுகின்றன. பம்பாய் நகரத்துத் துணிமணிகள் பட்டிதொட்டிகளிலெல்லாம் பரவியிருக்கின்றன. இவ்வாறாக, ஒரு தேசத்தின் உள்நாட்டு வியாபாரம் யாதொரு இடையூறின்றி இனிது நிகழுவதேன்?

காரணம் நன்கு தெரிவீர்கள். நமது தேசமுழுவதிற்கும் ஒரே நாணயத்திட்டமிருக்கிறது; நாணயம் மாற்றுவதில் சங்கடங்கள் யாதொன்றுமில்லை. ஓரிடத்திலிருந்து வேறோரிடத்திற்குக் கொண்டு போகும் பொருள்களின் பேரில் வரியும், தீர்வையுங் கிடையா. பம்பாயிலுள்ள பாங்கிகளுக்குப் பணம் தேவையானால் சென்னையிலுள்ள பாங்கிகள் கொடுத்துதவலாம். அஸாம் மாகாணத்துத்

தேயிலைத் தோட்டங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமானால் வங்காளத்திலிருந்தும் சென்னையிலிருந்தும் திரள் திரளாகப் போகலாம். டெல்லி நகரத்தில் ஒரு தொழிற்சாலை நிறுவ ஒரு பெயர்பெற்ற தொழில்முதலாளி எண்ணினால், அதற்குரிய மூலதனத்தைத் தேசத்தின் நாலு திசைகளிலுமுள்ளவர்களிடம் பெற்றுக் கொள்ளலாம். மேலும் பம்பாயிலும், சென்னையிலும், கோயம்புத்தூரிலும் தனித்தனியே நிறுவப்பட்ட பல நெசவுத் தொழிற்சாலைகளும் ஒன்றற்கொன்று போட்டி போட்டுத் (Competition) தொழிற் செய்து வரலாம். எனவே பொருள்கள் உழைப்பு, முதல் முயற்சி ஆகிய நால்வகைச் சாதனங்களும் ஒரு தேசத்தின் எப் பாகங்களுக்கும் எவ்வித இடையூறுமின்றிக் கொண்டு போகப்படுகின்றன.

இக்காரணங்களினாலே ஒரு சந்தையில் அல்லது ஒரு கடையில் இருவருக்குள் பொருள் மாற்றுதலில் எவ்வாறு விலை நிதானப்படுகிறதோ (ஒன்பதாம் அத்தியாயம் பார்க்க) அவ்வாறே ஒரு தேசத்தின் வெவ்வேறு பாகங்களிலுமுள்ள வாங்குவோருக்கும் விற்போருக்கும் ஏற்படும் கிரமமான போட்டியினால் முடிவாகத் தீர்மானிக்கப்படும் விலை எதுவோ அதைப் பொறுத்தே உள்நாட்டு வியாபாரம் நிகழும்.

## அயல்நாட்டு வியாபாரம்

அயல் நாட்டு வியாபாரமோ அவ்வாறன்று ஐரோப்பிய கூலியாட்கள் மத்திய ஆப்பிரிக்காவிற்காவது, இலங்கைக்காவது சென்று தோட்டங்களைப் பயிரிட முடியாது; அங்ஙனமாகவே இந்தியர்கள் உருஷியாவிலும்,

உருஷியர்கள் தென் அமெரிக்காவிலும் போய் வேலை செய்ய முடியாது. ஒவ்வொரு தேசத்தின் சீதோஷ்ண நிலைமையும் வெவ்வேருக விருக்கிறது. வேலையாட்கள் போகச் சாத்தியப்பட்டாலும் அத்தத்தேயத்து அரசாங்கத்தினர் சம்மதியார்கள். உழைப்பாளரைப் போலவே முதலும் எளிதில் ஒரு தேசத்திலிருந்து வேருெரு தேசத்திற்குப் போகக்கூடாததாயிருக்கிறது. ஒவ்வொரு தேசத்தின் நாணயத்திட்டங்களும் (Currencies) வெவ்வேருனவை. பாங்கி முறைகளிலும் வித்தியாசங்களுண்டு. வரி, தீர்வை விகிதங்களிலும் பல பேதங்களுண்டு. இக்காரணங்கள் பற்றி, உழைப்பு, முதல், முயற்சி ஆகிய சாதனங்கள் எளிதில் ஒரு தேசத்திலிருந்து வேருெரு தேசத்திற்குக் கொண்டு போகப்படத்தக்கனவல்ல.

எனவே கிரமமான போட்டியினல் வாங்குவோரும் விற்போரும் முடிவாகத் தீர்மானிக்கும் விலையைப் பொறுத்து அயல் நாட்டு வியாபாரம் நிகழாதென்பது பெறப்படும். ஏனெனில் ஏதாவது ஒரு பொருளின் விலை நிதானப்படுவதற்கு இயல்பாய் ஏற்படக்கூடிய போட்டிக்குரிய சந்தர்ப்பங்கள் (Conditious of free competition) ஒரு தேசத்திற்கும் மற்ருெரு தேசத்திற்கும் கிடையா. பின்னை எவ்வாறு வெளிநாட்டு வியாபாரத்தின் அளவு திட்டப்படுகிறது?

வரிப்பளுவில்லாத வியாபாரம் (free trade) இரு தேசங்களுக்கும் இருக்குமேல், ஒவ்வொரு தேசமும், தன் தன் சௌகர்யங்களுக்கு ஏற்றவாறு, எப்பொருளை உண்டு பண்ணுவதில் முயற்சித்தால் அடுத்த தேசத்தைக் காட்டிலும் அதிக அநுகூலங்கள் (Comparative advan-

tages) பெறலாமோ அப்பொருளையே உண்டு பண்ண முயலும் உதாரணமாக அமெரிக்காவைப்போல இங்கிலாந்து தேசத்தில் சொற்பச் செலவில் கோதுமை விளைவிப்பது கூடாதகாரியம்; ஆகலின் ஆங்கிலேயர் தங்கள் உணவுக் குரிய கோதுமையை அமெரிக்காவிலிருந்து வரவழைத்துக் கொண்டு, கோதுமை விளைவிப்பதைக் காட்டிலும் அதிக இலாபகரமான கைத்தொழில்களை நடத்தி வருகிறார்கள். நாம் இப்படிக் கூறுவதனால் ஆனது பற்றி ஆங்கிலேயர் தங்கள் தேசத்தில் கோதுமை விளைவிக்கிறதேயில்லையென்று நினைந்து விடக்கூடாது. கோதுமை விளைவிப்பதைக் காட்டிலும், கைத்தொழில்களில் முயற்சிப்பது மிகுந்த இலாபகரமாக விருப்பதினால் பிந்தினதிலேயே மிகவும் ஈடு பட்டிருக்கிறார்கள் என்பதாம். இதுவே உள்நாட்டு வியாபாரத்திற்கும் வெளி நாட்டு வியாபாரத்திற்கு முள்ள முக்கிய வித்தியாசம்.

ஆனால் நம் முற்கூறிய விதி இரு தேசங்களுக்கும் இடையூறில்லாத வியாபாரம் (Free trade)நடக்குங் காலத் திலேயே பொருந்தும். உதாரணமாக, விவசாயிகள் தேசத் திற்கு மிகவும் இன்றியமையாதவர்கள்; யுத்தம் வந்த காலத்தில் உணவுப் பொருள்கள் போதிய அளவு இல்லாத தேசம் மிகவும் இடர்ப்படும் என்றுஎண்ணி விவசாயத்தையும் விருத்தி செய்ய ஆங்கில அரசாங்கத்தினர் எண்ணி, அமெரிக் காவிலிருந்து வரும் கோதுமையின் மேல் வரி விதித்தால், இங்கிலாந்தில் கோதுமை விளைவிப்பது இலாபமாக மாறி விடும்: அப்பொழுது கைத்தொழில்களும் விவசாயமும் இரண்டும் ஒருங்கே முன்னேற்ற மடைந்து கொண்டு போகலாம். தற்சமையம் ஒவ்வொரு தேசமும் இவ்வித

நோக்கத்துடனே தத்தம் கைத்தொழில்களையும் பிற தொழில்களையும் ஆதரித்து வருகின்றது. இவையனைத்தையும் இரண்டாம் புத்தகத்தில் விரிவாகக் கூறுவோம்.

## பயிற்சி.

1. உங்கள் கிராமத்திற்கும் அடுத்த கிராமத்திற்கும் நடக்கும் வியாபாரத்தை விவரிக்க. அவ்வியாபாரம் அவ்வாறு நடப்பதற்குக் காரணமென்ன?

(2) ஒரு "ரெயில்வே ஸ்டேஷனுக்குச்" சென்று, அங்கு ஏற்றுமதி, இறக்குமதியாகும் பொருள்கள் இவையிவையெனவும், எவ்வெவ்விடங்களுக்கென்றும் கண்டுபிடி.

(3) நமது தேசத்தின் போக்கு வரவுச் சாதனங்களைப் பற்றி ஓர் வியாசம் எழுதுக.

(4) நமது தேசத்திற்கும், இங்கிலாந்து தேசத்திற்கும் என்னென்ன முக்கிய பொருள்களில் வியாபாரம் நடக்கிறது? தெரிந்தவளவில் அதற்குக் காரணங்கள் கூறுக.

(5) அமெரிக்காவிலிருந்தும் இங்கிலாந்திலிருந்தும் நமது தேசத்திற்குக் கொண்டுவரப்படும் ஏதாவது சில பொதுப் பொருள்கள் எவையெனவெழுதுக ('மோட்டார் கார்' போல்வன). அப்பொருள்களின் விலையில் அவ்விரண்டு தேசங்களுக்கும் போட்டியேற்படுமா?

# பதினோராம் அத்தியாயம்
# பொருளின் விபாகம்

நமக்கு வேண்டும் உணவுப் பொருள்களும் ஏனைய பல பொருள்களும் எவ்வாறு உண்டாக்கப்படுகின்றன வென்று முதல் ஐந்து அத்தியாயங்களிலும் கூறினோம். அவ்வாறு கூறியவிடத்துப் பெரும்பாலார் தத்தம் உபயோகத்துக்கு வேண்டும் பொருள்களை மட்டும் உண்டாக்காது விற்பனைக்காகப் பிறருக்கும் வேண்டியவற்றை ஏராளமாகச் செய்து வருகின்றனர் எனக் காட்டினோம். இதனாற்றான் இக்காலத்தில் புதிய முறைகளில் விவசாயம் நடக்கிறது; பிரமாண்டமான தொழிற்சாலைகள் நிறுவியிருப்பதும் இக் காரணத்தினாலேயாகும்.

தத்தம் உபயோகத்துக்கு மிஞ்சிய பொருள்களை விளைவிப்பதனாலும் உண்டுபண்ணுவதனாலும் 'பொருள் மாற்றுதல்' ஆகிய வியாபாரம் ஏற்படுகிறதென்றும், அவ் வியாபாரம் எளிதில் நடைபெறவேண்டியே பணமும், "பாங்கி"களும், போக்கு வரவு சாதனங்களும் அமைக்கப் பட்டுள்ளன வென்றும் ஆறும் அத்தியாயந் தொடங்கி இவ் வத்தியாயம் வரைக் கூறினோம்.

## விவசாயியின் வருமானம் பங்கிடப்படுதல்

இனி, இவ்வாறு பொருளை மாற்றிக்கொள்வதனால் யார் யார் பலனடைகிறார்கள்? எவ்வளவில் பயனடைகிறார்கள்? என்பன போன்ற விஷயங்களை இவ்வத்தியாயந் தொடங்கி இறுதி வரையும் விவரிப்போம்.

ஒரு விவசாயி தனது ஒரு ஏக்கர் நிலத்தில் பத்துக் கலம் நெல்லை விளைவித்து, அதை விற்றதில் நூறு ரூபாய் பெற்றுக்கொண்டான் என்று வைத்துக்கொள்ளுவோம். ஆனால் அந்நூறு ரூபாய்களும் சீக்கிரத்தில் பின் வருமாறு பங்கிடப்படும்; அவைகளில் ஒரு சிறுபாகம் விதை, எரு வாங்கின கணக்கிற்கும்; மற்றொரு சிறுபாகம் ஏர் உழுதவர்களுக்கும், களை பிடுங்கினவர்களுக்கும், நீர்ப்பாய்ச்சினவர்களுக்கும் கொடுக்கப்படும். அந்நிலத்திற்குரிய வாரமாகவோ, அல்லது அந்நிலத்தை வாங்கிய முதலுக்குரிய வட்டியாகவோ வேறொரு பாகம் போய்விடும். இன்னொரு சிறுபாகம் தன் பொருட்டு அரசு புரிந்தாருக்குரிய கூலியாக வரிப்பணமாகப் போய் விடும். எஞ்சிய பாகந்தான் தன் உழைப்புக்கும் முயற்சிக்குமுரிய கூலியாக நிற்கும். இதைப் பின்வரும் படத்தால் விளக்கிக் காட்டலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| விதை, எரு | பிறசெலவுகள் | வாரம் | வரி | இலாபம் |

என்னை?, ஒருவர் உழைக்கப் பலர் உண்பதா? ஒருவர் பொருளைப் பலரும் பங்கிட்டுக் கொள்வது நியாயமாகுமா? வருட முழுவதும் உழைத்து விட்டு ஒரு சிறு பாகத்தை மட்டுமா பலனாக அடைந்து நிற்பது?

## ஓர் ஆடையிற் பங்குபெறும் பலர்

இன்னம் ஒருதாரணம். நமது நாட்டிற் கைந்நெசவினாற் செய்யப்பட்ட ஒரு ரூபாய் பெறுமான ஒரு ஆடையிற் பின்வருமாறு செலவுகள் அடங்கியிருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள்.

| | | |
|---|---|---|
| பருத்தி விளைவித்த விவசாயக்கூலி | அணா | 3 |
| நூல் நூற்றவர் கூலி | ,, | 3 |
| சாயந் தோய்த்தோர் கூலி (சாய முட்பட) | ,, | 3 |
| நெய்வோர் சம்பளம் | ,, | 6 |
| விற்போர் சம்பளம் | ,, | 1 |
| ஆ.கூ. ரூ. | | 1 |

இதை அடியிற் கண்ட படத்தால் விளக்கிக் காட்டலாம். இந்தச் செலவு சம்பந்தமாய் ஒரு ரூபாய் எத்தனை பங்காகப் பங்கிடப்படுகிறதென்று பாருங்கள்!




## பொருள் விபாகத்தின் வியாபகம்

இனி, விவசாயி பெற்றுக்கொள்ளும் பாகமாகிய மூன்றணா எவ்வாறெல்லாம் பங்கிடப்படுகிறதென்பதை

ஆராய்வாம். அத்தொகைதான் நிலச்சுவானுக்குரிய வாரமும், விதை, எரு முதலியன வாங்கிய கிரயமும், கலப்பை செய்த தச்சனுக்குரிய கூலியும், கழனியில் வேலை செய்தவர்களுக்குரிய சம்பளமும் ஆகிய பல பங்குகள் வைத்துக் கொடுக்கப்படுகின்றது. இம்மூன்றனுள் சிறு சிறு பங்குகளைப் பெற்ற ஒவ்வொருவகை உழைப்பாளரும், அவ்வாறே தமக்கு வேண்டும் பொருள்களைச் செய்து கொடுத்த வெவ்வேறு தொழிலாளருக்கும் அவரவர் செய்த வேலைக்குத் தக்கவாறு வெவ்வேறு பங்குகள் வைத்துக் கொடுக்கவேண்டியதிருக்கும் உதாரணமாக விவசாயிக்கு வேண்டிய கலப்பையைச் செய்து கொடுத்து ஒரு சிறு தொகையைப் பெற்றுக்கொண்ட தச்சன், தனக்கு மரத்தைக் கொடுத்தவனுக்கு ஒரு பாகத்தையும், உணவுப் பொருள்களைக் கொடுத்த விவசாயிக்கு ஒரு பாகத்தையும், மண்பாண்டங்களைக் கொடுத்த குயவனுக்கொரு பாகத்தையும் ஆடையைத் தந்த சேடனுக்கொரு பாகத்தையுங் கொடுக்கிறான். இவ்வாறே தான் பிற தொழிலாளர்களும்.

பலவகையாலும் உழைப்பார் உழைப்புப் பெரும் பிரவாகமாகத் திரண்டு பின்னர் அவரவர்க்கே உபகாரமாகின்றது. உலகம் ஒரு பெரிய கூட்டுறவுச் சங்கமாக இயங்குகின்றதென்று முற்கூறினோமல்லவா? நாம் எந்த அளவிற் பிறருக்காக உழைக்கிறோமோ அந்த அளவிலேயே பிறர் உழைப்பிற் பங்கு பெறுவோம். ஒவ்வொருவர் உழைப்பும் அவரவர் மட்டுக்கு மன்றிப் பிறருக்கும் உபகாரமாக இருந்து வருகின்றது. அந்தோ! பொருளாக்கத்தில் ஈடுபடாத சோம்பேறிகளும் அறிவிலிகளும் தமக்குப் பயனற்றவர்களாயிருப்பது மன்றிப் பிறருக்குப் பாரமாக

வுமிருந்து வருகின்றனர். ஏனெனில் பிறர் உழைப்பாலாகிய பயனிற் பங்கைப் பெற்றுக்கொண்டுதான் இக்கீழ்மக்கள் உயிர் வாழ்ந்து வருகின்றனர். இவர்களால் தேசத்திற் கேற்படும் வறுமையுங் குறையும் மிகவும் பரிதபிக்கத் தக்கதே. நிற்க.

## பொருள் ஏன் விபாகிக்கப்படுகிறது?

ஏன் ஒருவர் உழைப்பிற் பலரும் பலனடைகிறார்கள்? எவ்வளவில் பலனடைகிறார்கள்? முற்காட்டிய உதாரணத்தில் ஏன் விவசாயிக்கு மூன்றணாவும், நெய்வோருக்கு ஆறணாவும், விற்போனுக்கு ஓரணாவுங் கிடைக்கின்றது? இக்கேள்விகளுக்குரிய விடையைப் பின்வரும் அத்தியாயங்களிலிருந்து நன்கு தெரிந்து கொள்ளலாம்.

ஒருவர் உழைப்பிற் பலரும் பங்கு பெறுவதன் காரணம் என்னவெனின், நாம் ஆறும் அத்தியாயத்திற் கூறியபடி, எவ்விதமான பொருளாக்கத்திற்கும், நிலம், உழைப்பு, முதல், முயற்சி ஆகிய நால்வகைச் சாதனங்கள் வேண்டும்; ஆகலின் அப்பொருளாக்கத்தின் வருமானத்தில் அந்நால்வகைச் சாதனங்களும் பங்கு பெறுகின்றன. ஒரு பொருளைச் செய்வதற்கு நான்கு பேர்கள் உழைத்தால் அந்நான்கு பேர்களும் அதிற் பங்கு பெறுவது அவசியமும் நியாயமும் ஆகுமல்லவா? இதைத்தான் பொருளின் விபாகம் (Distribution of income) என்றழைக்கிறோம். விவசாயி விளைவித்த பத்துக்கலம் நெல்லையும் பலரும் பங்கிட்டுக்கொள்வதன் காரணம் இதுதான். ஒவ்வொருவரும் என்னென்ன வீதாசாரத்திற் பங்கு பெறுகிறார்களென்பதைப் பின்வரும் அத்தியாயங்களில் விவரித்துரைப்போம்.

### பயிற்சி

1 இப்பாடத்திற் காட்டிய உதாரணத்தில் நெய்வோருக்குக் கிடைத்த ஆறு அணுவும் எவ்வெவ்விதமாக விபாகிக்கப்படுகிற தென்று கூறுக.

2. ஒரு கிராமத் தொழிலாளி உண்டுபண்ணும் ஏதாவது ஒரு பொருளின் வருமானம் எவ்வாறெல்லாம் பக்கிடப்படுமென்று கூறி, அதை விளக்க ஒரு படமும் வரைக.

3. இரண்டாங் கேள்வியிலுள்ள பொருளைச் செய்வதற்கான 'சாதனங்கள்' யாவை?

4. பொருளாக்கத்தில் ஈடுபடாத சிலரைக் குறிப்பிடுக. அவர்கள் எவ்வாறு பிழைத்து வருகிறார்கள்? அஃது நியாயமாகுமா?

5. 'பொருள் ஆக்கம்', 'பொருள் மாற்றுதல்', 'பொருளின் விபாகம்', இவை ஒவ்வொன்றிற்குமுள்ள சம்பந்தத்தை விளக்குக.

## பன்னிரண்டாம் அத்தியாயம்

## வாரம்

இயற்கைப் பொருள்களுள் முக்கியமான பூமியின் மேற்பரப்பாகிய நிலம் பலவகையிற் பயன்படுகிறதென்பதை மூன்றும், ஆறும் அத்தியாயங்களிற் கவனித்தோம். அதிலேதான் குடியிருப்பு நிலமும், வேளாண்மைக்குரிய இடமும், தொழிற்சாலைகள் அமைக்கப்படுமிடமும், சுரங்கக் கேணிகள் அடங்கிய இடமும் இருக்கின்றன.

### நிலவுரிமை

நிலம் இயற்கைப் பொருளாக விருந்தும், அது நாம் சுவாசிக்கும் காற்றைப்போல விலையற்றதும் எல்லாரும்

பொதுவாய் அநுபவிக்கத்தக்கதுமானதல்ல. நிலத்தின் விலை பொதுவாக நாளுக்கு நாள் உயர்ந்துகொண்டே போகிறது. மேலும் பெரும்பான்மையான பாகம் சிலர் அதீனத்திற் குட்பட்டதாகவே யிருக்கிறது. ஏனெனில் மனிதர் உழைப்பு அடங்கினுலொழிய குடியிருப்புக்கேனும் பிற உபயோகங்களுக்கேனும் நிலம் முற்றிலும் பயன்படாது.

ஆயினும் நிலம் எல்லாருக்கும் அவசியமானது. சிலருக்கு மாத்திரமே அது சொந்தமானது பற்றி அநேகர் விவசாயத்துக்கு மட்டுமன்றிக் குடியிருப்புக்கும் இடமில்லாது வருந்துகின்றனர். மாடமாளிகைகள், கூடகோபுரங்கள், நந்தவனங்கள், நீர்த்தடாகங்கள் முதலியன அநுபவிப்பதற்காக ஒருவன் ஆயிரம் ஏக்கர் நிலத்தை வளைத்துக்கொள்வதனுல் ஓராயிரம்பேர் தெருத்தெருவாய் வீடுவாசலின்றி நின்றலைகின்றனர். நிலத்தை இவ்வாருக, "வல்லான் வகுத்ததே வாய்க்கால்" என்று கருதும்படி சிலர் அதீனத்திற்குள் விட்டுவிடுவது நியாயமாகுமா? நிலம் இயற்கைப் பொருள்; யாதொருவர் உழைப்பால் மட்டுமே ஆனதன்று; அபரிமிதமாக அமைந்து கிடப்பதுமன்று; செயற்கைப் பொருள்களைப் போல நாம் வேண்டும் அளவுக்கெல்லாம் மிகுதிப் படுத்திக்கொள்ளத் தக்கது மன்று. நிற்க.

## வாரமென்பது என்ன?

விவசாயத்திற்கேற்ற ஏராளமான நிலமுள்ளவர்கள் தாங்களே அவைகளைப் பயிரிட முடியாதிருந்தால் பயிரிடும் குடியானவர்களிடத்தில் அவைகளை அடைத்துவிட்டு, அந்நிலத்திலிருந்து வரும் ஒரு பங்கை மாத்திரம் பெற்றுக் கொள்ளுகிருர்களல்லவா? இப்பாகத்தைத்தான் "வாரம்"

(Rent) என்று சொல்லுகிறோம்; வாரமாவது நிலத்தின் உபயோகத்திற்காகச் செலுத்தப்படும் விலை (Price). இவ்விதமான வாரம் எவ்வாறு திட்டப் படுகிறதென்பதை ஆராய்வோம்.

## வாரமில்லாத நிலங்கள்

பூசாரம் பலவிதம். சில நிலங்கள் கற்காடாகவோ மணற்றரையாகவோ விருக்கலாம்; அவற்றை ஒருவரும் பயிரிட விரும்பார்; ஏனெனில் அவற்றிற் செலவழிக்கும் உழைப்பெல்லாம் விழலுக்கிறைத்த நீர்போல முடியும்; ஒருகால் பெருநஷ்ட மேற்படினு மேற்படலாம். இந்நிலங்களுக்கு ஒருவரும் வாரங் கொடார்; அவைகள் திருந்தும் வரை சொந்தக்காரரே தங்கள் கையிலிருந்து பணத்தைச் செலவழிப்பது இயல்பு.

## வாரமில்லாத கடைசி நிலம்

ஏற்கனவே இவ்வாறு திருத்தப்பட்ட வேறொரு நிலமிருக்கிறதென்று வைத்துக் கொள்ளுவோம். அதிற் கிடைக்கும் மொத்த வருமானம், அதைப்பயிரிடுவோனுடைய உழைப்பின் கூலிக்கும், முதலின் வட்டிக்கும், முயற்சியின் இலாபத்திற்கும் மட்டுமே போதுமானதாயிருந்தால் நில முதலாளிக்கு எவ்வித வாரமும் செலுத்தமுடியாதல்லவா? இவ்வாறான நிலத்தை "வாரமில்லாத கடைசி நிலம்" (Marginal land) என்று சொல்லலாம்; ஏனெனில் இதற்குச்சற்று உயர்தரமான வேறொரு நிலத்தில் முற்கூறிய உழைப்பின் கூலி, முதலுக்குரிய வட்டி, முயற்சியின் இலாபம் ஆகிய சகல செலவுகளுக்குப் பின்னும் சற்று எஞ்சும் படியான வருமானம் வரும்.

## வாரம் எப்படி யேற்படுகிறது?

பயிரிடுங் குடியானவர்களுக்குட் போட்டி யேற்படுவதனாலும், விவசாயத்திற்கான நிலம் அபரிமிதமாக இல்லாதிருப்பதனாலும், வேறு பல காரணங்களினாலும் (இரண்டாம் புத்தகத்தில் விரித்துரைக்கப்படும்) மேற்காட்டிய எஞ்சிய வருமானம் முழுவதையும் நில முதலாளிகளுக்குக் கொடுத்தாவது அவர்களிடமிருந்து அந்நிலத்தைப் பயிரிட எவரும் விரும்புவார்கள். ஏனெனில் அதற்குக் கீழ்த்தரமாகவுள்ள நிலத்திலேயே தங்கள் உழைப்புக்குரிய கூலியும், முதலுக்குரிய வட்டியும், முயற்சிக்குரிய இலாபமும் கட்டிவருகிறது; அதற்குச் சற்று உயர்தரமாகவுள்ள இந்நிலத்தில் கிடைக்கும் எஞ்சிய பாகம் முழுவதையுங் கொடுத்துவிட்டாலும் அவர்கள் நஷ்டமடையார்கள். ஆகையினாற்றான் அவர்கள் அப்படிப்பட்ட நிலங்களுக்கு வாரங் கொடுக்கிறார்கள். வாரமில்லாத கடைசி நிலத்தின் வருமானத்திற்கும் மற்ற நிலங்களின் வருமானத்திற்குமுள்ள பேதத்தின் அளவே வாரத்தின் அளவாம். இதைப் பின்வரும் படத்தின் மூலமாய் விளக்கிக் காட்டலாம்.



பம கோட்டிற்குக் கீழிருக்கும் நிலத்தில், வருமானத்திற்கு மேற் செலவுகள் பிடிக்கும்: ஆகலின் அது வாரமில்லாத நிலம். பம கோட்டின் மேலுள்ள நிலம் "வாரமில்லாத கடைசி நிலம்" 1, 2, 3, 4 இலக்கமிட்டவை வாரமுள்ள நிலங்கள்; அவை ஒவ்வொன்றிற்கு முரிய வாரத்தின் அளவைச் (amount of rent) சாய்ப்புக் கோடுகளிட்ட பாகங்களிற் காட்டியிருக்கிறது. அவ்வாரத்தின் அளவு வாரமில்லாத கடைசி நிலத்திற்கும் மற்ற நிலத்திற்குமுள்ள வருமானத்திற்குரிய வித்தியாசத்தின் அளவாயிருப்பதைக் காண்க. (It is the difference between the yields of the marginal land and those of other lands)

இனி, வாரமில்லாத கடைசி நிலத்திற்கும் மற்ற நிலங்களுக்கு முள்ள வருமானத்தின் தாரதம்மியம் எக்காரணங்களினால் ஏற்படுகிற தென்பதை ஆராய்வோம்.

## இயற்கையிலமைந்த செழுமை

படத்தில் 1, 2 இலக்க மிட்ட நிலங்களுக்கும் 3, இலக்கமிட்ட நிலங்களுக்கு முள்ள வருமானத்தின் வித்தியாசம் அவைகளின் இயல்பான பூசாரத்தினால் (natural fertility) ஏற்பட்டிருக்கலாம். இப்பூசாரம் நில முதலாளிகளினுடைய பிரயாசையினாலுண்டானதல்ல; இது இயற்கையில் அமைந்தது.

## விசேஷ அநுகூலங்கள்

"பழம் நழுவிப் பாலில் விழுந்தாற்போல்" இயற்கையிலேயே இவ்வாறு செழிப்புவாய்ந்த நிலத்திற்கருகாமையில் ஒரு "ரெயில்வே ஸ்டேஷனோ" வியாபாரிகள் கூடும் பெருஞ் சந்தையோ ஏற்பட்டு விட்டால் என்ன அதிர்ஷ்டம்! அந்நிலத்திற்கு அதற்கு முன் கொடுத்த வாரத்தைக்

காட்டிலும் அதிக வாரத்தைக் கொடுத்து அதைப் பயிரிடப் பலரும் முன்வருவார்களல்லவா? ஏனெனில் இப்பொழு தேற்பட்டுள்ள அதன் விசேஷ ஸ்தல அநுகூலங்களினால் (situational advantages) அதன் விளைபொருள்களைத் துரிதமாக உயர்ந்த விலைக்கு விற்று அதிக இலாபம் பெறலா மல்லவா? 4 இலக்கமிட்ட நிலம் இதுவே.

மேற்கூறிய இரண்டு காரணங்களினாலும் (இயற்கையி லேற்பட்ட செழுமை,* நிலத்திற்கு அணித்தாயுள்ள விசேஷ அநுகூலங்கள்) ஒரு நிலத்தின் வாரம் திட்டப்படுகிறது. இவ் விரண்டு காரணங்களும் நில முதலாளிகளின் உழைப்பா லேற்பட்டவை யல்ல. ஒன்று இயற்கையி லமைந்தது; மற்றொன்று ஒரு ஜன சமூகத்தின் வளர்ச்சியால் ஏற்பட்டது.

---

* சில விடங்களில் நிலச்சுவான்கள் தங்கள் நிலத்திற்கு வேலி யடைத்துக் கிணறு வெட்டி அல்லது பிற நீர்ப்பாசன வசதிகள் ஏற்படுத்தி நிலத்தின் "செழுமையை" விருத்தி செய்திருக்கலாம். இச் செயற்கைச் செழுமையினாற் கிடைக்கும் பலன் அந்நிலத் திற்குச் செலவிடப்பட்ட முதலுக்குரிய வட்டியேயாகும். ஆனால் நாம் இந்நூலில் வாரம் என்றுரைப்பது (தனி வாரம், Pure Rent) இயற்கைச் செழுமையினாலும், ஸ்தல அநுகூலங்களினாலும் வார மில்லாத கடைசி நிலத்திற்கும் அதற்கு உயர்தரமாகவுள்ள நிலத் திற்குமுள்ள வருமானத்தின் வித்தியாச (differential gain) மாகும். ஆயினும் சாதாரண வழக்கில் வாரமென்னும் போது ஒரு நிலத்தின் உபயோகத்திற்காகச் செலுத்தப்படும் மொத்தத் தொகையைத்தான் குறிப்பிடுகிறோம். இதை 'மொத்த வாரம்' (Gross Rent) என்ன லாம்.

## வாரம் அநுபவிப்பவர்கள்

இப்படிப்பட்ட நிலமுடையவர்களே அதிர்ஷ்ட சாலிகள்? நிமிர்ந்து போடவும் வேண்டாம் குனிந்து எடுக்கவும் வேண்டாம்.

நீரருகே சேர்ந்த நிலமுள்ளதாய்—ஊரருகே
சென்று வரவெளிதாய்ச் செய்வாருஞ் சொற்கேட்கில்
என்று முழவே யினிது''

என்று சொல்லிக்கொண்டே சோம்பிச் சுகமாக இருக்கலாம். ஆனால்—ஒருவன் பல்லக்கில் சுகமாக வீற்றிருக்க வேண்டுமானால் பத்துப் பேரல்லவோ இடுப்பொடியச் சுமக்கவேண்டும்? சில நில முதலாளிகள் இவ்வாறான வாரத்தை அநுபவிக்க வேண்டுமாயின் பல குடியானவர்கள் மிகப்பாடு படவேண்டும்.

## அநியாய வாரம்

இது போதாதென்று நிலமுடையாரிற் சிலர் நிலத்தைப் பயிரிடுங் குடியானவர்களிடமிருந்து மேற்காட்டிய அளவுப்படி நியாயமாய்த் தாம் பெறவேண்டிய வாரத்திற்கு மேல் அதிகவாரம் வசூலிப்பதும் உண்டு. ஒரு தாலூகாவின் சகல நிலவுரிமையும் ஒரு ஜமீந்தாருக்கேயிருந்தால் அங்குள்ள குடிகள் அவர் கேட்கும் வாரம் எவ்வளவு அதிகமாயிருந்தபோதிலும் கொடுத்துத்தானே தீரவேண்டும்? வேறு பிழைப்புக்கு வழியில்லாவிட்டால் ''முழுப்பட்டினிக்கு அரைப்பட்டினி மேல்'' என்றெண்ணித் தங்கள் உழைப்பின் சம்பளத்திலோ, முதலிற்குரிய வட்டியிலோ, இலாபத்திலோ ஏதேனும் குறைத்துக்கொண்டு

ஜமீந்தார் தண்டும் வாரம் முழுவதையுங் கொடுத்து வருதல் இயல்பல்லவா? 'அயர்லாந்து' தேசத்திலுள்ள நிலத்தை யெல்லாம் தம்வசமாக்கி அநுபவித்துவந்த ஆங்கிலேய மிட்டாதார்கள் அத்தேசத்துக் குடியானவர்களிடம் இவ் விதமான "கடினவாரம்" (rack rent) வாங்கி வந்தார்கள் என்பது சரித்திர வாயிலாக யாவரு மறிந்த வுண்மை.

## தனி வாரம்

நாம் இவ்வாறு கூறுவதால் வாரம் வாங்குவ தெல்லாம் அநியாயம் என்றும், எல்லாரும் அதிக வாரமே தண்டுகிறார்கள் என்றும் எண்ணிவிடக் கூடாது. சில விடங்களில் நியாயமாய்க் கிடைக்கும் வாரத்திலுஞ் சிறிது குறைவாகவே சில நில முதலாளிகள் பெற்று வருகிறார்கள். ஆயினும் நாம் வலியுறுத்தும் விஷயம் யாதெனின், நிலம் பெறுதற்கரிய இயற்கைப் பொருள்; நாம் வேண்டும் அளவுக் கெல்லாம் கூட்டிக் கொள்ளத்தக்கதன்று; ஆகையினால் சிலர் மாத்திரமே அதைச் சொந்தமாக வைத்துக்கொண்டி ருக்க விடுதல் தவறு; அதிலும் இயற்கையாக அல்லது அதிர்ஷ்ட வசமாக ஏற்பட்ட காரணங்களினால் விளையும் இலாபம் முழுவதையும் அவர்களே பெற்றநுபவிக்க விடுதல் அதனினும் அதிகத்தவறு; அன்றியும் அவர்கள் கடும் வாரம் தண்டினால் பெரும் பாதகம் ஆகும் என்ற உண் மைகளே. இக்காரணத்தையிட்டுத்தான் தனி வாரத்தின் (Pure Rent) மிச்சமான பாகம் முழுவதையும் சில தேசங் களில் அரசாங்கத்தார் தீர்வையாகத் தங்கள் வசமாக்கிக் கொள்ளுகிறார்கள். ஒவ்வொருவரும் தத்தம் உழைப்பு, முயற்சி, முதல் ஆகிய சாதனங்களினாலன்றோ பிழைக்க வேண்டும்?

## பிறவகை நிலங்களின் வாரம்

விவசாயத்திற்கான நிலத்திற்குரிய வாரத்தைப்பற்றி நாம் முற்கூறிய விஷயங்கள் குடியிருப்பு நிலத்திற்கும், கடைகள், சந்தைகள், தொழிற்சாலைகள், சுரங்கக்கேணிகள் அமைத்துள்ள நிலங்களுக்கும் பொருந்தும். அந்நிலங்களின் உபயோகத்திற்காகச் செலுத்தப்படும் விலைக்கும் 'வாரம்' (Rent) என்னும் பொதுப் பெயர் கூறலாம்.

உதாரணமாக, ஒரு கடைக்குச் செலுத்தப்படும் வாரத்தில் (வாடகை) (1) நிலத்திற்குரிய வாரம் (2) கட்டடத்திற்குச் செலவான முதலுக்குரிய வட்டி ஆகிய இரண்டு அம்சங்கள் அடங்கியிருக்கின்றன. நிலத்திற்காகச் செலுத்தப்படும் வாரமானது அதற்கும் அதைப்போன்ற கடை கட்டப்பட்டுள்ள "வாரமில்லாத கடைசி நிலத்திற்கு" முள்ள வருமானத்தின் வித்தியாசத்தைச் சார்ந்திருக்கும். இனி, அக்கடை நகரத்தின் மத்தியில் அல்லது வியாபாரம் மிகுதியாக நடக்குமிடத்தில் இருக்குமாயில் "பொன் மலர் நாற்ற முடைத்து" என்றாற் போல மிகவுயர்ந்த வாரத்தைக் கொடுக்கும்; இது அதன் "விசேஷ அநுகூலங்களி"னால் ஏற்பட்டது.

## பயிற்சி

(1) உங்கள் கிராமத்தில் நிலம் இல்லாதவர்கள் எத்தனை பேர்? அவர்களுடைய ஜீவனம் என்ன? பெரிய நில முதலாளிகள் (landlords) இருப்பின் அவர்கள் ஒவ்வொருவரும் அநுபவிக்கும் நிலங்களின் அளவு என்ன? அவர்களுக்கு அந்நிலங்கள் எவ்வாறு கிடைத்தனவென்றும் தெரிந்த வரையிற் கூறுக.?

(2) உங்கள் கிராமத்திலிருக்கும் பலவகையான வாரங்களை விவரிக்க. (பாதி வாரம் மூன்றில் இரண்டு பங்கு வாரம் போல்வன.)

(3) உங்கள் கிராமத்திலேனும் நகரத்திலேனும் நீங்கள் அறிந்திருக்கிற எவையேனும் ஐந்து வீடுகளின் வாடகைத் தொகையைக் குறிப்பிடுக. ஒவ்வொன்றிலும் எவ்வளவு பாகம் (a) நிலவாரம் (b) கட்டம் கட்டச்செலவிட்ட முதலுக்கு வட்டி என்பதைக் கண்டு பிடிக்க.

(4) எவையேனும் ஐந்து கடைகளுக்கு மூன்றும் கேள்வியிற் கண்டபிரகாரம் வாடகையைப் பிரித்து எழுதுக.

(5) ஒரு கிராமத்திலேனும் நகரத்திலேனும் குடியிருப்பு நிலத்தையாவது விவசாயத்திற்கேற்ற நிலத்தையாவது சரிசமமாகப் பங்கிடுவது நலமா? அல்லது சர்க்கார் ஆதீனத்தில் வைத்துப் பரிபாலிப்பது நலமா? அல்லது இப்பொழுதிருக்கிறபடியே விட்டு விடுவது நலமா? என்று நீங்கள் அறிந்தமட்டும் விடையளிக்க.

## பதிமூன்றும் அத்தியாயம்

## வட்டி

நிலம் இயற்கைப் பொருள்; நமது உழைப்பால் மட்டும் ஆனதன்று; வேண்டுமளவுக்குக் கூட்டிக்கொள்ளக் கூடாதது. ஆனால் பொருளாக்கத்திற்குரிய இரண்டாம் சாதனமாகிய முதலோ அவ்வாறல்ல. அது செயற்கைப் பொருள்; முயற்சியும் உழைப்பும் ஆகிய பிற சாதனங்களின் உதவியினால் ஆக்கப்பட்டது; வேண்டுமளவுக்கெல்லாம் கூட்டிக்கொள்ளத்தக்கது.

ஆயினும் எல்லாரிடத்திலும் 'முதல்' இருக்கின்றதா? உண்டு உடுத்தது போக எஞ்சிய பொருளிலிருந்து சேகரித்து வைத்தாலல்லவோ 'முதல்' உற்பத்தியாகும்? குடிப்பதற்குக் கூழ் இல்லாது கிடப்பவன் கூட கோபுரம் கட்ட எவ்வாறு இயலும்? நிற்க.

முதல் மூவகைப்பட்டதென்று முற்கூறினோம். அவையாவன: சுழலும் முதல், ஸ்தாவர முதல், ஆள் சார்ந்த முதல். இவ்வொவ்வொருவகையான முதலும் சேகரிக்கப்படும் விதமும் அதிலடங்கிய கஷ்டமும் எவ்வள வென்பதை இனி ஆராய்வோம்.

## சேமித்து வைப்பது

வித்து வேண்டும் விவசாயி தான் விளைவித்த நெல்லிலோ பிற விளைபொருள்களிலோ உசிதமானவற்றை யெடுத்துக் கூட்டிலும் குதிரிலும் பத்திரப்படுத்தி வைக்க வேண்டும். மேலும் மறு அறுப்புக்காலம் வரைக்கும் அதைச் செலவழிக்காமற் காத்திருக்கவேண்டும். இவ்வாறு சேமித்து வைத்தும், காத்தும், இராவிட்டால் "விதை முதல்" உண் டாகாது.

விதை முதலைச் சேர்ப்பதில் (saving) அடங்கிய அம்சங்கள் இரண்டு. விதைப்புக்காலம் வரைக்கும் அத்தானி யத்தை உண்ணாது அதன் பலனை அநுபவியாதிருப்பது (abstinence) ஒன்று; கழனியிலிட்ட விதை முளை கிளம்பிப் பலன் கொடுக்கும்வரை காத்திருப்பது (waiting) ஒன்று; ஆகிய இவ்விரண்டு காரணங்களினாலும் விதை முதல் உண்டாக்கப்படுகிறது. அவ்வாறில்லாது "வெள்ளம் வந்த

பின் அணை கோலலாம்'' என்று விதைப்புக்காலம் வரைக்கும் வறிதேயிருந்து, குதிரிலிருக்கும் தானியத்தை யெல்லாம் உண்டு அழித்துவிட்டால் முதல் எப்படி யுண்டாகும்?

சுழலும் முதலைச் சேர்ப்பதற்கே இவ்வளவு சங்கடங்கள் படவேண்டியதாயிருந்தால் ஸ்தாவர முதலாகிய கருவிப்பொருள்களுக்கு எவ்வளவு அதிகமாகக் காத்திருப்பதும் அநுபவியாது சேர்த்துவைப்பதும் வேண்டும்? அங்ஙனமாகவே ஆள் சார்ந்த முதலினைப் பெற ஆசிப்பார் நிரம்பக் கல்வி பயில்வதிலோ வித்தை கற்பதிலோ பலவாண்டுகளாக எவ்வளவு சிரமப்படுகிறார்கள்?

"மெய் வருத்தம் பாரார், பசிநோக்கார், கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார், அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயினார்''

இவ்வாறு பிரயாசப்படாவிடின் எவ்வாறு தாம் கற்றுத் தேர்ந்த துறையிற் பண்டிதனென எவராலும் கொண்டாடப் பெறுவர்?

## வட்டி எப்படி யேற்படுகிறது?

அரிதிற் பொருளைத் தேடி முதலைப் பெருக்கியவர்களுக்கல்லவோ அதன் அருமை தெரியும்? வடித்த கஞ்சியும், புளித்த காடியுமாகக் குடித்து விதைமுதலைத் தேடினவர்களும், பலவாண்டுகளாகக் காத்திருந்து வித்தை கற்றவர்களும், ஸ்தாவர முதலுக்கென்று பொருளையும் உழைப்

யையும் செலவிட்டவர்களும், அவற்றைப் பிறர் உபயோகத்திற்கென்று கொடுக்கும்போது (பின்னை எதற்குத்தான் "முதல்" சேர்க்கிறார்கள்?) அவற்றைச் சேர்ப்பதற்குச் செலவழித்த சகல செலவுகளுக்கும் (கடைசி பாகம் அதாவது கடைசி பைசா வரைக்கும்) பலனை எதிர் பார்ப்பார்களல்லவா? இதுவே முதலுக்கு அவர்கள் எதிர் பார்க்கும் விலை. இவ்விலையை எவ்வளவு அதிகமாக உயர்த்தக் கூடுமோ அவ்வளவு அதிகமாக அவர்கள் உயர்த்தப் பிரயாசப்படுவார்கள்; அதாவது தாங்கள் கொடுக்கும் முதலுக்குப் பிரதியுபகாரமாகப் பெறும் பலன் எவ்வளவு அதிகமாகப் பெறக்கூடுமோ அவ்வளவு அதிகமாகப் பெற ஆசிப்பார்கள்.

நாம் சேமித்து வைத்த முதலினைப் பிறர் உபயோகத்திற்கென்று கொடுக்கும்போது அதற்குப் பிரதியுபகாரமாக அடையும் பலனையே வட்டி (interest) யென்கிறோம். (Price for the use of capital).

ஆனால் அவ்விதமான முதலினை வியாபாரத்திலோ, விவசாயத்திலோ பிற தொழிலிலோ செலவிட்டு இலாபம் பெறுவதற்கு வழியிராவிட்டால் யார் அதை வாங்க முன் வருவர்? "முதலில்லாமல் ஊதியமில்லை"; ஆனால் ஆழ வெட்டித் தாழப் புதைத்த பணமும், குதிரிற் கிடந்து வயலுக்கேகாத நெல்லும், "துலக்காத ஆயுதம் துருப் பிடிக்கும்" என்றாற்போல ஒன்றுக்கும் உபயோகிக்கப் படாத இயந்திரக் கருவிகளும், "குடத்திலிட்ட விளக்குப் போலப்" பயன்படுத்தாத கல்வியும் (எவ்வளவு சிரமப் பட்டுத் தேடியதாயினும் பொருளாக்கத்தின் பொருட்டு உபயோகிக்கப்படாவிடின்) யாது பயனை அளிக்கும்?

எனவே முதலுக்கு விலையாகக் கொடுக்கப்படும் வட்டி ஒருபால் முதல் சேர்ப்பதற்கடங்கிய செலவையும் (efforts and sacrifices required to produce the volume of savings) இன்னொருபால் அதனைப் பொருளாக்கத்தில் உபயோகப்படுத்த வாங்க வருவாரின் விலையையும் (demand for the use of capital) சார்ந்திருக்கிறது.

போட்டி

முதலைக் கொடுப்பவர் எவ்வளவு ஏற்றமான விலைக்குக் கொடுக்கக்கூடுமோ (அதாவது எவ்வளவு உயர்ந்த வட்டி பெறக்கூடுமோ) அவ்வளவு ஏற்றமான விலைக்குக் கொடுக்கப் பிரயாசப்படுவார்கள். முதல் குறைவாக விருந்து அதைப் பெற ஆசிப்பவர் அதிகமாயிருந்தால் மிக உயர்ந்த வட்டி கிடைக்கும்; எனவே இவ்வித இலாபத்தை யடையப் பலரும் முயல்வார்கள். அவ்வாறு செய்யும்போது அவர்களுக்குள் ஏற்படும் போட்டியினால் (competition) மிகக்குறைவான உயர்ந்த வட்டி யெதுவோ அது கிடைத்தாற் போது மென்று (அடமானம் முதலிய பிற காரியங்களும் சரியாக விருந்தால்: other things being equal) முதலினைக் கொடுத்து விடுவார்கள். இதுவே முதலினைக் கொடுப்பவர் விலை (Supply Price).

முதலைப் பிறரிடத்திலிருந்து கடனாகப் பெறுபவர்கள் அதிலிருந்து ஊதியம் பெற்றாலொழிய அதை வாங்கி உபயோகிக்க முன்வரார் என்று முற்கூறினோம். எத்தொழிலில் ஊதியம் அதிகமாக விருக்கிறதோ அத்தொழிலிற் பலரும் பிரவேசிப்பார்கள்; அவர்களனைவரும் முதலினைக் கொடுப்

போரிடத்தில் அதைப்பெற முன் வந்தால் அதற்குரிய வட்டி அதிகப்படுதல் இயல்பல்லவா? எனவே கடனைப் பெறவருவோருக்குள் ஏற்படும் போட்டியினால் மிகக் குறைந்த உயர்ந்த வட்டி எவ்வளவு கொடுக்கக் கூடுமோ அவ்வளவே கொள்வோர் கொடுக்கும் வட்டியாகும். இதுவே முதலினைக் கொள்பவர் விலை (Demand Price).

இவ்வாறாகக் கொள்பவர் பலருக்குள்ளும் கொடுப்பவர் பலருக்குள்ளும் ஏற்படும் போட்டியினால் இருதிறத்தாருக்கும் பொருத்தமாக இறுதியில் தீர்மானிக்கப்படும் தொகையே முடிவான வட்டியாகும். இதைப் பின்வரும் படத்தில் விளக்கிக் காட்டலாம்.




நூறு ரூபாய் முதலினைச் சேர்க்கச் செலவிடும் பிரயாசத்தைக் காட்டிலும் முந்நூறு ரூபாய் முதலினைச் சேர்க்கச் செலவிடும் பிரயாசம் (costs of efforts and sacrifices) அதிகமாகுமாதலால் முதலினைக் கொடுப்போர் விலையைக் காட்டும் கோடு கீழிருந்து மேல்நோக்கிச் செல்லுகிறது. பொதுவாக வட்டி

குறையக் குறையக் கொள்ளப்படும் முதல் அதிகமாகுமாகையால் முதல் கொள்வோர் விலையைக் காட்டும் கோடு மேலிருந்து கீழ் நோக்கிச் செல்லுகிறது. இவ்விரண்டு கோடுகளும் சந்திக்குமிடமே முடிவாகத் தீர்மானிக்கப்படும் வட்டியின் தொகையைத் காட்டு கிறது. படத்தில் 180 ரூபாய்க்கு மாதமொன்றிற்கு வட்டி ரூபாய் $1\frac{1}{5}$ ஆகிறது. அப்படியானால் நூற்றுக்கு வருஷமொன்றிற்கு எவ்வளவென்று கண்டுபிடி.

## வட்டியும் வாரமும்

முதலுக்குக் கொடுக்கப்படும் வட்டியில் (நிலத்தின் உபயோகத்திற்குச் செலுத்தப்படும் வாரத்தைப்போல) யாதொரு அநியாயமுமில்லை. முதல் ஈவுப்பொருளல்ல; ஈட்டிய பொருள்; பலன் வரும் வரைக்கும் காத்திருந்து சேமித்தது. எனவே அதனை உபயோகத்திற்கென்று ஒருவன் பெறும்போது அதையுடையவனுக்கு வட்டி கொடுப்பது நியாயமே. மேலும் பாங்கிகளும் பணமும் நிரம்பிய இக்காலத்தில் வேண்டுவோர்க்கு வேண்டுமளவுக் கெல்லாம் குறைந்த வட்டியில் (அடமானம் சரியாக விருந்தால்) பணமும் கிடைத்து விடுகிறது. வட்டி வாங்கு வதில் அநியாயம் இல்லையென்று துணிபுடன் கூறிவிடலாம்.

ஆயினும்— ‘முதல்’ எல்லாரிடத்திலுமுள்ளதா? “ஏரியிருந்தாலல்லவோ நீர் பெருகும்!” நிலம் முதலான செல்வம் படைத்தவர்கள்தானே ‘முதல்’ சேர்க்க முடியும். எனவே உள்ளவனிடமே மேலும் மேலும் ‘முதல்’ பெருகு கிறது. பத்து நூறாகி, நூறு ஆயிரமாகி ஆயிரம் பதினாயிர மாகிக் கொண்டே போகிறது. இவ்வாறு யோசிக்கு மிடத்து ‘முதல்’ படைத்தவர், நிலம் படைத்தவர்போல ஒரு

வகையாக அதிர்ஷ்டசாலிகளே. எனவே அவர்கள் பெறும் வட்டி "வாரத்தை"ப் போன்றிருக்கிறது என்னலாம். ஒரு கிராமத்தில் சில முதலாளிகள் மட்டுமேயிருந்து குடியான வர்கள் தங்கள் நில அடமானத்தின்மேல் அவர்களிடமே கடன் வாங்க நேரிட்டால் பொதுவாக உயர்ந்த வட்டி தானே கொடுக்கவேண்டும்? மேலும் போதுமான ஈடு கொடுக்க வியலாதவன் கடுவட்டி கொடுத்தாலொழிய முதல் பெறுதல் அரிதல்லவா? ஆயினும் இவ்வாருய குறைகள் எளிதில் நீக்கத்தக்கவைகளே.

## அநியாய வட்டி

இனி, வட்டிமேல் வட்டி வாங்குவதையும், "தனம் இரட்டிப்பு, தானியம் முத்திப்பு" என்று எண்ணி, உணவுக் கில்லாது பசியினுல் வருந்துவோனுக்குச் சிறிது தானி யத்தைக் கொடுத்து அதற்கு மூன்றத்தனையாகத் திருப்பி வாங்குவதையும், வட்டியிலும், முதலிலும் இல்லாத புரட்டுக ளெல்லாஞ் செய்வது போன்றதுமான பல விஷயங்களையும் நாம் விவரிக்கவேண்டுவதில்லை. இவ்வாறு ஈட்டும் வட்டி யெல்லாந் தீதின்கண் வந்த பொருளே.

## பயிற்சி

1. உங்கள் கிராமத்தில் நூற்றுக்கு வருஷம் ஒன்றுக்கு என்ன வட்டி? அவ்வாறு பெறப்படும் முதல் எவ்வெவ்வகையில் உபயோகிக்கப்படுகிறது?

2. கிராமத்தில் என் உயர்ந்த வட்டியிருக்கிறது? நகரங்களில் அது குறைவாயிருப்பானேன்? கூட்டுறவுச் சங்கத்தில் வட்டி குறை வாகவும் சாவகாரிகள் வட்டி உயர்ந்தும் இருப்பதேன்? சர்க்கார்,

விவசாயிகளுக்குக் கொடுக்கும் வட்டி எல்லாவற்றைக் காட்டிலும் குறைந்திருப்பதற்குக் (நூற்றுக்கு $6\frac{1}{4}$) காரணமும் கூறுக.

3. வட்டி விகிதமானது முதல் பெறுபவன் அதைத் திருப்பிக் கொடுக்கக் கூடிய திறமையை (credit)ப் பொறுத்திருக்கிறதென்று கூறுவது எவ்வளவு தூரம் உண்மை? இரண்டாம் கேள்வியிலுள்ள விடைகள் அதை மெய்ப்பிக்கின்றனவா?

4. " வட்டிக்கு ஆசை முதலுக்குக் கேடு, " இப்பழமொழியின் உண்மை யாது?

5. " முதல் ஏராளமாக மிகுந்து விட்டால் வட்டி சூன்யமாகி விடும்". இதை ஆராய்க.

# பதினான்காம் அத்தியாயம்

## கூலி

'நிலம்' இயற்கைப் பொருள். 'முதல்' ஆக்கப் பொருள். பொருளாக்கத்திற்குரிய மூன்றும் சாதனமாகிய 'உழைப்'போ ஆள் சார்ந்த பொருள்; ஏனெனில் 'உழைப்பை' அதனையுடைய மனிதரினின்று பிரிக்க முடியாது. நிலத்திற்கு வாரமும், முதலுக்கு வட்டியும் கிடைப்பதுபோல உழைப்புக்குக் கூலி (wages) கிடைக்கிறது.

### வேலையாட்களின் தன்மை

நிலமும் முதலும் எல்லாரிடத்திலும் அமைந்தில. உழைப்பொன்றே சாமான்யமான எல்லாரிடத்திலுமுள்ளது. ஆனால் நிலம், முதல், முயற்சி முதலிய

சாதனங்களின் உதவியில்லாது வெறும் உழைப்பால் பொருள் ஆக்கம் நடைபெறுமென்று நாம் ஆறும் அத்தியாயத்திற் கூறினோம். ஆகவே, 'நிலம்', 'முதல்' இல்லாது இருப்பவர், அவைகளையுடையவரைச் சார்ந்தே பிழைக்க வேண்டும். அவர்கள் வேலையிடாவிட்டால் வறிதேபட்டினி கிடக்கவேண்டும்; மேலும் அற்பச் சம்பளமாயிருந்தாலும் "முழுப்பட்டினிக்கு அரைப்பட்டினி மேல்" என்று எண்ணி, அதையும் பெற்றுக்கொண்டு வேலை செய்வது நாம் சாதாரணமாகக் காணும் அநுபவம். மேலும் ஓரிடத்திற் குறைந்த கூலி இருந்தால் அதை மறுத்து விட்டு உயர்ந்த கூலி கிடைக்கும் வேறிடத்துக்கு உடனே போகவும் முடியாது. ஏனெனில் பிறந்த இடத்தையும் சுற்றத்தையும் விட்டுப் பிரிவதானால் சாதாரண ஜனங்களுக்குக் கஷ்டமே. இக்காரணங்களினால் வேலையாட்களுக்கு அவர்களின் திறமைக்குத் தக்கவாறு எப்பொழுதும் கூலி கிடைப்பது அருமை. அந்தோ என்ன பரிதாபம்! இயற்கைப் பொருளாகிய நிலத்திற்கு அதன் கொழுமைக்கும், அதற்கணித்தாயுள்ள விசேஷ அநுகூலங்களுக்குந் தக்கதாய் 'வாரம்' செலுத்தப்படுகிறது. மக்கட் பிறப்பெய்திய வேலையாட்களுக்கோ அவர்கள் திறமைக்குத் தக்கவாறு கூலி கிடைப்பதில்லை. இதற்கு ஒரு முக்கிய காரணம் உழைப்போர் முதலாளிகளைச் சார்ந்து பிழைக்க வேண்டியதிருப்பது தான்.

"ஒரு வாய்க்கு இரண்டு கைகள்" என்பது ஓர் ஆங்கிலப் பழமொழி. ஆனால் சிறு பாலகர்களும், கிழப் பருவமுற்றவர்களும், வியாதியஸ்தர்களும், அங்கவீன முடையவர்களும் கைகளிருந்தும் தாமே உழைத்துச்

சாப்பிட வியலாதிருக்கின்றனர். இவர்களனைவரும் பிறர் உழைப்பினாலேயே போஷிக்கப்படவேண்டும். எனவே வேலை செய்யும் ஒருவன் தன் குடும்பத்தையும் தன்னைச் சார்ந்திருக்கிற சுற்றத்தினரையும் தாங்கவேண்டியிருப்பதனால் அவனுக்குக் கொடுக்கப்படும் கூலி அவனது சம்ரக்ஷணைக்கு மட்டும் போதுமானதாயிருந்தால் யாது பிரயோஜனம்? ஆனால் ஒவ்வொரு வேலையாளுக்கும் அவனவன் குடும்ப ஸ்திதியைக் கவனித்துக் கூலி கொடுத்துக் கொண்டிருக்க முடியுமா?

### கூலி எவ்வாறு திட்டப்படுகிறது?

பின்னை வேலையாட்களுக்குக் கொடுக்கப்படும் கூலி எவ்வாறு திட்டப்படுகிறது? வாரத்திற்கும் வட்டிக்கும் நாம் கூறியது போல இக்கேள்விக்குச் சுருக்கமான விடையளிக்க வியலாது. வேலையாட்கள் முதலாளிகளைச் சார்ந்து பிழைக்கவேண்டியிருக்கிறது; உழைப்பை ஆளினின்று பிரிக்கவுமியலாது. இவ்விரண்டு காரணங்களினாலும் முதலாளிகள் தீர்மானிக்கும் கூலியையே பெரும்பாலும் வேலையாட்கள் ஒப்புக்கொள்ளவேண்டியிருக்கிறது. ஆயினும் தொழிலாளர் சங்கங்கள் (Trade Unions) இருக்கிறவிடங்களில் வேலையாட்கள் நியாயமான உயர்ந்த கூலியைப் பெற்றுக்கொள்ள முயலுகிறார்கள்.

"வேலைக்குத் தக்க கூலி" என்ற பழமொழிக்கேற்ப ஒவ்வொரு தொழிலிலும் வெவ்வேறு விதமான சம்பளங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

### விவசாய வேலைக்குக் கூலி

விவசாய வேலை காலாகாலங்களிற் செய்யப்பட

வேண்டிய வேலை; அதை ஒத்தி வைக்க முடியாது. எனவே உழவு, விதைப்பு, அறுப்பு, அடிப்பு முதலிய காலங்களில் மிகுதியான வேலையும், மற்றக் காலங்களில் மிதமான வேலையும் உண்டு. எனவே அதிக வேலையிருக்குங் காலங்களில் வேலையாட்களுக்கு உயர்ந்த சம்பளங் கிடைக்கிறது; ஆனால் ஒரு கிராமத்திலோ நகரத்திலோ மிகுதியான வேலையாட்கள் இருந்தால் (அவர்களுக்குட் போட்டி யேற்படும் போது) சம்பளம் சற்றுக் குறைவாகவே யிருக்கும். விவசாய வேலை எவரும் சாதாரணமாகக் கற்றுக்கொள்ளக்கூடியது; வேலை கற்பதற்கு எவரும் பொருள் செலவிடுவதுமில்லை; விவசாயத்தின் வருமானமும் சுருக்கம். இக்காரணங்களினால் பொதுவாகக் கிராமாந்தரங்களில் நடைபெறும் விவசாய வேலைக்குக் கொடுக்கப்படும் கூலி மிகக் குறைவு.

கானடா ஆஸ்திரேலியா, அமெரிக்கா முதலான தேசங்களில் வேலையாட்கள் குறைவாக விருப்பதனால் விவசாய வேலைக்குக் கிடைக்கும் கூலி மிகவும் அதிகமாக விருக்கிறது; மேலும் அத்தேசங்களிற் கைத்தொழிற்சாலைகளில் வேலை பார்ப்போர்க்கும் மிக உயர்ந்த சம்பளங்கள் கிடைக்கின்றன.

## தொழிற்சாலைகளிற் கூலி விகிதம்

இனி கைத்தொழிற்சாலைகளில் உழைப்பவர் எவ்வாறு கூலி பெறுகின்றனர் என்று ஆராய்வோம். இரும்பு, உருக்குத் தொழிற்சாலைகளில் இயந்திரக் கருவிகள் செய்வோர் உயர்ந்த கூலி பெறுகின்றனர். ஏனெனில் அவ்வேலை மிகத் திறமை வாய்ந்ததும், கடினமானதும், அபாயகரமுமானது. இக்காரணம்பற்றியே நிலக்கரி,

பொன், வெள்ளி முதலிய உலோகங்கள் எடுக்கும் கனிகளில் உழைப்பவர்க்கும், முத்துக் குளிப்பவர்க்கும் அதிகச் சம்பளம் கொடுக்கப்படுகிறது.

கிராமாந்தரங்களில் நிறுவப்பட்டுள்ள சிறிய தொழிற்சாலைகளிலுள்ள வேலையானது பொதுவாகச் சுலபமானதாலும், அவ்வேலையைச் செய்ய முன் வருவார் அநேகராக விருப்பதனாலும் கூலி குறைவாகவே யிருக்கிறது. மேலும் பட்டணங்களிலுள்ள தொழிலாளரைக் காட்டிலும், கிராமங்களில் வசிக்கும் தொழிலாளர்களுக்கு வீட்டு வாடகை, சாப்பாட்டுச் செலவு முதலியன குறைவாக விருக்கின்றன. மதுரையிலுள்ள பஞ்சுத் தொழிற்சாலையில் வேலை செய்வாரைக்காட்டிலும் பம்பாய் நகரத்திலுள்ள பஞ்சுத் தொழிற்சாலையில் வேலைசெய்வார் அதிகச் சம்பளம் பெறுகின்றனர்: காரணம் என்னையெனின், பம்பாய் நகரத்தில் போஷணைச் செலவு (Cost of living) மிகவும் அதிகம்.

## உத்தியோகஸ்தர் சம்பளங்கள்

இனி, உத்தியோகஞ் செய்வார் சம்பளம் எந்நிலையில் இருக்கிறதென்று கவனிப்போம். பொதுவாக, அரசாங்க உத்தியோகங்களில் மாதச் சம்பளம் ஏற்பட்டுள்ளது: மேலும் விடுமுறை, உபகாரச் சம்பளம் முதலியன உண்டு. அவையாவும் சட்டதிட்டங்களுக்குட்பட்டன சம்பளங்களும் உயர்ந்தவை. மேலும் தொழிற்சாலை முதலாளிகள் தங்களிஷ்டம் போலெல்லாம் வேலையாட்களை மாற்றிக் கொள்வது போல அரசாங்கத்தார் செய்வதில்லை. காரியங்கள் இவ்வாறிருப்பதேன்?

அரசாங்க உத்தியோகம் வகிப்போர் நெடுநாளாக மிருந்த பொருள் செலவிட்டுக் கல்வி பயின்றவர்கள்; ஆகையினால் இவர்கள் சம்பளத்தில் 'ஆள் சார்ந்த முதலு'க் குரிய வட்டியும் முயற்சிக்குரிய இலாபமும் சம்பந்தப்பட் டிருக்கிறது. மேலும் இவர்களியற்றும் வேலையும் மிகவும் பொறுப்பானது. அவர்கள் செய்யும் பணியிலேயே தேசத்தின் மேன்மையும் பலருடைய நன்மையும் சார்ந் திருக்கின்றன. இக்காரணங்களினாற்றான் அவர்களுக்கு உயர்ந்த சம்பளங்கள் கொடுக்கப்படுகின்றன.

## பெருங்கூலி சம்பாதிப்போர்

வழக்கறிஞர், வைத்தியர்கள், நூலாசிரியர்கள் நடிகர்கள் போன்றவர்களுடைய உழைப்புக்குரிய கூலி எங்ஙனம் திட்டப்படுகிறது? இவ்வாறான துறையிலுள்ள வர்களிற் சிலர் ஈட்டும் பொருளுக்கு அளவே கிடையாது. தாங்கள் எழுதும் ஒரு வார்த்தைக்கு ஒரு பவுண்டும் (பதினைந்து ரூபாய்) அதற்கு மேலும் சம்பாதிப்பாருமுண்டு. இவர்கள் ஈட்டும் பொருள் எவரையேனும் ஏமாற்றி அபகரிக்கப்படுவதல்ல. இவர்கள் உதவியை நாடி வருப வர்கள் தாங்கள் பெறும் பலனுக்கு எவ்வளவு பொருள் கொடுக்கலாமென்று மதிக்கிறார்களோ அவ்வளவு தொகை யைத்தான் கொடுக்கிறார்கள். மேலும் அவ்வளவு தொகை அவர்களால் கொடுக்க முடியாவிட்டால் அவர்களைப் போலுள்ள வேறு எவரிடமேனும் அவர்கள் போய்க் கொள்ளலாம்.

## கூலியும் வாரமும்

ஆயினும் பேர்பெற்ற வழக்கறிஞர்கள், நடிகர்கள், நூலாசிரியர்கள் மிகச் சிலரே. அங்ஙனமாகவே (உத்தி

யோகங்களின் சங்கியை குறைவாக விருப்பதனுல்) உத்தி யோகங்கள் வகிப்பாருஞ் சிலரே. இவ்வாறிருப்பது இயற்கைப் பொருளாகிய நிலத்தைச் சிலர் தமக்குச் சொந்தமாக்கி அனுபவிப்பதைப் போன்றிருக்கிறதல்லவா? வைத்தியம் முதலான தொழில்களில் விசேஷித்த திறமையையோ, செல்வாக்கையோ சிலர் மாத்திரம் படைத்திருப்பது இயற்கையிலேயே சில நிலங்கள் செழிப்பாய் அமைந்திருப்பதைப் போன்றிருக்கின்றதென்றும், ஆகலின் அவர்களீட்டும் பெருந்திரவியத்தில் ஓர் பாகம் நிலத்திற்குரிய வாரத்தைப் போல அதிர்ஷ்ட வசத்தால் ஏற்படுவதென்றுஞ் சிலர் கூறுவர். இவ்வாறு கூறுவதிற் சிறிது உண்மை யடங்கி யிருக்கின்றதென்பதை எவர் மறுக்க வியலும்?

## பயிற்சி

(1) உங்கள் கிராமத்திலுள்ள சில கூலி ஜனங்களுக்கு இன்னின்ன வேலைக்கு (நாளொன்றுக்கு) இவ்வள விவ்வளவு சம்பளங் கிடைக்கிறதென்று குறிப்பிடுக.

(2) நாட்டுப் புறத்திலிருக்கிற சிறு தொழிற்சாலைகளில் (அரிசி 'மில்', பஞ்சு 'மில்' போல்வன) வேலை செய்யும் (க) ஆண்கள் (உ) பெண்கள் இவர்களுக்குத் தனித்தனியே தினசரிச் சம்பளம் எவ்வளவு? வருடத்தில் எவ்வளவு நாட்களுக்கு வேலை கிடைக்கிறது?

(3) நகரங்களிலிருக்கும் ஏதாவது ஒரு பெரிய தொழிற்சாலையில் வேலை பார்ப்பாருக்கு மேற்கூறியவாறு சம்பளத்தின் அளவையும் வேலையின் அளவையுங் குறிக்க.

(4) அவர்களில் எவராவது ஐவருடைய குடும்பச் செலவைக் கீழ்க்கண்ட தலைப்புக்களின் கீழ் விவரிக்க: (1) வீட்டு வாடகை

(2) சாப்பாட்டுச் செலவு (3) ஆடை (4) குடி (5) பிள்ளைகள் கல்விப்பயிற்சி (6) இதரச்செலவுகள்.

(5) உங்கள் நகரத்திலுள்ள பிரபலமான இரண்டு வக்கீல்களுக்கும் வைத்தியர்களுக்கும் கிடைக்கும் வருஷ வருமானம் எவ்வளவு?

# பதினைந்தாம் அத்தியாயம்

# இலாபம்

நிலத்தின் உபயோகத்திற்குப் பலனாக வாரமும், முதலுக்கு விலையாக வட்டியும், உழைப்புக்குக் கூலியாகச் சம்பளமும் கிடைப்பது போலப் பொருளாக்கத்திற்குக் காரணமாகிய நான்காம் சாதனமாகிய முயற்சிக்கு 'இலாபம்' பலனாகக் கிடைக்கிறது. "சூழ்ச்சி முடிவு துணிவெய்தல்"; ஆகலின் எக்கருமத்துக்கும் முடிவான சாதனமாகிய முயற்சி பொருளாக்கத்தில் விசேஷ பலன் அடைய வேண்டுமல்லவா!

## மொத்த இலாபம்

இலாபம் என்பது என்ன? சாதாரண வழக்கில் விற்ற விலைக்கும் வாங்கின விலைக்குமுள்ள வித்தியாசத்தை இலாபம் என்கிறோம். கோபாலன் நூறு ரூபாய்க்கு ஒரு குதிரையை வாங்கி, அதை இருநூறு ரூபாய்க்கு விற்றால், நூறு ரூபாய் அவனுக்கு இலாபமாகக் கிடைத்ததுவென்போம். 'இலாபம் அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது; அது எவ்வித உழைப்பு, முயற்சி இவைகளின் காரணமாக

எழுந்ததல்ல' வென்பது சாதாரண ஜனங்களின் அபிப்பிராயம். ஆயினும் உண்மையில் அது அவ்வாறல்ல.

## தனி இலாபம்

கோபாலனுக்குக் கிடைத்த நூறு ரூபாயும் "மொத்த இலாபமே" (Gross Profits) யன்றித் "தனி இலாபம்" (Pure Profit) ஆகமாட்டாது. ஏனெனில் குதிரை வாங்குவதற்கு ஐம்பது மைல் தூரத்திற்கப்பாலுள்ள பட்டணத்திற்குப் போயிருந்தானானால் அங்குச் சென்றதற்குரிய பிரயாணச் செலவும், சாப்பாட்டுச் செலவும், அவன் உழைப்புக்குரிய சம்பளமும் அதனுள்ளடங்குமல்லவா? மேலும் அந்நூறு ரூபாய்க்குரிய வட்டி வேறு. மிகுந்த ரூபாய் ஐம்பது ஆனால் அதுவே நிகர இலாபமாகும்.

இந்நிகர இலாபம் கோபாலனுக்கு எக்காரணத்தையிட்டுக் கிடைத்தது? முதலாவது, ஐம்பது மைலுக்கப்பாலுள்ள பட்டணத்தில் குதிரையின் விலை குறைவாயிருக்கிறதென்பதை அறிந்த உணர்ச்சியும்; இரண்டாவது, அதை வாங்கி விற்பதென்ற துணிபும்; ஆகிய இவ்விரண்டு காரணங்களினாலேயே அவனுக்கு ஐம்பது ரூபாய் இலாபம் கிடைத்தது. துணிபு ஆகிய முயற்சிக்குப் பலனாகவே இலாபங் கிடைக்கிறது.

## விவசாயத் தொழிலின் இலாபம்

இனி, இலாபம் எவ்வாறு கணிக்கப்படுகிறதென்பதை ஆராய்வோம். பொதுவாகக் கூறினால் இலாபம் ஒவ்வொரு தொழிலின் தன்மைக்குந் தக்கவாறு வேறுபடும். விவசாயிகள் மிகுந்த இலாபம் பெறுவதில்லை. காரண

மென்னையெனின், விவசாயத்தில் உழைப்பவர் பலர்; வேண்டும் முதலோ மிகக் குறைவு; தொழில் முறைக ளெல்லாம் எவருக்கும் தெரிந்த விஷயம்; விளைபொருள் களின் விலையில் ஏற்றமும் தாழ்ச்சியும் பெருமிதமாக விருக்கா. இக்காரணங்களினாலே விவசாயத்தில் மிகக் குறைந்த இலாபம் கிடைக்கிறது. அதிக இலாபம் இல்லை யாயின் அதிக நஷ்டமுங் கிடையாது. "அடித்த ஏருக்கும் குடித்த கூழுக்குஞ் சரி" யென்பது நமது நாட்டுப் பழமொழி. நாம் இங்குக் கூறியவையாவும் சிறிய குடியான வர்களைச் சம்பந்தப்பட்டவை. தேயிலை, காப்பிச் செடி, 'இரப்பர்' மரம் முதலானவை பயிரிடுகிற பெரிய விவசாயி களுக்கு (Planters) மிகுந்த இலாபங் கிடைக்கிறது.

## கைத்தொழிலின் இலாபம்

கைத்தொழில் ஸ்தாபனங்கள் வைத்து நடத்துபவர் களுக்குப் பொதுவாக மிகுந்த இலாபம் கிடைக்கின்றது. ஏனெனில் மிகத் தீவிர புத்திக் கூர்மையுள்ளவர்களும், அதிக முதலும், பெருமுயற்சியுமுடையவர்களும் சிலரே. இலாபம் அதிகமாகக் கிடைக்கும் தொழில்களில் நஷ்டமும் அதிகமாக ஏற்படுவது இயல்பு. 'உண்டியல் மாற்றுதல்' (Stock Exchange) முதலான ஸ்தாபனங்களிற் கிடைக்கும் இலாபம் இதற்கு நல்ல உதாரணம்.

## ஒரே தொழிலின் இலாபத்தில் ஏற்படும் வித்தியாசம்

ஒரே தொழிலில் முயல்வாரிற் சிலருக்கு இலாபம் அதிகமாகவும் சிலருக்குக் குறைவாகவு மிருப்பதற்குக் காரண மென்ன? "வேலைக்குத் தக்க கூலி" யென்றாற் போல முயற்சியின் தன்மைக்குத் தக்கவாறும் இலாபம்

வித்தியாசப்படும். இயல்பாய் அமைந்த புத்தி சாமர்த்தியமோ, தொழிற்சாலையை நடத்துவதன் திறமையோ, புதிய முறைகளைக் கண்டுபிடித்துச் சொற்பச் செலவிற் பொருள்களைச் செய்யும் யூகமோ, பொருள்களை விற்பதிலிருக்கும் அநுபவமோ, நெடுநாளாக ஒரு தொழிற்சாலை வைத்து நடத்தினதனால் உண்டான செல்வாக்கோ—ஆகிய ஏதாவது ஒன்றால் அல்லது பலவற்றால் ஒரே தொழிலில் முயலும் பலருக்குள்ளும் முயற்சியில் வித்தியாசம் ஏற்படுவது இயல்பு.

சிலர் நஷ்டப்பட்டுத் தொழில் செய்துகொண்டிருப்பார்கள். சிலருக்கு வரவுக்கும் செலவுக்கும் சரியாக விருக்கலாம். வேறு சிலருக்கு மிகக் குறைந்த இலாபம் எவ்வளவு இருந்தால் அந்தத் தொழிலைக் கொண்டு செலுத்தலாம் என்றிருக்குமோ அவ்வளவு இலாபம் மட்டும் கிடைத்துக் கொண்டிருக்கும். இவ்வாறுள்ள தொழில் முதலாளியைத்தான் "இலாபமுள்ள கடைசி ஆள்" (Marginal producer) என்னலாம். ஏனெனில் இவரது தொழிற்சாலையிற் செய்து விற்கப்படும் பொருள்களினின்று கிடைக்கும் வருமானத்திற்கும் (முற்காட்டியபடி மிகக் குறைந்த இலாபமுட்பட) அவைகளைச் செய்வதற் கேற்படும் சகல செலவுகளுக்கும் (Costs of production) சரியாக விருக்கும். இவருக்குச் சற்று மேற்றரமாகவுள்ள தொழில் முதலாளிகளுக்கோ மிக வுயர்ந்த இலாபங் கிடைத்துக் கொண்டிருக்கும்; ஒருகால் அதே பொருள்களைச் செய்வதற்கு அவர்களுக்கு ஏற்படும் செலவு மிகக் குறைவா யிருக்கலாம்; அல்லது அப்பொருள்களை விற்பதிலிருக்கும் அநுகூலங்கள் மிகுதியாக

விருக்கலாம். ஆதலாற்றான் அவர்களுக்கு அதிக இலாபங் கிடைக்கிறது.

இவ்வதிக இலாபத்தின் (Surplus Profit) அளவு என்ன? அது எப்படிக் கணிக்கப்படுகிறது? இலாபமுள்ள கடைசி ஆளின் இலாபத்திற்கும் பிற தொழில் முதலாளிகளின் இலாபத்திற்குமுள்ள வித்தியாசத்தின் அளவே அதிக இலாபத்தின் அளவாகும் (Surplus over the marginal profit). இக்கருத்து அடியிற்காட்டிய படத்திற் குறிப்பிடப்பட்டிருக்கிறது.




ப ம கோட்டிற்குக் கீழுள்ள 1, 2, 3 சதுரங்கள் முறையே மிக அதிகமாகவுங் குறைவாகவும் நஷ்டத்திற் தொழிற் செய்யும் மூன்று தொழில் முதலாளிகளைக் காட்டுகிறது. ப ம கோட்டின் மேலுள்ள கடைசி சதுரம் (ம பக்கவில்) இலாபமுள்ள கடைசி ஆளைக் குறிப்பிடுகிறது. அதற்கு இடப்பக்கமாகவுள்ள 1, 2, 3, 4 இலக்கமிட்ட இடங்கள் (நெடுஞ் சதுரங்கள்) அதிகமான இலாபத்திற் தொழில் செய்யும் நால்வரைக் குறிப்பிடுகின்றன; அவர்

களில் ஒவ்வொருவனுடைய இலாபத்தின் அளவும் 'இலாபமுள்ள கடைசி ஆளின்' இலாபத்திற்குள்ள வித்தியாசத்தின் அளவாதல் காண்க. (Surplus over the marginal profit)

முடிவாகக் கூறுமிடத்து ஒரே தொழிலைச் செய்யும் பல தொழில் முதலாளிகளுக்குள் அவரவர் முயற்சியில் வித்தியாசம் ஏற்படுவதால் (ஏழாம் அங்கத்திற் காட்டப்பட்ட காரணங்களினால்) இலாபத்திலும் வித்தியாச மேற்படுகிறது. இதை "வித்தியாசத்தாலேற்படும் இலாபம்" (differential gains) என்பர் ஆங்கிலப் பொருள் நூலாசிரியர்.

ஏன் இலாபமுள்ள கடைசி ஆளின் இலாபத்திலிருந்து பிற தொழில் முதலாளிகளின் இலாபத்தைக் கணிக்கிறோம்? நாம் முற்கூறியபடி (9ம் அத்தியாயம் 60ம் பக்கம் பார்க்க) தொழில் முதலாளிகளுக்குள் ஏற்படும் கிரமமான போட்டியினால் ஒரு பொருளை விற்பதற்கு முடிவாக ஏற்படும் விலை இலாபமுள்ள கடைசி ஆள் அப்பொருளுக்கு இடும் விலையைப் பொறுத்திருக்கிறது. (Marginal cost of porduction). ஒரே தொழிலில் ஒரே வகைப் பொருள்களைச் செய்யும் எல்லாத் தொழில் முதலாளிகளும் இந்தவிலைக்கே தத்தம் பொருள்களை விற்பார்கள். இதனால் இலாபமுள்ள கடைசி ஆளுக்கு மிகக் குறைந்த இலாபம் (marginal profit) எவ்வளவிருந்தால் அத்தொழில் நடைபெறுமோ அவ்வளவு குறைந்த இலாபந்தான் கிடைத்துக்கொண்டிருக்கும்; இவருக்கு மேற்றரமாகவுள்ளவர்களுக்கோ மிகுதியான இலாபம் கிடைக்கும். ஆகையினாற்றான் இலாபமுள்ள கடைசி ஆளின் இலாபத்திலிருந்து பிற தொழில் முதலாளிகளின் இலாபத்தைக் கணிக்கிறோம்.

## இலாபமும் வாரமும்

தொழில் முதலாளிகளுக்கு முயற்சியில் ஏற்பட்டிருக்கும் வித்தியாசம் நிலங்களிலுள்ள பூசாரத்திற் காணப்படும் வித்தியாசத்தைப் போன்றிருக்கின்றதல்லவா? இயல்பாய் ஒருவருக்கமைந்த திறமை நிலத்திற்கு இயற்கையிலேயே யமைந்த கொழுமையைப் போலவும், ஒரு தொழிற்சாலைக்குக் கிடைத்திருக்கிற விசேஷ அநுகூலங்கள் (ஏழாம் அங்கத்திற் கூறப்பட்டவை) நிலத்திற் கணித்தாயுள்ள விசேஷ அநுகூலங்களைப் (Situational advantages) போலவுமிருக்கின்றன. எனவே ஒருவனுக்குக் கிடைக்கும் இலாபம் நிலத்திற்குக் கிடைக்கும் வாரத்தைப் போன்றிருக்கிறதென்பர் ஒரு சாரார். இது முற்றிலும் உண்மையன்று. ஏனெனில் ஒரு தொழில் முதலாளிக்கு அமைந்துள்ள திறமையோ, அவனது தொழிற்சாலைக்குள்ள விசேஷ அநுகூலங்களோ, இவையாவும் பெரும்பாலும் உழைப்பாலும் பிறஹேதுக்களாலும் பெறப்பட்டவை; முற்றிலும் அதிர்ஷ்டவசத்தா லேற்பட்டவையல்ல.

## இலாபத்தின் சில அம்சங்கள்

ஆயினும் வியாபாரத்திலும் பிற தொழில்களிலும் ஏற்படும் "மொத்த இலாபம்" முழுவதும் முயற்சியின் பலனாக வந்ததாகாது. சில வேளைகளிற் பொருள்களின் விலை திடீரென்று ஏறிவிடுவதுண்டு. அதற்குக் காரணங்கள் பலவுள. ஒருகால் அது தொழில் முதலாளிகளின் அல்லது வியாபாரிகளின் சூழ்ச்சியா லேற்படலாம். உதாரணமாக, மழைக்குறைவினால் அல்லது பிறகாரணங்களினால் தானியங்களின் விளைவு குறைவுபடலாம். இவ்வாறு குறைவுபடு

மென்பதை முன்னரே ஊகித்தறிந்து கிடைக்கக் கூடிய தானியத்தை யெல்லாம் மொத்தமாகக் குறைந்த விலையில் வாங்கி, இருப்புக்கட்டி வைத்துக் கொண்டு, பின் உயர்ந்த விலைக்கு விற்று மிகுந்த இலாபம் அடையலாம் என்று சூழ்ச்சி செய்வது (Speculation) இக்காலத்தில் மிகவும் சாதாரணம். இச்சூழ்ச்சியினால் சில வேளைகளில் நன்மையும் பெரும்பாலும் தீமையு மேற்படுகிறது. ஆயினும் வியாபாரிகள் செய்த சூழ்ச்சியினால் தானியங்களின் விலை உயர்ந்து விட்டால் அவர்கள் மிகுந்த இலாபமடைவார்களல்லவா? இம்முறையில் ஈட்டும் இலாபம் நாம் முற்கூறிய "முயற்சி"யின்பால் வந்த தன்று; அது அதிக விலை கொடுத்துப் பொருள்களை வாங்கின பொது ஜனங்களின் பணமே. சூழ்ச்சியும் ஒருவகை முயற்சியேயாயினும் மெய் முயற்சி அல்லது சிறந்த முயற்சி யல்லவென்று கொள்ளவேண்டும்,

வியாபாரிகளோ தொழில் முதலாளிகளோ வேறு பல முறைகளாலும் இலாபஞ் சம்பாதிப்பதுண்டு. ஒரு தொழில் முதலாளி தனது தொழிற்சாலை யமைத்திருக்கும் இடத்திற்குரிய வாடகையைக் குறைத்துக் கொடுத்துக் கொண்டு வரலாம்; அல்லது வேலையாட்களுக்குரிய கூலியைக் குறைத்துக் கொடுத்து வரலாம். இக்காரணங்களினால் ஏற்படும் இலாபம் முயற்சியினால் ஏற்படாத இலாபமாம். ஆனதுபற்றி அதைத் தீதிண்கண் வந்ததென்றே கொள்ள வேண்டும். அது கடும் வாரம் தண்டுவதையும் அநியாய வட்டி வாங்குவதையும் ஒக்கும்.

## பயிற்சி

(1) எவனாவது ஒரு வியாபாரிக்கு (Shop-keeper) க் கிடைக்கும் மொத்த இலாபத்தில் (1) வாடகை. (2) வட்டி. (3) உழைப்புக் குரிய கூலி ஆக இம்மூன்று முக்கிய பாகங்களும் போக நிகா இலாபம் எவ்வளவென்று தெரிந்து எழுதுக.

(2) ஒரே வியாபாரம் செய்யும் நான்கு வியாபாரிகளுக்குக் கிடைக்கும் தனி இலாபத்தில் வித்தியாசமிருந்தால் (தெரிந்த வரையிலும்) காரணங் கூறுக.

(3) எவனாவது ஒரு விவசாயிக்கு வருஷத்தில் நிகர இலாபம் எவ்வளவென்று கண்டுபிடிக்க.

(4) விலை இறக்கத்தினால் விவசாயிகளுக்கு இப்பொழுது என்ன நஷ்டங்கள் ஏற்படுகின்றன.?

(5) ஒரு கிராமத்தில் விவசாயத்தில் நல்ல இலாபமடையும் நான்கு பேருக்குள்ள தனி இலாபத்தில் வித்தியாசம் ஏற்படுகிறதா? ஏற்பட்டால் காரணங்காட்டுக.

---

# பதினாறும் அத்தியாயம்

## அரசிறை

பொருளாக்கத்திற்கும், பொருள் மாற்றுதலுக்கும், பொருள் விபாகத்திற்கும் அரசு இன்றியமையாததது. தன்னாலும், தன் பரிசனத்தாலும், பகைவர்களாலும், கள்வர்களாலும், துஷ்ட மிருகங்களினாலும், ஏற்படும் ஐவகை

இடுக்கண்களையும் அகற்றிப் பரிபாலனம்பண்ணும் அரசாங்கம் இல்லையேல் எவ்வகைத் தொழில்தான் நடைபெறும்? மேலும், பொருள் மாற்றுதலுக்குப் பொதுப் பொருளாகிய நாணயமும், போக்குவரவு சாதனங்களும் அரசாங்கம் அமைக்காவிடில், வேறு எவரால் அவை செவ்வனே அமைக்க வியலும்? அன்றியும், வாங்குவதிலும், விற்பதிலும் ஏற்படும் விவாதங்கள் இவையிவையென வரையறுக்காவிடினும், நீதி மன்றங்கள் மூலமாக அவ்விவாதங்களைத் தீர்த்து நியாயபரிபாலனம் செய்யாவிடினும், பொருள் மாற்றுதல் இடையூறின்றி நிகழாது. இறுதியிற் பொருள் விபாகத்தில், அநியாய வாரமும், கடு வட்டியும் முதலாளிகள் தண்டாது குடிகளைக் காப்பாற்றுதலும், உழைப்பாருக்குரிய நியாயமான கூலியை முதலாளிகள் கொடுக்கச் செய்தலும், மிதமான இலாபமே முதலாளிகள் அடையும்படி செய்தலும் அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும்.

"செங்கோல் கோணின் எல்லாங் கோணும்" எனவும், "கோனேக்கி வாழுங் குடியெல்லாம்" என்றும் ஆன்றோர் கூறியது இங்கு உற்றுராயற்பாலது.

## ஏன் வரி செலுத்தவேண்டும்?

வேலியானது பயிரைக் காப்பதுபோலக் காவல் புரிவதும், துலாக்கோல்போல நடுவு நிலைமையாய் நின்று நியாயபரிபாலனம் பண்ணுவதுமே அரசுபுரிவார் வேலை. பிறஜனங்களைப் போல, விவசாயத்திலும், கைத்தொழில்களிலும். வியாபாரத்திலும் முயலுவது அவர்கள் கடமையல்ல. அப்படியாயின் அவர்களுக்குப் பிழைப் பூட்டுவதார்?

குடிகளின் பொருட்டே அரசாங்கம் ஏற்பட்டிருக்குமாயின் குடிகளே அவர்களைப் பிழைப்பூட்ட வேண்டியது நியாய மல்லவா? ''ஆறிலொரு பங்கு அரசனைச் சேரும்'' என்றும், ''அரசனுடைமைக்கு ஆகாசவாணி சாக்ஷி'' என்றும் நம் முன்னோர் கூறியது எவ்வளவு போற்றத்தக்கது! எனவே அரசாங்கம் நடைபெற வேண்டுமாயின், அதற்குச் செல்லும் செலவைக் குடிகளே கொடுக்க வேண்டுமென்பது இதனாற் பெற்றாம்.

பிறர் உழைப்பாலாகிய பொருளை அரசாங்கத்தார் வரி அல்லது இறையாகப் (taxes) பெறுவதாயின் நியாய மான முறையிற் பெறவேண்டும் என்ற உண்மையை நாம் வலியுறுத்த வேண்டுவதில்லை. இவ்விஷயத்தில் அரசர்கள் அநுசரிக்க வேண்டிய விதிகளை 'ஆடம் ஸ்மித்' (Adam Smith) என்னும் ஓர் பெரிய 'பொருள் நூல் ஆசிரியர்' பின் வருமாறு வகுத்துக் கூறியுள்ளார்.

### சிக்கனப் பிரமாணம்

பிறர் உழைப்பாலாகிய பொருளை அரசாங்கத்தார் வரியாகப் பெறுவதால் அத்தொகை அரசாங்கத்தின் நியாயமான செலவுக்கு வேண்டிய அளவுக்கு மேற்படக் கூடாது. கூட்டி வசூலித்தால் குடிகள் துன்புறுவர். குறைத்து வசூலித்தால் அரசாங்கம் குறைவுபடும். எனவே வேண்டு மளவுக்கே வரிப்பணம் சேர்க்க வேண்டும். அவ்வாறு வேண்டு மளவுக்குச் சேர்க்கும்போதே ''சுண்டைக்காய் காற்பணம் சுமை கூலி முக்காற்பணம்'' என்றாற் போல வரவுக்குமேல், வசூலிக்குஞ் செலவை அதிகப் படுத்தக் கூடாது. இப்பிரமாணத்தைச் ''சிக்கனப் பிரமாணம்'' (Principle of Economy) என்னலாம்.

## சௌகர்யப் பிரமாணம்

இரண்டாவதாக, குடிகள் எளிதாகவும் கஷ்டமில்லாமலும் செலுத்தக் கூடிய காலங்களிலேயே அவ்விறைப் பணத்தைச் சேர்க்கவேண்டும். "ஆர் கெட்டாலென்ன, ஆர் வாழ்ந்தாலென்ன?" வென்று தகாத காலங்களில் வரி வசூலிக்க லாகாது.

"ஆவின மழைபொழிய இல்லம் வீழ
அகத்தடியாள் மெய்நோவ அடிமை சாவ
மாவீரம் போகுதென்று விதைகொண்டோட
வழியிலே கடன்காரர் மறித்துக்கொள்ள
கோவேந்த ருழுதுண்ட கடமை கேட்க"

என்றவாறு குடிகள் துன்புறுங் காலத்து வரி வசூலிப்பது தர்மமாகாது. கன்று பசுவினிடத்திற் பாலைக் குடிப்பது போலவும், ஈக்கள் பூவினிடத்தில் தேனை நுகருவது போலவும் அரசன் குடிகளிடமிருந்து வரிப்பணத்தைச் சேர்க்க வேண்டுமென்று "அர்த்த சாஸ்திர" நூலின் ஆசிரியரான "கௌட்டில்யா" கூறுகிறார். இதைச் "சௌகர்யப் பிரமாணம்" என்னலாம். (Principle of Convenience).

## வரையறைப் பிரமாணம்

மூன்றாவதாக: அரசாங்கத்தார் பிரஜைகளிடமிருந்து சேகரிக்கும் வரி விகிதம் சட்டதிட்டங்களுக்குட்பட்டதாயிருக்கவேண்டும். கீழதிகாரிகள் தங்களிஷ்டப்படியெல்லாம் கூட்டிக் குறைத்து வசூலிக்க விடக்கூடாது. அவனவன் செலுத்தவேண்டிய வரி இவ்வளவென்றும், அதற்கு மேற்பட்டு அரசாங்கத்தார் அவனிடமிருந்து வசூலிக்கமாட்டார்களென்றும் பிரஜைகளில் ஒவ்வொரு

வனுக்கும் நிச்சயம் வேண்டும். நிலத்தீர்வையானாற் பட்டாவிலும், வருமான வரியானால் அதைத் தேசச்சட்டத்திலும் திட்டமாகக் காட்ட வேண்டும். இதை "வரையறைப் பிரமாணம்" (Principle of Certainty) என்னலாம்.

## திறமைப் பிரமாணம்

நான்காவதாக—இதை நாம் இறுதியில் வைத்தாலும் இதுவே முதன்மையாகக் கொள்ளப்படுவது—அவரவர் திறமைக்குத் தக்கவாறே வரி வசூலிக்கவேண்டும். இதைத் "திறமைப் பிரமாணம்" (Principle of Ability or Equity) என்னலாம். "குருவியின் தலையிற் பனங்காயை வைத்தாற்போல," ஏழைகளிடம் அவர்கள் ஜீவனார்த்தத்திற் குரியன வற்றை யெல்லாம் பிடுங்கிக் கொள்ளக்கூடாது. பிரபுக்களும் சீமான்களுமானவர்களிடத்தில் யாதொரு வரியும் வசூலிக்காது விட்டு விடுவது அதர்மமாகும். தாய் தனது பிள்ளைகளிடம் பக்ஷபாதங் காட்டாதிருப்பதுபோல அரசாங்கத்தினரும் குடிகளிடத்தில் பக்ஷபாதங் காட்டாது ஒவ்வொருவரிடத்திலும் அவரவர் திறமைக்குத் தக்கவாறு வரியை வசூலிக்க வேண்டும்.

## திறமைக்குத்தக்க வரி

திறமைக்குத் தக்கவாறு வரியை வசூலிப்பதென்பதின் பொருள் என்ன? மிகுந்த வருவாயுள்ளவர்களிடம் மிகுதியாகவும் குறைந்த வருவாயுள்ளவர்களிடம் குறைவாகவும் வசூலிக்க வேண்டும். குடும்ப சம்ரக்ஷணைக்கு மட்டும் போதுமான வருவாயுள்ளவர்களிடம் யாதொரு விதமான வரியும் வாங்கக்கூடாது. (இதற்குப் பல விலக்குகள் இரண்டாம் புத்தகத்திற் கூறுவோம்) அதிக

மான வரும்படியுள்ளவர்களிடம் விதாசாரத்திற்கு மேல் (more than proportionate or progressive taxation) வசூலிக்கலாம். உதாரணமாக 1000 ரூபாய் வருமான முள்ளவனிடம் ரூபாய்க்கு நாலு பை வீதம் வரி விதித்தால் 10,000 ரூபாய் வருமானமுள்ளவனிடம் ரூபாய்க்கு எட்டுப் பை வீதமும், 10,000,000 ரூபாய் வருமானமுள்ளவனி டத்தில் ரூபாய்க்கு நான்கணு வீதமும் வசூலிக்கலாம். ஏனெனில் வருமானம் அதிகரிக்க அதிகரிக்கக் கொடுக்கும் சக்தியும் (atility to pay) அதிகரிக்கிறது.

## வாரமும் வரியும்

மேலும் உழைப்பு, முயற்சி, முதலானவற்றால் பெறப்படாத பொருளை யெல்லாம அரசாங்கத்தார் தம்வச மாக்கிக் கொள்ளலாம். நிலத்திலிருந்து வரும் "தனிவாரம்" (Pure Rent) நில முதலாளிகளுடைய உழைப்பினுல் பெற்றதல்லாததனுல் அது முழுவதையும் அரசாங்கத்தார் வரியாக வசூலிக்கலாம். அது ஜன சமூகத்துக்குச் செய்யும் பெரிய நியாயமாகும் வாரத்தைப் போன்றுள்ள உத்தி யோகஞ் செய்வாருடைய பெருஞ் சம்பளங்களிலும், தொழில் முதலாளிகளுடைய "மிகுதி இலாபத்திலும்" (Excess Profits)பெரும்பாகத்தைத் தீர்வையாகப் பெற்றுக் கொள்ளலாம்.

## பிற வரிகள்

மேலும், கள், சாராயம் முதலான இலாகிரி வஸ்துக் களையும், இன்னும் இவைபோன்ற தகாத பொருள்களையும் உபயோகிப்பதைத் தடுப்பதற்காகச் சர்க்கார் தீர்வைகள் ஏற்படுத்தலாம்.

ஒரு நாட்டின் ஏற்றுமதி இறக்குமதி வியாபாரங்களின் மேல் வரி விதித்து (Customs Duties) அரசாங்கத்திற்கு வருமானம் தேடலாம்.

## அரசாங்கச் செலவு

மேற்கூறிய பலவகையாலும் சேர்க்கும் பொருளையெல்லாம் உத்தியோகஸ்தர்களுக்குரிய சம்பளங்களிலும், ஆறு, குளங்கள், கால்வாய்கள் வெட்டி விவசாயத்தை விருத்தி பண்ணுவதிலும், போக்கு வரவு சாதனங்கள் அமைத்து வியாபாரம் செவ்வனே நடைபெறச் செய்வதிலும், ஆகிய நன்மை பயக்கும் முறைகளிற் செலவிட வேண்டும்.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" (குறள்)

## பயிற்சி

(1) பண்டைக்காலத்து அரசர்களின் செலவுகளையும், அவர்களுக்கிருந்த வருமானங்களையும் இந்துதேசச் சரித்திரவாயிலாய்த் தெரிந்த வரையில் எழுதுக.

(2) உங்கள் (க) கிராமத்தில் (ச) தாலுகாவில் (த) ஜில்லாவில் நடக்கும் அரசியல் வேலையைச் சுருக்கமாக விவரிக்க.

(3) ஒரு குடியானவனும், ஒரு உத்தியோகஸ்தனும் இப்பொழுதிருக்கிற இந்திய அரசாங்கத்திற்குச் செலுத்தி வரும் தீர்வைகளையெல்லாம் தெரிந்த அளவில் விவரித்து எழுதுக.

(4) உங்கள் தாலுகாவில் பொருளாதார அபிவிருத்தி விஷயமாகச் (economic development) சர்க்கார் செய்திருக்கும் வேலைகளைக் குறிப்பிடுக.

(5) 'உப்பு,' 'கள்,' 'அந்நியநாட்டுத் துணி' ஆகிய இவைகளின் மேல், ஏன், எவ்வளவு வரி இப்பொழுது விதிக்கப்பட்டிருக்கிறது?

## பதினேழாம் அத்தியாயம்.

## பொருளின் பயன்

பொருளானது வெள்ளத்தாலும், நெருப்பாலும், கள்வராலும் கொள்ளைகொண்டு போகப்படத்தக்கது. மேலும் ஒருநாள் ஒருவரிடமும், மற்றொருநாள் வேறொருவரிடமுமாகச் "சகடக்கால் போல்" மாறி மாறி வருவது. "உடைமையும் வறுமையு மொரு வழி நில்லா". அன்றியும், பொருளானது தீமைக்குக் காரணமாதலுமுண்டு. அது நிலையற்றதும், அழியத்தக்கதுமானது. இக்காரணங்கள் பற்றியே 'செல்வம்' என்ற பெயருக்கு 'நாம் சென்று விடுவோம்' என்று அஃது கூறுவதாக ஓர் விநோதப் பொருள் கொள்ளுதலுமுண்டு.

இவ்வாறிருக்கப் பொருளாக்கும் முறைகளையும், மாற்றும் வழிகளையும், விபாகப்படுந்தன்மையையும் நாம் இந்நூலில் இதுகாறும் கூறியதேன்?

### பொருளின் பெருமை

பொருள் நிலையற்றதாயினும் இவ்வுலக வாழ்க்கைக்கு அதுவே அடிப்படையாக அமைந்துள்ளது. "பொருளில்

லார்க் கிவ்வுலகமில்லை'' யெனவும், ''பொருளில்லாதவரைப் பொருளாகச்செய்யும் பொருளல்லதில்லை பொருள்''; எனவும்; ''இல்லாரை யெல்லாரும் எள்ளுவர் செல்வரை எல்லாரும் செய்வர் சிறப்பு''; எனவும் பலவாறுகச் செல்வத்தின் சிறப்பைக் கூறினர் ஆன்றேர்.

செல்வம் இவ்வாறு பெருமை படைத்திருப்பதனுல் நாம் ''பொருள் நூலை''க் கற்பதில்லை: செல்வமின்மையால் மக்களின் உலக வாழ்க்கையில் ஏற்படும் வறுமையையும், வறுமையின் காரணமாக வெழுந்துள்ள பலவகையான சனசமூகக் குறைகளையும் தெளிவுற எவரும் அறியுமாறும், அறிந்தபின்னர், அவைகளைக் களையும் முறையைக் கைக்கொள்ளுமாறுமே இந் நூல் எழுதப்பட்டுள்ளது.

## வறுமைக்குக் காரணங்கள்

வறுமைக்கு மூன்று முக்கிய காரணங்கள் உள. இந் நூலின் முதற்பாகத்திற் கூறியவாறு ''பொருள் ஆக்கல்'' முறைகளில் ஒரு சமூகத்திற் குறைவுகள் காணப்படுமேல் வறுமை யேற்படலாம். ''பொருள் மாற்றுதவி''லும் குறைகள் இருக்கலாம். கடைசியாகப் ''பொருள் விபாகத்தில்'' மிகுந்த அதர்மங்கள் ஏற்படுதலால் வறுமை பெருகலாம். இம்மூன்று வகையாலும் ஏற்படும் குறைகளை யெல்லாம் ஒருங்கே அகற்றினுலொழிய ஒரு தேசத்தின் வறுமையை முற்றிலுங் களைதல் கூடாது.

## பொருள் ஆக்கல்

பொருளாக்கத்தைப்பற்றிக் கூறியவிடத்து, வறுமைக்கு முக்கிய காரணம் உழைப்பின்மை யென்று முதல்

அத்தியாயத்தில் வலியுறுத்தினோம். எக்காலத்தும் சோம்பியிருத்தலையே விரதமாகக் கொண்டொழுகும் அறிவிலிகளுக்கு உய்யும் வழியேது? உழைப்பாரும் மனோவலியும் தேகவலியும் குன்றியிருப்பாரேல் ஜனசமூகத்துக்குக் குறையேற்படுமல்லவா? ஆதலாற் பிணிகளைக் களையும் முறைகளைக் கையாடலும் வேண்டும். பொருளாக்கத்திற்கு உழைப்பு எவ்வாறு அவசியமோ, அவ்வாறே பலதிறப்பட்ட முதலும் அவசியமாகும். ஒரு தேசத்தில் சுழலும் முதலிலோ, ஆள்சார்ந்த முதலிலோ, அல்லது ஸ்தாவர முதலிலோ குறைகள் காணப்படின், அவைகளை விரைவில் நிவர்த்தி செய்யவேண்டும். நிலமும் முதலு மிருந்தும், துணிபுடனும் மனோதிடனுடனும் தொழிற்ஸ்தாபனங்கள் அமைத்துப் புதிய முறைகளில் தொழில் நடத்தும் தலைவர்கள் இல்லாவிடின், அந்தோ, ஒரு தேயத்தின் வறுமை எவ்வாறு அகலும்?

## பொருள் மாற்றுதல்

இரண்டாம் பாகத்தில் பொருள் மாற்றுதல் எங்ஙனம் நடைபெறுகிறதென்பதை விவரித்தோம். நாணயம், பாங்கிகள், போக்குவரவுச் சாதனங்கள் போதியவளவு அமைக்கப்படாதிருப்பினும், அன்றி, அவைகளில் ஏதேனும் குறைவுகள் காணப்படினும், சனசமூகத்துக்குப் பல இடுக்கண்கள் ஏற்படலாம். இப்பொழுதேற்பட்டுள்ள அகவிலைத் தாழ்ச்சியும், வியாபார மந்தமும், விவசாயிகள், தொழில் முதலாளிகளின் திண்டாட்டமும் பொருள் ஆக்கத்தில் ஏற்பட்ட குறைவினால் ஆனவையல்ல; நாணயத்திட்டத்தில் (Curreney) ஏற்பட்ட குறைவினாலும்,

இடைஞ்சல்களினாலுமே யானவையாம். வியாபாரத்திற்குச் சாதனமாக வமைக்கப்பட்ட நாணயத்திட்டமானது, "ஊன்றக் கொடுத்த கோல் உச்சியை உடைத்தாற்போல்" இக்காலத்தில் நாம் அனுபவிக்கும் இடுக்கண்களையும் வறுமையையும் விளைவித்திருக்கிறது.

ஆயிரக்கணக்கானவர்கள் ஒரு புறம் பட்டினி கிடக்கையில் அமெரிக்காவில் விளைந்த கோதுமையையும் பருத்தியையும் வாங்குவாரில்லாததினால் அத்தேயத்தினர் அவற்றை நெருப்புக் கிரையாக்குகின்றனராம்! நாணயத் திட்டங்களில் ஏற்பட்டிருக்கும் குறைகளினால் உலகம் இவ்வாறு துன்புறின் நாம் என்ன செய்வோம்?

## பொருள் விபாகம்

இப்புத்தகத்தின் மூன்றும் பாகத்தில் பொருள் எவ்வாறு விபாகப்படுகிறதென்று கூறினோம். நீதிமுறைப்படி, பொருள் விபாகத்தில், நிலம் உழைப்பு, முதல், முயற்சி, ஆகிய நால்வகைச் சாதனங்களும் பலன் அடையுமேல் சிலர் பெருஞ்செல்வராயும் பலர் பெருந் தரித்திரர்களாகவுமிருக்கமாட்டார்கள். நிலத்தின் தனி வாரத்தைச் சில ஜமீன்தாரர்களும், மிட்டாதார்களுமே அநுபவிக்க விட்டுவிட்டால் பலர் ஏன் தரித்திராகார்கள்? மேலும் கடும் வட்டி வாங்குகிறவர்களையும், வட்டியையும், முதலையும் புரட்டி ஏழைகளை ஹிம்சிக்கிறவர்களையும் அரசாங்கத்தார் தண்டிக்காவிடில் ஒருபுறம் பெருஞ்செல்வர்களும், இன்னொரு புறம் பரம ஏழைகளும் ஒரு சனசமூகத்திற் பெருகுவார்கள் அல்லவா? மேலும் கூலி ஜனங்கள் நியாயமான கூலி

யைப் பெறும்படியான சட்டதிட்டங்களும் அரசாங்கத்தார் அமைக்காவிடில் அவ்வாறே முடியுமல்லவா?

## அரசிறையின் குறைகள்

இறுதியாக, உலகத்தின் வறுமைக்கு அரசாங்கமே காரணமாயிருக்கலாம். குடிகளுக்குக் காவலனாக விருக்கப் பட்ட அரசன், "வேலி பயிரை மேய்ந்தாற்போலக்" குடிகளிடம் கடும் வரி தண்டி, அவ்வாறு சேகரித்த பொருளை உபயோகமற்ற வழிகளிற் செலவிட்டால் ஒரு தேசத்திற் குறையேற்படுவது இயல்பே. காரியம் இவ்வாறிருப்பின் அரசாங்கத்தைச் சீர்திருத்தி யமைக்கவேண்டுவது முதற் கடமையாகும்.

## முடிவுரை

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நால்வகை உறுதிப்பொருள்களில், பொருள் அறத்திற்கும் இன்பத் திற்கும் இடையில் வைக்கப்பட்டுள்ளது. காரணம் என்னை யெனின் அறஞ்செய்வதற்கும், இம்மை யின்பத்தைப் பெறுவதற்கும் பொருள் இன்றியமையாதது. எனவே பொருள் படைத்தவர், பொருள் இல்லாதவர் குறைகளை நீக்குமாறு தமது பொருளிலிருந்து தருமஞ் செய்ய வேண்டும். வறுமையினலும் அதன் சார்பாகவும் எழுந் துள்ள பிணி, துயரம் முதலான சகல இடுக்கண்களை யு மொழித்து மக்கட் பிறப்பெய்திய யாவரும் இம்மைப் பயன்களை யநுபவிக்கச் செய்வது அரசாங்கத்தின் மேலும், சனசமூகத்தின் மேலும் விழுந்த கடமையுமாகும்.

“பொருளில்லார்க் கிவ்வுலகமில்லை” என்ற இவ்வுண்மையை நன்காராய்ந்து, பொருளாக்கத்தையும், பொருள் மாற்றுதலையும் பொருள் விபாகத்தையும் நமது தேசத்தில் செவ்வனே திருத்தி யமைத்து, அதன் பலனாக அடையும் பொருளைப் பெற்று இம்மைப் பயன்கள் யாவையும் அநுபவிக்க நாம் முயலவேண்டும்.